# சித்த மருத்துவ
# மகப்பேற்றியலும் மகளிர் மருத்துவமும்

(பரராசசேகரம் கெர்ப்பரோக நிதானத்தைத்
தழுவி எழுதப்பட்டது)

**Dr. சே. சிவசண்முகராஜா M. D. (S)**

உ

# சித்த மருத்துவ
# மகப்பேற்றியலும் மகளிர் மருத்துவமும்

(பரராசசேகரம் கெர்ப்பரோக நிதானத்தைத்
தழுவி எழுதப்பட்டுள்ளது)


**சித்த மருத்துவ கலாநிதி சே.சிவசண்முகராஜா**

B.S. M.S. (1st Class Hons ) (Sri Lanka), M.D.(Siddha Pediatrics) - (India)

சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



வெளியீடு

**சித்தமருத்துவ வளர்ச்சிக் கழகம்**

*199/1, கில்னர் லேன், யாழ்ப்பாணம்.*

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | :- | சித்த மருத்துவ மகப்பேற்றியலும் மகளிர் மருத்துவமும். |
| நூலாசிரியர் | :- | Dr. சே. சிவசண்முகராஜா<br>*B. S. M. S (Hons) (S.L), M. D (India)* |
| வெளியீடு | :- | சித்தமருத்துவ வளர்ச்சிக்கழகம்<br>199/1, கில்னர் லேன், யாழ்ப்பாணம்.<br>தொலைபேசி: 021 222 8320 |
| முதற்பதிப்பு | :- | ஆவணி, 2007 |
| பதிப்புரிமை | :- | நூலாசிரியருக்கு |
| பக்கம் | :- | 10+212 |
| கணினிப்பதிப்பு | :- | பாரதி பதிப்பகம்<br>430, காங்கேசந்துறை வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>தொலைபேசி: 021 222 3081 |
| விலை | :- | ரூபா: 350/= |


# என்னுரை

சித்த மருத்துவத்தில் மகளிர் மருத்துவம், மகப்பேற்றியல் பற்றிக் கூறப்பட்டுள்ளதா? என்ற கேள்வி பலருக்குள்ளது. எனக்கும் இருந்தது. எமது முன்னோரிற் பலர் பதினாறும் (பிள்ளைகள்) பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்துள்ளார்கள் எனின் மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவம் சிறந்து விளங்கியிருக்க வேண்டுமல்லவா? (பதினாறு என்பதற்கு வேறு கருத்தும் உண்டு) அதுமட்டுமன்றி அவர்களிற் பலரின் ஆயுட்காலமும் 80 வயதுக்கு மேற்பட்டதாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை கருச்சிதைவுகளும், பிரசவ சமயத்தில் தாய்மாரின் இறப்புக்களும் நிகழ்ந்துள்ளன என்பதும் உண்மையே. எனவே, நான் மகளிர் மற்றும் மகப்பேற்று மருத்துவம் பற்றிச் சித்தமருத்துவ நூல்கள் என்ன கூறுகின்றன என்று ஆராய முற்பட்டேன். அதே நேரம் எமது மக்களின் பாரம்பரிய கலாசாரப் பழக்க வழக்கங்களில் இது தொடர்பான நடைமுறைகள் பற்றியும் ஆராய்ந்தேன். அதன் பயனாக ஆச்சரியப்படவைக்கும் பல தகவல்கள் எனக்குக் கிடைத்தன. முக்கியமாக, பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்ட பரராசசேகரம் கெர்ப்ப ரோக நிதானத்திலிருந்து பல அரிய தகவல்களைப் பெறக் கூடியதாக உள்ளது.

பிரசவ காலத்தில் எழும் பிரச்சினைகளை பிரசவத்துக்கு முன்னரான பிரச்சினைகள் (Problems during pregnancy - Antenatal care), பிரசவத்தின் போது ஏற்படும் சிக்கல்கள் (Problems during delivery - Natal care), பிரசவத்தின் பின்னர் ஏற்படும் பிரச்சினைகள் (Problems dering puerperal period - Postnatal care) என்பன பற்றி பரராசசேகரம் கெர்ப்பரோக நிதானத்தில் மிகவும் நுட்பமாகக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

நோய் நிதானம் என்பது குரு (வைத்தியர்) வுடன் உடனிருந்து அனுபவத்தில் பெறப்படவேண்டிய ஒன்றாகும் என்பது முற்கால வழக்கு (தற்காலத்தில் கூட எத்தனையோ நூல்கள் கைவசமிருப்பினும் Clinics, Wards என்பவற்றில் பல்லாண்டு பயிற்சி பெற்ற பின்னரே நோய் நிதானிக்கும் ஆற்றல் ஒரு வைத்திய மாணவனுக்குக் கிடைக்கிறது) எனவே, நோய்களைப் பற்றிய குறிப்புகள் (குறி, குணங்கள்) அக்கால நூல்களில் மிகக் குறைந்தளவிலேயே இடம் பெற்றுள்ளன. பல சந்தர்ப்பங்களில் நோய்களின் பெயர்கள் மட்டும் குறிப்பிடப்பட்டு அவற்றுக்கான சிகிச்சைகள் பற்றி விரிவாகக் கூறப்பட்டிருப்பதையுங் காணக்கூடியதாக உள்ளது.

பெரும்பாலான நோய்கள் அன்றும்சரி இன்றும் சரி, ஒரே விதமான முக்கிய குறிகுணங்களையே கொண்டிருக்கின்றன. இனியும் அவ்விதமே இருக்கும்.



எனவே எந்தமருத்துவமாயினும் சரி நோய் (அல்லது அதற்குரிய நோயாளி) ஒன்றே. ஆனால் ஒவ்வொரு மருத்துவமும் அதை வேறுபட்ட பெயர்களால் அழைக்கின்றன (சில நோய்கள் சம்பந்தமாக மாறுபாடான கருத்துக்கள் பல்வேறுபட்ட மருத்துவங்களிடையே உண்டு). இன்றைய உலகில் நவீன மருத்துவம் எனப்படும் ஆங்கில மருத்துவம் முதன்மை பெற்று விளங்குகிறது. எனவே, சுதேச மருத்துவங்களிற் கூறப்பட்டுள்ள நோய்களைப்பற்றி ஆங்கில மருத்துவங் கூறும் நோய்களுடன் ஒப்பு நோக்கல் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அவ்விதம் சரியான ஒப்பீட்டு முறையை ஏற்படுத்திக் கொள்ளுமிடத்து, நவீன தொழில் நுட்ப, ஆய்வு கூட வசதிகளைப் பயன்படுத்தி நோய் நிதானத்தை இலகுவில் செய்து கொள்ளும் வாய்ப்பு சுதேசமருத்துவர்களுக்கும் கிடைக்கும். அதன் பயனாகத் தமது மருத்துவ முறையையொட்டி அதற்கான சிகிச்சையை வழங்கவும், அவ்விதம் செய்ய இயலாதவிடத்து விரைவிலேயே நோயாளியை உரிய நிபுணத்துவ சேவையைப் பெறுவதற்கு அனுப்பி வைப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

இவ்விடத்தில் இன்னொரு விடயத்தையும் கவனத்திற் கொள்ளல் அவசியமாகும். அதாவது நோய் என்பது எல்லா மருத்துவத்துக்கும் பொதுவாக இருக்கின்ற போதிலும் சிகிச்சை முறைகள் மருத்துவத்துக்கு மருத்துவம் வேறுபடுகின்றன. அவற்றையும் நவீன மருத்துவத்துடன் ஒப்பிட முற்படின் குழப்பங்களே மிஞ்சும். பல நோய்களுக்குச் சிகிச்சையளிப்

பதில் நவீன மருத்துவம் சிறந்து விளங்குகிறது. அதே வேளை சில நோய்களுக்கு நவீன மருத்துவத்திலும் பார்க்க சுதேச மருத்துவ சிகிச்சை முறைகள் சிறந்தனவாக உள்ளன.

மேலும், பெரும்பாலான சுதேசமருத்துவ மருந்துகள் குறைந்தளவிலேயே பக்க விளைவுகளைக் கொண்டுள்ளன. சுதேசமருந்துகளை எத்தகைய சந்தர்ப்பத்தில் எவ்வித அனுபானத்தில், எந்த அளவில் கொடுக்க வேண்டும் என்பது அத்துறை சார்ந்த மருத்துவரின் அனுபவம், அறிவு என்பவற்றைப் பொறுத்துள்ளது. புத்தகத்தை மட்டும் பார்த்து வைத்தியம் செய்வது தகுந்த பலனைக் கொடுக்கமாட்டாது. சுதேச வைத்தியம் தற்காலத்தில் தவறுவது (சிகிச்சை பிழைப்பது) இக்காரணத்தினாலேயாகும். இந்நூலில் சில மருந்துகளின் பெயர்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றின் விபரம் பரராசசேகரம் கெர்ப்ப ரோகநிதானத்தில் கண்டு கொள்ளவும்.

தற்காலத்தில் ஆங்கில மருத்துவத்தில் மகப்பேற்றியல்துறை நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. எனினும் சில சாதாரண நோய்கள், உணவுமுறை, பிரசவத்துக்கு முன், பின்னான பராமரிப்பு முறைகளில் சித்தமருத்துவத்தைப் பின்பற்றும் தமிழ்மக்கள் பலர் இருக்கின்றார்கள். அதுமட்டுமன்றி மகளிர் நோய்கள் சம்பந்தமாக குறிப்பாக வெள்ளை சாய்தல், பெரும்பாடு, குழந்தைப்பேறின்மை, சூதகவலி போன்ற நிலைமைகளுக்குப் பெரும்பாலோர் சுதேச மருத்துவர்களையே நாடிவருகின்றார்கள்.



இந்நூல் பெருமளவில் பரராசசேகரம் கெர்ப்ப ரோக நிதானத்தைப் பின்பற்றியே அதிலுள்ள ஒழுங்கு முறையின்படி எழுதப்பட்டுள்ளது. கருஉற்பத்தி (பரராசசேகரம் அங்காதிபாதம்), கர்ப்பநாடி (வைத்தியன் சஞ்சிகை), கெர்ப்ப மகோதரம் (செகராசசேகரம்), புற்றுநோய்வகை (வைத்தியன் சஞ்சிகை, சித்த மருத்துவ சிகிச்சைக் கிரமம்), பெண்களின் உணவு (யாழ்ப்பாண மக்களின் சைவ உணவுப்பழக்க வழக்கங்கள்) என்பவற்றிலிருந்து தேவை கருதிச் சேர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் இந்நூலாக்கத்துக்கு உதவிய தமிழ், ஆங்கில மருத்துவ நூல்களின் பட்டியல் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நூல் பல்கலைக்கழக இறுதியாண்டுச் சித்த மருத்துவ மாணவர்களுக்கும், சித்தமருத்துவர்களுக்கும் மற்றும் இத் துறையில் ஆர்வமுடையவர்களுக்கும் பயன்படும் என்று நம்புகிறேன்.

சித்தரின் அருளும் ஆசியும் இல்லாமல் இந்நூல் உருவாகியிருக்க முடியாது. அவர்கள் தாள்பணிந்து இந் நூலை உங்கள் கரங்களிற் சமர்ப்பிக்கின்றேன்.

கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

சே. சிவசண்முகராஜா

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| * | மகளிர் நோய் வரலாற்றுப் பதிவேடு | 01 |
| 1. | சென்ம வுற்பத்தி (கருவுற்பத்தி) | 08 |
| | 1.01 கருஉற்பத்தியும் வளர்ச்சியும் | 09 |
| 2. | கர்ப்ப நாடி | 14 |
| | 2.01 நாடிமூலம் ஆண் பெண் கர்ப்பத்தை அறிதல் | 14 |
| | 2.02 கெர்ப்பமில்லாத நாடிக்குறி | 15 |
| | 2.03 கெர்ப்ப வாயுவின் நாடி | 15 |
| 3. | கெர்ப்பரோக நிதானம் | 16 |
| | 3.01 பெண்களின் பருவம் | 18 |
| | 3.02 கெர்ப்பரோகங்கள் | 19 |
| | 3.03 சுரோணித கெர்ப்பவாயு | 21 |
| | 3.04 சுரத்தின் மேல் கெர்ப்பரோகம் | 26 |
| | 3.05 கெர்ப்பசூலை | 29 |
| | 3.06 இரத்தசூலை | 33 |
| | 3.07 நிதம்பசூலை | 37 |
| | 3.08 கெர்ப்பவாயு | 42 |
| | 3.09 கெர்ப்பக்கிருமி | 56 |
| | 3.10 கெர்ப்பவிற்புருதி | 59 |
| | 3.11 கெர்ப்பப் புணர்ச்சி | 64 |
| | 3.12 கெர்ப்பவஞ்சனை | 65 |
| | 3.13 கெர்ப்ப மருத்தீடு | 66 |
| 4. | பெரும்பாடு | 68 |
| | 4.01 துவாலை | 76 |
| 5. | மலட்டுரோகம் | 78 |
| | 5.01 மலட்டின் காரணம் | 80 |
| | 5.02 அறுவகை மலடு | 84 |
| | 5.03 ஐவகை மலடு | 85 |
| 6. | கருச்சிதைவு | 87 |
| 7. | கெர்ப்பசூலம் | 92 |
| | 7.01 கெர்ப்பசூலம் – வேறு | 95 |
| | 7.02 கெர்ப்பசூலம் – வேறு | 98 |
| 8. | காயாசுவாதம் | 101 |
| 9. | கெர்ப்பரோக மகோதரம் | 105 |
| | 9.01 கெர்ப்பநீராமை | 106 |
| | 9.02 நிதம்ப நீராமை | 107 |
| 10. | அபான வாயு | 109 |
| 11. | குதிரைவலி | 111 |
| | 11.01 மந்தவலி | 118 |
| 12. | கருங்கிரந்தி | 123 |

13. சூதிகாவாயு 128

14. வெள்ளை சாய்தல் 131

14.1 எலும்புருக்கி 131

15. கர்ப்பகாலத்தில் ஏற்படக்கூடிய சிலபொதுவான நோய்கள் 134

16. பிரசவம் 142

17. பிரசவத்தின் பின்னான பிரச்சினைகள் 147

18. முலைப்புற்றுநோய் 170

19. பெண்களின் உணவு 175

உதவிய நூல்கள்


## * மகளிர் நோய் வரலாற்றுப் பதிவேடு
## GYNAECOLOGICAL CASE SHEET

### 1. பொதுவான விபரங்கள் (General datas)

*1.01* *பெயர்* (Name)

*1.02* *வயது* (Age)

*1.03* *முகவரி* (Address)

*1.04* *நாடு* (Country)

*1.05* *இனம்* (Race)

*1.06* *சமயம்* (Religion)

*1.07* *தொழில்* (Occupation)

*1.08* *திருமண நிலை* (Marital status)

*1.09* *பரிசோதித்த திகதி* (Date of Examination)

### 2. பிரச்சினையும் கால அளவும் (Chief Complaint and duration)

*நோயாளியின் முக்கிய பிரச்சினையும் அதனால் அவர் எவ்வளவு காலமாக வருந்துகிறார் என்ற விபரமும்.*

### 3. நோயின் தற்போதைய வரலாறு (History of present illness)

*நோயாளி எவ்வளவு காலம் ஆரோக்கியமாக இருந்தார்? மேற்குறிப்பிட்ட பிரச்சினை எப்போது, எப்படி ஆரம்பித்தது? அதனுடன்*

தொடர்புடைய வேறு பிரச்சினைகள். நோய் ஆரம்பத்திலிருந்து தற்போது அதிகரித்துக் கொண்டு வருகிறதா/ (Progressive), குறைந்துள்ளதா? (Regressive), அப்படியே இருக்கிறதா? (Static) என்பன போன்ற விபரங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

**4. நோயின் முந்தைய வரலாறு**
**(Past History)**

இது போன்ற பிரச்சினைகள் / நோய் முன்பும் ஏற்பட்டதா? அப்படியாயின் அது பற்றிய விபரம். மேலும் இதனுடன் தொடர்பான வேறு நோய்கள் ஏற்பட்டனவா? அவை பற்றிய விபரங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

**5. மாதவிடாய் வரலாறு**
**(Menstrual History)**

முதற்பூப்பு ஏற்பட்ட வயது. மாத விடாய்கள் ஒழுங்கானவையா அல்லது ஒழுங்கற்றவையா? மாதவிடாய்க் கால நாட்கள். மாதவிடாய்ச் சக்கரத்தின் நீட்சிக்காலம் (ஒரு மாதவிடாயின் முதலாம் நாளிலிருந்து அடுத்த மாதவிடாய் முதலாம் நாள் வரைக்கும்). கடைசி மாதவிடாயின் முதலாம் நாள் குருதியிழப்பில் மாற்றங்கள் உண்டா? கட்டிகள் போகின்றனவா? மாதவிடாயுடன் நோவுண்டா? வெள்ளை படுதலுண்டா? மாதவிடாய் நின்று போனவர்களில் அதுபற்றிய விபரங்கள் மாதவிடாய்ச் சக்கரத்தின் இடைநாட்களில் துவாலை காணின் அதன் அளவு, நிறம், தன்மை முதலியன.



**6. கர்ப்ப கால வரலாறு**
**(Obstetric History)**

மகப்பேறுகளின் எண்ணிக்கை. குழந்தைகளின் வயதுகளும் உடல் நிறையும். கர்ப்ப காலத்தில் அல்லது பிரசவத்தின் போது அல்லது பிரசவத்தின் பின் சிக்கல்கள் ஏதும் ஏற்பட்டனவா? கருச்சிதைவுகள், குறைமாதப் பேறுகள் நிகழ்ந்தனவா? எம்மாதங்களில் நிகழ்ந்தன? அவற்றுக்கான காரணங்கள் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

**7. கருத்தடைமுறைகள் பற்றிய வரலாறு:-**
**(Contraceptive History)**

கருத்தடைமுறைகள் பின்பற்றியிருந்தால் அது பற்றிய விபரம். அவற்றால் ஏதும் பிரச்சினைகள் ஏற்பட்டனவா?

**8. குடும்ப வரலாறு**
**(Family History)**

திருமணமான வயது. குழந்தைகளின் எண்ணிக்கை. குடும்ப அங்கத்தினர் அல்லது உறவினர் குறிப்பாக சகோதரர், தாய் முதலியோருக்கு இது போன்ற நோய் ஏற்பட்ட வரலாறு உண்டா? விபரம்.

**9. உணவு வரலாறு**
**(Dietetic history)**

சைவ உணவா? அசைவ உணவா?

**10. பழக்கவழக்கங்கள்**
**(Habits)**

புகைத்தல், மதுபானம், வெற்றிலை, புகையிலை, போதைமருந்துப் பழக்கம் உள்ளவரா?

**11. தொழில் வரலாறு**
**(occupational history)**

தொழில், மாத வருமானம்

**12. நிலம் (Land)**

ஐவகை நிலங்களில் எதில் வசிக்கிறார்?

**13. பருவகாலம் (Season)**

நோய் ஏற்பட்ட காலம் பற்றிய விபரம்

**பொதுப்பரிசோதனை (General Examination)**

1 சுய நினைவு (Consciousness)
2. போசாக்கு நிலை (Nourishment)
3. குருதிச் சோகை (Pallor)
4. நீலம் பாரித்தல் (Cyanosis)
5. நிணநீர்க்கணுவீக்கம் (Lymphadenopathy)
6. கழுத்துக்கழலை (Goitre)
7. மார்பகம் (Breast)
8. கால்வீக்கம் (Oedema)
9. உடல் வெப்பநிலை (Temperature)



10. நாடித்துடிப்பு வீதம் (Pulse Rate)
11. இரத்த அழுத்தம் (B.P)
12. வேறு குறிப்புகள்
13. இரத்தாசயப் பரிசோதனை (C.V.S)
14. சுவாசாசயப் பரிசோதனை (R.S)
15. நரம்பு மண்டலப் பரிசோதனை (C.N.S)
16. சீரண மண்டலப் பரிசோதனை (G.I.T)
17. சிறுநீர் சனனத் தொகுதிப் பரிசோதனை (Urogenital system)

**சித்தமருத்துவ முறை (Siddha Aspects)**

**18. ஞானேந்திரியங்கள்**
தோல் -
வாய் -
மூக்கு -
கண் -
செவி -

**19. கன்மேந்திரியங்கள்**
கை -
கால் -
வாய் -
குதம் -
குறி -

**20. உயிர்த்தாதுக்களின் பாதிப்பு**
1. வாதம் -
பிராணன் -
அபானன் -
வியானன் -
உதானன் -
சமானன் -

2. **பித்தம்** -

அனலம் -

இரஞ்சகம் -

சாதகம் -

பிராசகம் -

ஆலோசகம் -

3. **கபம்**

அவலம்பகம் -

கிலேதகம் -

போதகம் -

தற்பகம் -

சந்திகம் -

**21. உடல் தாதுக்கள்**

இரசம் -

குருதி -

ஊன் -

கொழுப்பு -

என்பு

மூளை -

விந்து / நாதம்

**22. எண்வகைத் தேர்வு**

நாக்கு -

நிறம் -

மொழி -

விழி -

ஸ்பரிசம் -

மலம் -

மூத்திரம் -

நாடி -



**23. நீர்க்குறி**

நிறம் -

எடை -

மணம் -

நுரை -

எஞ்சல் -

**24. நெய்க்குறி -**

**26. மலம்**

நிறம் -

நுரை -

இறுகல் -

இளகல் -

**27. ஆய்வு கூடப் பரிசோதனை விபரங்கள் (ஏதும் இருப்பின்)**

**28. நோய்க்குறிகுணங்களின் தொகுப்பு**

**29. நோய்க்கணிப்பு விவாதம்**

**30. நோய்க் கணிப்பு**

**31. சிகிச்சையும் அறிவுரைகளும்.**

# 1. சென்மவுற்பத்தி (கருவுற்பத்தி)

## (பரராசசேகரம் அங்காதிபாதம்)

## (Development of the Ovum and Foetus)

................. தீதிலா மாந்தர் சென்மவுற்பத்தி செப்பக் கேண்மின்
தாதையுந் தாயுங் கூடித் தழுவிய யோகந் தன்னில்
ஆதியாம் விந்திறங்கிச் சுரோணிதத் தடங்குமன்றே
1.

அடங்குமவ் விரண்டுங் கூடி யுருவமா மதனுட் புக்கு
மிடைந்திடு பிராண வாய்வு மேற்றமாந்தானே மூடித்
திடம்பெறு விந்துதன்னை வளர்விக்கு முதானன் சேர்ந்து
கடம்படு கருவைக் காக்கும் பான்மைய காவல் சூழும். 2.

காவல்சூ ழபான வாயு கருதிய வேலிபோல
மேவியே சூழ்ந்து நிற்கும் விளம்பிய பிராணன்றானும்
தேவன தருளினாலே சிறந்துளே கலந்து வாழும்
பாவையே யஞ்சா நாளிற் பக்குவக் கருவாய்த் தோன்றும்.
3.

தோன்றுமே பத்தாநாளிற் சொல்லுமோர் கட்டியாகத்
தான்றிரண் டிருக்கு நாளோர் பதினைந்திற் சாற்றுமுட்டை
போன்றிடு மொருமாதத்திற் பொருந்திய சென்னியுண்டாம்
ஏன்றிடு மதியிரண்டிற் பிடரிதோண் முதுகெய்தும் 4.

எய்திடு மூன்றாம் திங்க ளியல்விலாத் தொடைகால்கையும்
மைதவிர் நான்காந் திங்கள் வயங்கிடும் வதனமுண்டாம்
செய்யநற் றிங்களைந்திற் செவிநாசி வாயுமுண்டாம்
பெய்மல சலத்து வாரம் பெரிதுண்டாந் திங்களாறில் 5.



திங்களங்கேழு தன்னிற் செறிமயிர் நரம்பு நாடி
தங்கிய தொப்புழ் சந்து சரமொடு குடருமுண்டாம்
பங்குறுந் திங்களெட்டிற் பலமிக வுண்டாய் மண்டை
யங்கதின் மயிருமுண்டா யன்னையுண்டிட்டசாரம் 6.

சாரமங்குள்ளே செல்லத் தான்றொப் புழ்வழியுமுண்டாம்
நேரு மொன்பது மாதத்தினிறை யறிவுணர்ச்சி பெற்றுப்
பாருறு கருப்பந் தன்னிற் பரிந்திடு பரிவுமுண்டாய்க்
காருறு கண்டன் றன்னைக் கருதிய நிலையதாகி 7.

நிலையதாம் பொருளாயெங்கு நிறைந்த பூரணமாயார்க்கும்
தலையதா யமல மாகிச் சராசரப் பொருளாய் நின்ற
தொலைவிலாச் சோதி வாழ்வே தோகை பங்காளாவென்றே.
உலைவிலா விருகை கூப்பி யுன்பதந் தருவாயென்றும்.
8.

என்னவே பத்தாந் திங்களீசனார் கருணையாலே
சென்னிதான் கீழதாகச் சிறந்திடு மபானவாயு
துன்னியே யுதைத்துத் தள்ள தொல்லையுணர்ச்சி நீங்கி
மன்னிய பாரின் மீதே மதலை வந்துதிப்பதாமே. 9.

## 1.1 கரு உற்பத்தியும் வளர்ச்சியும்

*விந்து, சுரோணிதச் சேர்க்கையால் கரு உண்டாதல் பற்றியும், அது ஒவ்வொரு மாதமும் எவ்விதம் வளர்ச்சியடைந்து பூரண குழந்தை வடிவம் பெறுகிறது என்பது பற்றியும் பரராசசேகரம் அங்காதி பாதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்கால மருத்துவ நூல்கள்*

கூறும் Foetal Development உடன் ஒப்பிடும் போது அவற்றுட் பெரும் ஒற்றுமை காணப்படுவது குறிப் பிடத்தக்கது. சில முக்கிய வேறுபாடுகள் (உ - ம் தொப்பூள் கொடி 7ஆம் மாதம் தோன்றும் என்பது) காணப்பட்டாலும் தற்காலத்தைப் போன்று விஞ்ஞா னத் தொழில்நுட்பம், நவீனகருவிகள் முதலியன இல்லாத ஒரு காலத்தில் கரு உற்பத்தி பற்றிய ஒரு எண்ணக்கரு உருவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் கூறப்பட்டுள்ள கருவளர்ச்சிநிலை பற்றித்தெரிந்துகொண்டால்தான் பரராசசேகரம் கெர்ப் பரோக நிதானத்தில் கூறப்பட்டுள்ள நோய்களைப் பற்றியும் விளங்கிக்கொள்ள முடியும். உதாரணமாக 6ஆம் மாதம் அல்லது 8ஆம் மாதத்தில் குழந்தை பிறந்தால் இறக்கும் என்பது அக்காலக் கருத்தாக இருந்துள்ளது. எனவேதான் 8ஆம் மாதம் வரை ஏற்படுவது கருச்சிதைவு என்ற கருத்தில் கூறிவைத் துள்ளனர்.

| **கரு உற்பத்தியும் வளர்ச்சியும்** | **Foetal Development** |
|---|---|
| 1) விந்தும் சுரோணிதமும் (முட்டை) சேர்தல் | 1. Fusion of ovum and spermatozoa is called fertilization. |
| 2) 5ஆம் நாளிற் கருவாய்த் தோன்றும். | 2. Implantation or embe - - dding of the blasto cyst takes place on the $6^{th}$ or $7^{th}$ day after fertilization. |



| | |
|---|---|
| 3) 10ஆம் நாளிற் கட்டி யாய்த் திரண்டிருக்கும். | 3. The trophoblast diffe - rentiates into syncytio - trophoblast and cytotro- phoblast on the $8^{th}$ day. The successive develop- ments of trophoblastic lacunae trabeculae, utero -placental circulation, primary villi, and inter villous spaces take place between the $9^{th}$ and $13^{th}$ day after ferti - lization. |
| 4) 15 நாளில் கோழி முட்டை போலிருக்கும். (அதாவது வட்டமான கட்டி நீண்டு காணப் படும்) | 4. The flattened germ disc changes in shape from circular to oval and then pear shaped area with a broad cephalic end and a narrow caudal end. |
| 5) ஒரு மாதத்தில் தலை (ப்பகுதி) உண்டாகும். | 5. The fertilized ovum is about the size of a walnut. It is beginning to show the shape of the foetal body with the head end much larger. |

| | |
|---|---|
| 6) இரண்டாம் மாதம் பிடரி, தோள், முதுகு உண்டாகும். | 6. The ovum is about the size of a hen's egg, and showing the characte-risticstics of the future child. Hands and feet are well defined with the sepa - ration of the digits. |
| 7) மூன்றாம் மாதம் தொடை கால், கை என்பன தோன் றும். | 7. The embryo is about the size of an orange and the placenta is distinctly formed. 11.5cm long. Looks like a full term child in manufacture except that the head is proportionately much larger. |
| 8) நாலாம் மாதம் முகம் தெளிவாகத் தெரியும். | 8. Eyes move further forward and medially. External ears shift posi-tion from the upper part of the neck to the side of the head. Lanugo hairs appear over the body surface. |



| | |
|---|---|
| 9) ஐந்தாம் மாதம் செவி, நாசி என்பன தோன்றும் (தெரியும்.) | 9. Skin is covered with vernix caseosa. |
| 10) ஆறாம் மாதம் மல சலத் துவாரம் உண் டாகும். | 10. The eye brows and eye lashes are beginning to form |
| 11) ஏழாம் மாதம் உடம்பில் மயிர் உண்டாகும். * தொப்பூழ், குடல் உண் டாகும். | 11. Growth of hair over the scalp, eye brows and eye lashes is discernable. |
| 12) எட்டாம் மாதம் தலையில் மயிருண்டாகும். தொப்பூழ் வழியாக அன்னையுண்ட உணவின் சாரம் பிள்ளைக்குச் செல்லும். (இது மூன்றாம் மாதம் முதல் ஏற்படும் என்ற தற்காலக் கருத்தே சரி) | 12. There is progressive loss of lanugo hair, except the hairs of scalp, eye brows and eye lids. |
| 13) ஒன்பதாம் மாதம் அறிவுணர்ச்சி பெறும். <br> 14) பத்தாம் மாதம் பிள்ளை பிறக்கும். | A full term foetus presents the umbilicus at the centre of the abdominal wall and the testes in the scrotum. |

# 2. கர்ப்ப நாடி

ஒரு பெண் கர்ப்பமுற்றிருப்பதை அறிந்து கொள்ளவும், கர்ப்பமடைந்து எவ்வளவு காலம் என்று அறிந்து கொள்ளவும் சித்தர்கள் கர்ப்பகாலநாடி நிலை பற்றித் தெளிவாகக் கூறிவைத்துள்ளனர். எனவே, கடைசி மாதவிடாய்வந்த திகதி தெரியாதவர்களின் கர்ப்ப காலத்தை அறிவதற்கும் கர்ப்பநாடி உதவும்.

1. கருவுற்ற நாள் முதலாக வாதநாடி மிகவும் மெதுவாக நடக்கும். அதாவது புழு ஊர்வதுபோல ஊரும்.

"காரிகை தமக்குப்பிள்ளை கருப்பையைப் பற்றி நின்றால்
கூரிய வாதநாடி குண்டலப் புழுப்போலூரும்
வீரிய மூன்றாந்திங்கள் விட்டில் போற்பதைத்து நிற்கும்
பாரிய எட்டாந் திங்கள் பையவே புழுப்போலூரும்"

2. அதாவது மேற்படி வாதநாடி மூன்றாம் மாதத்திலிருந்து படபடப்பாக இருக்கும்.
3. பின்னர் 8 ஆம் மாதத்திலிருந்து மறுபடியும் புழு ஊர்வதுபோல நடக்கும்.

## 2.01 நாடிமூலம் ஆண், பெண் கர்ப்பத்தை அறிதல்.

ஆண் கர்ப்பமாயின் தாயின் இடது கையிலும், பெண் கர்ப்பமாயின் வலது கையிலும் காணப்படும் நாடி முதலில் முதல் விரலில் வேகமாயடித்தும் பின் படிப்படியாக மெதுவாகி வரும். நடுவிரல் நாடி வேகமாயடிக்கும். அச்சமயம் முதல் விரலில் நாடித் துடிப்பு முற்றாய் நின்றுவிடும். நடுவிரல் நாடியும் படிப்படி



யாகக் குறைந்து துடிப்பில்லாது நின்றுவிடும். விஷசுரம், வெள்ளைசாய்தல், சயரோகம் முதலிய நோயுள்ளவர்களில் கணச்சூடு இருப்பின் நடுவிரல் நாடியடித்து முற்றாயடங்கக் கடைவிரல் நாடி வேகப்படுவதையுங் காணலாம். இதனைக் கொண்டு ஆண், பெண் பேதத்தை இலகுவில் அறியலாம். அத்துடன் அவள் கர்ப்பிணியா அல்லது மேற்கூறிய நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளாளா என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

## 2.02 கெர்ப்பமில்லாத நாடிக்குறி

மாதர் கைப்பிடித்தபோது வந்திடும் வாதநாடி
தீதுற வெடித்துப் பாய்ந்து சிதறியே சிலும்பி நின்றால்
பேதைதன் வயிற்றுனுள்ளே பெருகுசோணிதமே தங்கி
வாதைகள் பண்ணி மாதவிடைகாலம் வருத்தம் செய்யும்

அதாவது முதல்விரல் நாடியடித்து ஒடுங்காது நிற்கும்.

மேலும் கர்ப்பிணிகளல்லாதவர்களில் 3, 5, 8 ஆம் மாதங்களில் எவ்வித வித்தியாசமுமின்றி நாடி ஒரே விதமாயிருக்கும்.

## 2.03 கெர்ப்ப வாயுவில் நாடி

கெர்ப்பவாயு அல்லது வேதனையுடன் கூடிய மாதவிடாய் உள்ள பெண்களுக்கு மாத சுகவீனம் இரண்டு, மூன்று மாதங்கள் இடைவிட்டும் வரலாம். அவர்களின் நாடி உள்ளுற அமர்ந்து மறைந்தது போலிருந்தாலும் மென்மையாய்த் துரிதமாயடித்துக் கொண்டிருக்கும்.

'மாதர் கைப்பிடித்தபோது வந்திடும் நாடிமூன்றும்
சேதமாய் இற்று நின்று சேரவே பதிந்து நிற்கில்
ஓதருஞ் சூதகத்திலோங்கிய வாய்வே நின்று
பேதமாய் வாதை பண்ணிப் பிணிகளை விளைக்குந் தானே"

# ௩. கெர்ப்பரோக நிதானம்

திருவுறு கைலை மீதிற் றேவியோர் பாக னந்தான்
உருவுறு முயிர்கட் காக வோதிடு மாயுள் வேதத்
தருவுறு வினையி னாலே யாகிய நோய்க டம்முள்
தெரிவையர் கர்ப்ப நோயுந் தீர்த்திடு மருந்துஞ்சொல்வாம்.

திருக்கைலாசமலையிலே எழுந்தருளியிருக்கின்ற மாதொருபாகனான சிவபெருமான் இப்பூமிலுள்ள உயிர்களுக்காக இயம்பிய ஆயுள்வேதத்தில் வினையினாலே உண்டாகின்ற நோய்களிலே பெண்களுக் குண்டாகும் கெர்ப்பாசய நோய்களையும் அவை களைத் தீர்க்கும் மருந்துகளையும் சொல்லுவோம்.

**குறிப்பு:-**

கெர்ப்பரோகம் என்பது கர்ப்பாசயம் அல்லது கருக் குழியைப் பற்றிய நோய்கள் என்று பொருள்படும். அதாவது பெண்களின் ஜனனேந்திரியங்களைப் பற்றிய நோய்களாகும். இதனையே கெர்ப்பக்கோள் என்றுங் கூறுவர்.

இங்கு தெரிவையர் என்று கூறப்பட்டுள்ளதால் 35 வயதுக்குட்பட்ட பெண்களில் ஏற்படும் கர்ப்பாசய நோய்கள் என்று கருத இடமுண்டு. பாலர்க்கு ஏற்படும் நோய்களை பாலர் ரோக நிதானத்தில் கூறப்பட் டுள்ளது. பாலர் பருவம் என்பது 12 வயதுக்குட்பட்ட காலமாகும். எனவே 12 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பெண்களுக்கு ஏற்படக் கூடிய நோய்களையே கெர்ப்பரோக நிதானத்தில்



முக்கியமாகக் கூறப்பட்டுள்ளது போலும். ஒரு பெண் கருத்தரிப்பதற்கு உகந்த வயதும் இக்காலப் பகுதி யிலே அடங்குவதால் கெர்ப்பரோக நிதானம் என்று வகுத்துள்ளனர் போலும்.

கெர்ப்பரோகம் என்னும்போது கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் நோய்கள் மட்டும் என்று இங்கு பொருள் கொள்வது தவறாகும். இப்பிரிவில் ஒரு பெண் கருத்தரித்த காலத்து ஏற்படும் நோய்கள் மட்டும் எடுத்துக் கூறப்படவில்லை.

பின்வரும் நோய்கள் பற்றியும் இந்நூலில் (பரராசசேகரம் கெர்ப்ப ரோகநிதானத்தில்) மிகவும் நுணுக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

1) மலட்டுத்தன்மை

2) பெரும்பாடு (இது சாதாரண பெண்களுக்கு வருவது)

3) வெள்ளைசாய்தல் (இது சாதாரண பெண்க ளுக்கு வருவது)

4) கர்ப்பமேகம் (வெள்ளைசாய்தல்)

5) கருச்சிதைவும் தடுப்பு முறைகளும்

6) கர்ப்பகாலத்தில் ஏற்படும் சிறுநோய்களும் அவற் றுக்கான சிகிச்சைகளும்.

7) காயாசுவாதமும் சுவாதகாசமும்

8) கிரந்தி

9) குதிரைவலிப்பு

10) பிரசவம்

11) கருப்பையில் இறந்தகுழந்தையை வெளியாக்கல்.

12) நஞ்சு வெளியாக்கல்

13) பிரசவத்துக்குப் பின்னர் ஏற்படும் பிரச்சினைகளும் பராமரிப்பும்

## 3.01 பெண்களின் பருவம்

| வயது | பருவம் |
|---|---|
| 1 - 5 வயது வரை | பேதை |
| 5 -10 வயது வரை | பெதும்மை |
| 10 -16 வயது வரை | மங்கை |
| 16 -25 வயது வரை | மடந்தை |
| 25-30 வயது வரை | அரிவை |
| 30-35 வயது வரை | தெரிவை |
| 35-45 வயது வரை | பேரிளம் பெண் |
| 45-60 வயது வரை | மூதாட்டி |
| 60 வயதுக்கு மேல் | கிழவி |



## 3.02 கெர்ப்ப ரோகங்கள்

திருவனையா ருதரமதிற் கெர்ப்ப ரோகஞ்
செப்பினரோன் பதுபேதஞ் செய்ய சோரி
மருவுசுரஞ் சூலைமிகு வாயு மேலும்
வருத்துபுழு விற்புருதி வான்பு ணர்ச்சி
கருவிலுறு வஞ்சனையு மருத்தி னீடுங்
கழறினரிங் கிவற்றுளைந்தும் தீரு மென்று
பொருவரிய தமிழ் முனிவ னன்று ரைத்த
பொருளாராய்ந் தறிதல்கடன் புலமை யோர்க்கே. 1.

பெண்களின் கருப்பாசயம் பற்றியுண்டாகும் நோய்கள் ஒன்பதாம். அவையாவன 1) சுரோணித கெர்ப்பவாயு 2) கெர்ப்பசுரம் 3) கெர்ப்பசூலை 4) கெர்ப்ப வாயு 5) கெர்ப்பப்புழு 6) கெர்ப்ப விற்புருதி 7) கெர்ப்ப வஞ்சனை 8) கெர்ப்பப்புணர்ச்சி 9) கெர்ப்ப மருத்தீடு என்பனவாம். இவற்றுள் ஐந்து சாத்தியரோகங்களாம்.

**குறிப்பு:**

கெர்ப்பசுரம்:- இதனை ஐ. பொன்னையா சுரத்தின்மேல் கெர்ப்பரோகம் என்று கூறியுள்ளார். அதாவது சுரமிகுதியாலுண்டாகும் கெர்ப்பரோகம் என்று பொருள்படும். சிலர் இதனைச் சூதகசன்னி என்றுங் கூறுவர். (சூதகசன்னியும், பிரசவ சன்னியும் வெவ்வேறானவை என்பதை நினைவிற் கொள்க.)

குறிப்பு:

சந்தான ரத்தினம் என்னும் நூலில் எட்டுவிதமான கர்ப்பரோகங்கள் கூறப்பட்டுள்ளன. அவையாவன:
1) சூதகசன்னி 2) நிதம்ப சூலை 3) சூதகவாயு (சூதகவலி, சூதகக் கட்டு) 4) கர்ப்பவிற்புருதி 5) இரத்த சூலை 6) இரத்தசிராவம் (பெரும்பாடு) 7) கர்ப்பக்ஷயம் 8) கர்ப்பவேதனை என்பனவாம்.

"வஞ்சிக் கொடியா ருதரமதின் மருவுங் கெர்ப்ப ரோகமது
மிஞ்சுஞ் சுரோணி சுரஞ்சூரை மிகுந்த வாயு கிருமியொடு
செஞ்சொன் மடவீர் விற்புருதி சேரும் புணர்ச்சி வஞ்சனையோ
டொஞ்சு மருத்தீ டொன்பதினா லுறுமே கெர்ப்ப ரோகமதே." 2.

கெர்ப்பரோகமானது 1) கெர்ப்பசுரோணி 2) கெர்ப்பசுரம் 3) கெ...சூலை 4) கெர்ப்பவாயு 5) கெர்ப்பக்கிருமி 6) கெர்ப்பவிற்புருதி 7) கெர்ப்ப... புணர்ச்சி 8) கெர்ப்ப வஞ்சனை 9) கெர்ப்பமருத்தீடு என ஒன்பது வகைப்படும்.

"இரத்த ரோக மத்திசுரத் தெடுத்த நோவு சூலையினம்
உரத்த வாயுத் திரட்சியோ டுறையுங் கிருமி விற்புருதி
வருத்தும் புணர்ச்சி வஞ்சனையு மருத்தனீடு மொன்பதனுள்
திருத்த மாக முன்னான்குந் தீரா தைந்துந் தீருமன்றே." 3.

1) சுரோணிதகெர்ப்பவாயு 2) கெர்ப்பசுரம் 3) கெர்ப்ப சூலை 4) கெர்ப்பவாயு 5) கெர்ப்பக்கிருமி 6) கெர்ப்ப விற்புருதி 7) கெர்ப்பப்புணர்ச்சி 8) கெர்ப்ப வஞ்சனை 9) கெர்ப்பமருத்தீடு என்னும் ஒன்பதுள் முதலிற் கூறப்பட்ட 1) சுரோணித கெர்ப்பவாயு 2) கெர்ப்பசுரம் 3) கெர்ப்ப சூலை 4) கெர்ப்பவாயு என்பன தீராது. (மாறாது) ஏனைய ஐந்தும் தீரும் ரோகங்களாம்.



## 3.03 சுரோணித கெர்ப்பவாயு

சுரோணிதம் - இரத்தம். கெர்ப்பவாயு - கர்ப்பாசயத்தில் வாயுவுண்டாகி வேதனையைக் கொடுப்பதுமான நிலையையும் குறிக்கும்

திரண்டு புரண்டு கீழ்வயிற்றிற் றிதமாய் மாதவிடாய்போலும்
மருண்டு குருதி மிகுந்துவரும் வாய்நீர் பெருத்து மயங்கிவரும்
அருண்டு சிலநாள் விட்டுநிற்கும் அழிக்குங் கருவை
யரைதுடைநோம்
உருண்ட விரத்த ரோகமென வுறுதி யதுகண் டுணர்வீரே 1.

உந்திக்கீ முதரம் புக்கி யுலமென விருக்கு மோடிச்
சந்துகள் விருவி ருத்துத் தானுடல் நடுங்கி யெங்கும்
மந்தமா யுடம்பு முற்றி மறுகியுட் சத்தி தோன்றி
இந்தமா குணங்கள் கண்டா லிதுகொப்ப சுரோணி யென்னே. 2.

பாடலின் கருத்து:

அடிவயிற்றில் திரண்டு, புரண்டு மாதவிடாய் போல குருதி மிகுந்துவரும். வாயில் நீரூறும். பிறகு சில நாள் விட்டு நிற்கும். கருவை அழிக்கும். அதாவது கருப்பை யிலுள்ள சிசுவை அழிக்கும் (கரு, பிண்டம், என்பன foetus ஐக் குறிக்கப் பயன் படுத்தப்படும் சொற்களாகும்). அரை துடைநோகும்.

நாபிக்குக் கீழாக வயிறு பொருமி, கல்லுப் போல இருக்கும். சந்துகளில் வாயு ஓடி விருவிருக்கச் செய்யும். உடல் நடுங்கும். மந்தமாக உடம்பு காயும். சத்தியும் ஏற்படும்.

**குறிப்புரை**

இந்நிலை Accidental Haemorrhage (Abruptio placenta) இல் Revealed accidental haemorrhage உடன் ஒத்திருப்பதைக் காண முடிகிறது.

கர்ப்பிணிக்கு யோனிவழி குருதியிழப்பு ஏற்படுவ தாலேயே (அதாவது மாதவிடாய் கர்ப்பம் காரணமாக நின்ற காலத்தில் வருவதாலேயே) மாதவிடைபோலும் குருதிவரும் என்று பாடலில் கூறப்பட்டுள்ளது. என்பதைக் கவனிக்க.

| சுரோணித கெர்ப்பவாயு | Revealed Accidental Haemorrhage |
|---|---|
| 1. அடிவயிற்றில் திரண்டு புரண்டு வலித்தல் | 1. Abdominal pain + |
| 2. மாதவிடாய்போலகுருதி மிகுந்துவருதல் | 2. Blood escape from the uterus per vagina |
| 3. சில நாள் விட்டுநிற்கும் | 3. may be. |
| 4. கருவைஅழிக்கும் அதாவது சிசு இறக்கும் | 4. Foetal death may occur + |
| 5. வயிறு பொருமி கல்லுப் போல வரும் | 5. Abdominal pain with hardness and tenderness on pal - pation + |
| 6. உடல் நடுக்கும்,உடல் விருவிருக்கும், சத்தி ஏற்படும். | 6. Haemorrhagic shock may occur. signs of shock + |



சுரோணித கெர்ப்பவாயு ஒரு அசாத்தியரோகம் என்று கூறப்பட்டுள்ளதும், இதற்குரிய சிகிச்சை முறையில் அட்டை விடுதல், கொம்பு வைத்தல் பற்றிக் கூறப்பட்டுள்ளதும் கவனிக்கத் தக்கது.

இரத்தம் மிகுந்த சந்தர்ப்பங்களில் அட்டை விடுதல் விதியாக உள்ளது. அதேநேரம் கர்ப்பிணிகளுக்கு அட்டை விடக்கூடாது என்பதும் விதியாக உள்ளது. எனவே, இங்கு குழந்தை கருப்பையில் இறந்து போய் விடும் என்பதாலேயே அட்டைவிடுதல் பற்றிக் கூறப்பட்டுள்ளது என்று கருதமுடியும்.

மேலும் சிகிச்சையில் வயிற்றுப் புண் மாறும் என்று (நாவல் நெய்) கூறப்பட்டுள்ளதே தவிர குழந்தை நன்கு கருப்பையில் வளரும் என்று கூறப்படவில்லை. எனவே, குழந்தை கருப்பையில் இறக்கும் அல்லது இறந்து பிறக்கும் (Still birth) (இதனையே கருவழியும் என்று கூறியுள்ளார்) என்பதே முடிவாக உள்ளது.

**குறிப்பு**

சுரோணித கெர்ப்பவாயுவையும், கெர்ப்பவாயுவையும் வேறுபடுத்தியறிதல் வேண்டும். கெர்ப்ப வாயு என்பது வலியுடன் கூடிய மாதவிடாயைக் (dysmeno-rrhoea) குறிக்கும். ஆனால், சுரோணித கெர்ப்ப வாயு என்பது கர்ப்பிணிகளில் ஏற்படக்கூடிய வலியுடன் கூடிய இரத்தப்போக்கைக் குறிக்கும் (சுரோணிதம் = இரத்தம்) முன்னிருக்கும் நஞ்சு நிலையில் (placenta previa) வலியற்ற இரத்தப் போக்கு (painless antepartum haemorrhage) ஏற்படும் என்பதும் குறிப் பிடத்தக்கது.

### சிகிச்சை

1. சுக்கு, கழற்சிப்பருப்பு, பெருங்காயம், உள்ளி, ஏலம் இந்துப்பு சமன் எடுத்து நல்லெண்ணெய் விட்டுக் காய்ச்சி உண்ண (குடிக்க) வேண்டும்.

2. அவ்விதம் குடிக்கும் போது எள்ளைக் கருக வறுத்து நெய், நல்லெண்ணெய் விட்டரைத்து அடிவயிற்றில் பூசவேண்டும். அவ்விதம் பூசிய மருந்தின் மேல் ஊமத்தம் இலையை வாட்டிப் போட வேண்டும். பிறகு அதை எடுத்துவிட்டுப் பேய்ப் பீர்க்கங்காயை இரண்டாகப் பிளந்து நோயுள்ள இடத்தில் வைத்துக்கட்ட சுரோணித கெர்ப்பவாயு (கட்டி) கரையும்(மாறும்), அங்ஙனம் கட்டிய எட்டு நாளுள் மாறாவிடின் விதிப்படி அட்டை விட்டு துஷ்ட ரத்தத்தைப் போக்கிக் கொல்லன் கோவைக் கிழங்கையும், பெருங் காயத்தையும் துவைத்துக் கட்டவேண்டும்.

அதற்கும் மாறாதாகில் கார்த்திகைக் கிழக்கை இடித்து தேனிற் குழைத்துக் கட்டமாறும்.

அதற்கும் மாறாதாகில் மீண்டும் அட்டை விட்டு, சத்திச்சாரணைவேரை இடித்துக் கட்ட வேண்டும்.

**3) கொம்பு வைத்தல்**

மேற்படி மருந்துகளுக்கு மாறாவிடின் விதிப்படி கொம்பு வைத்து (சுட்டு) பிறகு அவ்விடத்தில் புங்கிலை வைத்துக்கட்ட மாறும்.



**4) குடிநீர்**

1. கருக்குவாய்வேர், சுக்கு, கொல்லன் கொவ்வை வேர். கான்றைவேர், சமன் எடுத்து முறைப் படி குடிநீரிட்டுக் குடிக்கமாறும்.

2. காஞ்சூரைவேர்ப்பட்டை, முன்னைவேர், கழற் சிப் பருப்பு, கழற்சிவேர், சாரணை, உள்ளி ஈச்சம் வேர் சமன் எடுத்து முறைப்படி குடிநீரிட்டுக் கொடுக்க.

**5) எண்ணெய்**

கள்ளியிலைச்சாறு, எருக்கலைச்சாறு, வெள் ளுள்ளி, உத்தமாணி, கழற்சி இலை, இவைசாறு, நல்லெண்ணெய் சமன் எடுத்து பாண்டத்திலிட்டு, சிவதைவேர் அரைத்துக் கலக்கி, இந்துப்பு இவை நிறை 8 பங்கும் வெண்காரம் - 10 பங்கும் சேர்த்துக் காய்ச்சி பதத்தில் வடித்து 1 தேக்கரண்டி வீதம் குடித்துவர சுரோணித கெர்ப்பவாயு, பழையமலம் (மலக்கட்டு), வயிற்றுப் பொருமல், குத்து, இருமல், மாறும்.

6) **நாவல் நெய் – 1** தேக்கரண்டி வீதம் 40 நாட் கொடுக்கவும். வயிற்றுப் புண், வெள்ளை, பெரும் பாடு, கெற்பவிற்புருதி, கெர்ப்பவாயு, இரத்த பித்தம் (bleeding tendencies) எலும்புருக்கி (கர்ப்பமேகம்), நாட்பட்ட கிராணி, அதிசாரம் என்பன மாறும்.

7) **நாவலெண்ணெய்** - 1 தேக்கரண்டி வீதம் உண்க. புகை, புளி உப்புநீக்கி பத்தியம் இருக்க வேண்டும். சுரோணித கெர்ப்பவாயு மற்றும் கெர்ப்பநோய்கள் தீரும்.

## 3.04 சுரத்தின் மேல் கெர்ப்ப ரோகம்

அதாவது கர்ப்பிணிக்கு கடுஞ்சுரம் ஏற்பட்டால் காணும் குறிகுணங்களாவன -

நீறுஞ் சுரமா யுடம்புலரு நீருஞ் சிவக்கு மடிவயிற்றில்
ஊறு மிகவே கறைபடும்போ துடனே நீரு மொடுவாகும்
தேறுங் கருவை யழிப்பிக்குந் தினமே காந்தன் மிகும்பொருமும்
கூறுஞ் சோரி யிலதாகுங் கொடிய சுரத்தின் குணமாமே.

சுரம் மிகுதியாகக் காயும். உடம்புலரும், சிறுநீர் சிவந்து வரும். அடிவயிற்றில் உபாதை மிகும். சிறு நீர் கடுக்கும். வளரும் கருவை அழிப்பிக்கும், காந்தும் வயிறு பொருமும், இரத்தம் இல்லாதது போலாகும்.

சுரத்துட னிளைப்புத் தலைவலி காய்ச்சு றுயர்மிகு
நடுக்கமுட் கூதல்
அரத்தினா லுடலை யறுப்பது போல வடுத்தடுத்
துடம்புநொந் தழற்றிச்
சிரத்தினு மயக்கித் தீன்மறந் துவட்டிச் சிலகழிந்
திடும்வயி றூதும்
உரத்திடுங் கால்கை முகம்வயி றதைக்கு முறுகெர்ப்ப
சுரகுண மிதுவே.



சுரத்துடன் இளைப்பு. தலைவலி, நடுக்கம், உட்கூதல், அரத்தினால் உடம்பையறுப்பதுபோல வலி, மயக்கம், பசியின்மை, வயிறூதும். கால், கை, முகம், வயிறு அதைக்கும் (வீங்கும்)

குறிப்புரை - இக்குணங்களைப் பார்க்குமிடத்து கருவுற்ற காலத்து ஏற்படும் நுண்ணங்கித் தொற்றுக் களால் ஏற்படும் காய்ச்சல் மற்றும் குறிகுணங் களுடன் ஒத்திருப்பதை காண முடிகிறது.

உதாரணமாக, கருவுற்ற காலத்தில் ஏற்படும் bacterial infections நிலையுடன் ஒப்பு நோக்கலாம். முக்கிய மாக இத் தொற்று சிறுநீரகங்களுடன் சம்பந்தப் பட்டவையாக உள்ளன.

| கெர்ப்ப சுரம் | BACTERIAL INFECTION |
|---|---|
| 1. அதிக சுரம் | 1. High fever + |
| 2. சிறு நீர் சிவந்துவரும் | 2. Haematuria may be present. |
| 3. அடிவயிற்றில் உபாதை (வலி) | 3. Pain in the lower abdomen, inguinal region and back + |
| 4. நீர் சுருக்கு, கடுப்பு | 4. Dysuria + |
| 5. கருவைஅழிப்பிக்கும் | 5. Abortion or prema-rure delivery + |

| | |
|---|---|
| 6. தலைவலி | 6. Head ache + |
| 7. குளிர், சுுதல் | 7. Shivering + |
| 8. உடம்பை அறுப்பது போல வலி | 8. Severe back ache + |
| 9. பசியின்மை | 9. Loss of appetite |
| 10. வயிறூதும் | 10. Abdominal distension may be present |
| 11. மயக்கம் | 11. Loss of consciousness may be present |
| 12. கால், கை, முகம் வயிறு அதைக்கும் | 12. Body swelling generalized odema |

இதற்குரிய சிகிச்சை முறைகள் சுரத்தைத்தணிப்பன வாயும், சிறுநீர் பெருக்கித் தன்மையுள்ளனவாயும் இருத்தல் காண்க.

**சிகிச்சை**

1. குடிநீர்
   நற்சீரகம், சுக்கு, கொத்தமல்லி, கராம்பு வகை சமன் எடுத்து குடிநீரிட்டுக் கொடுக்க மாறும்
2. இலாமிச்சு, இருவேலி, சீந்தில்தண்டு, வட்டத் துத்தி, பருத்திவேர், சிறுகாஞ்சோன்றிவேர், பற்படாகம் வகை சமன் எடுத்து குடிநீரிட்டு பசுநொய் மேற்பொடி இட்டுக் குடிக்கமாறும்.



## 3.05 கெர்ப்ப சூலை

கெர்ப்ப சூலை என்பது கெர்ப்பபையைப் பற்றி உண்டாகும் கடுமையான வலியைக் குறிக்கும். அதற்குக் காரணங்களாக:-

வஞ்சனைக் குறைகளாலு மருத்தீடு தன்னி னாலும்
ஒஞ்சிய காய வெக்கை யுறுதிசெய் தெண்டிப் பாலும்
அஞ்சவே பிள்ளைப் பேற்றி லவதரித் திரத்தத் தாலும்
கெஞ்சவே கெர்ப்ப சூலை கெடுக்குமா மிரத்த ரோகம்.

வஞ்சனை அதாவது, கருவை அழிக்க வேண்டும் என்று வஞ்சித்தல் (பில்லி, சூனியம் முதலியவையும் இதில் அடங்கும்), மருத்தீடு செய்தல், காயவெக்கை, தெண்டிப்பு (கருவழித்தலுக்கான முயற்சி)

பிள்ளைப் பெற்ற வுதரமதிற் பெருகுஞ் சோரி போகாதாய்
உள்ளே திரளு முலம்போல வூ தும் வாயுச் சூரையதாய்
வெள்ளை வீழு மொடுப்பட்டு மிகவு மழிக்குங் கெர்ப்பத்தைத்
தள்ளு முடம்பு தான்விம்முஞ் சாற்றுங் குணத்தைத் தானறியே.
1.

திரண்டுகீழ் வயிற்றிற் றோன்றிச் சிக்கிநின் றிரத்தம் வீழ்ந்து
பிரண்டுதா னுதர மெங்கும் பிள்ளைபோ லாக வூரும்
அருண்டுதா னழுக்க தானா லதனுடன் வலியுந் தோன்றும்
உருண்டிடுங் கெர்ப்ப சூலந் தானென வுரைக்கலாமே. 2.

திரண்டுகீழ் வயிற்றைப் பற்றிச் சிக்கிநின் றிரத்தம் வீழ்ந்து
புரண்டுதான் வலிக்கு மாகிற் பொல்லாத கெர்ப்ப சூலை
வரண்டுமே வெளுத்து வற்றி மயங்கிடக் குருதி சோரில்
உருண்டிடா விரத்த ரோக முறுதியா யுரைக்க லாமே. 4.

1. பிள்ளை பெற்றவளின் வயிற்றில் (கருப்பையில்) பெருகும் குருதி வெளியேறாமல் தேங்கி கல்லுப் போல வயிறூதும். கடுமையாய் வலியுண்டாகும். கீழ் வயிற்றில் சிக்கி நின்று இரத்தம் வீழும். அதனால் வலியுண்டாகும். உடம்பு வரண்டு, வெளுத்து, வற்றி, மயங்கி குருதி சோரும்.

2. வெள்ளைபடும். கர்ப்பத்தை அழிக்கும். உடம்பு விம்மும். அடிவயிற்றில் திரண்டு இரத்தம் சிக்கி நின்று விழும். உதரம் எங்கும் பிள்ளை போல ஊரும். அதனால் அழுக்கும் வலியும் தோன்றும்.

**குறிப்புரை:-** இங்கு இரண்டு கருத்துக்களை நாம் கவனத்திற் கொள்ளலாம். காரணத்தைப் பார்க்குமிடத்து கர்ப்பிணிக்குத் தெரியாமல் கருவை அல்லது குழந்தையை அழிக்கும் முயற்சியாக இருப்பதைக் காணமுடிகிறது. அதன்படி பார்க்குமிடத்து Accidental Haemorrhage ல் mixed type (அதாவது revealed and concealed) haemorrhage உடன் ஒத்துப் போவதைக் காணலாம்.

| **கெர்ப்ப சூலை** | **Accidental Haemorrhage (Mixed type)** |
|---|---|
| 1. இரத்தம் சிக்கி நின்று வீழும் | 1. Blood is partly revealed and partly concealed in the uterus |
| 2. வஞ்சனை, மருந்தீடு தெண்டிப்புக்குரிய சரித்திரம். | 2. History of accident or trauma. |
| 3. கடுமையான வயிற்று வலியும், அடிவயிறு ஊதிக் கல்லுப் போலவும் காணப்படும். | 3. Abdominal pain with hardness and tenderness on palpation |
| 4. உடம்பு வரண்டு வெளுத்து மயங்கும் | 4. Pallor and shock |
| 5. உதரமெங்கும்பிள்ளை போலகவூரும். | 5. The fundus continuous to rise due to the bleeding taking place inside the uterus |
| 6. பிள்ளைப்பெற்றவளின் உதரத்தில் ஏற்படும் என்பது ஏற்கனவே பிள்ளை பெற்றவள். | 6. Multi para. |



அதே நேரம் கெர்ப்ப சூலை பிள்ளைப் பெற்றவளில் ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளதும் கவனிக்கத் தக்கது. அந்தவகையில் நோக்குமிடத்து Retained placenta என்ற நிலையுடன் ஒப்பு நோக்க வேண்டியுள்ளது.

| கெர்ப்ப சூலை | Retainded Placenta |
|---|---|
| 1. பிள்ளை பெற்றவளின் உதரத்தில் இரத்தம் பெருகும். | 1. A small portion of the placenta remains to the uterine wall causing bleeding |
| 2. அடிவயிறு திரண்டு கல்லுப் போலாகி கடுமையாக வலிக்கும். | 2. Hardness of the lower abdomen on palpation. |
| 3. உடம்பு வெளுத்து மயங்கும். | 3. Signs of shock. |

**குறிப்புரை:-** *சிலர் இதனையே சூதகக்கட்டி* (Unterine polypus) *என்பர். இது இரத்தக்கட்டி, உதிரக் கட்டி, கற்சூலை, சோணிதக்கட்டி ரிக்கட்டி என்றும் கூறப்படும்.*

*கெர்ப்ப சூலையில் அதிகவலி, இரத்த இழப்பு காரணமாக* shock *ஏற்படும். உடம்பு குளிர்ந்து வெளிறி மயக்கமும் உண்டாகும் எனவே, உடற்சூட்டைப் பேணி வலியையும் நீக்குவதற்காக அக்கினி குமாரன் குளிகை (சூட்டை உண்டாக்கும்), அக்கினிக் குமாரபற்பம் என்பன கொடுக்கப்படுகின்றன. கெர்ப்ப சூலை அசாத்தியரோகம் என்பது கவனத்திற் கொள்ளத்தக்கது.*

**சிகிச்சை**

1. *அக்கினிக் குமாரன் குளிகை -1 குளிகைவீதம் மிளகு கஷாயத்தில் கொடுக்க மாறும்.*



2. *புனுகுநெய் - கெர்ப்பசூலை இரத்த சூலை மாறும்*
3. *அக்கினிக் குமாரபற்பம் - தேன் அல்லது பனங்கட்டியில் கொடுக்க இரத்தசூலை, கெர்ப்ப சூலைதீரும்.*
4. *கெர்ப்பசூலைக்குக் காயம் - உள்ளுக்குக் கொடுக்க மாறும்.*

## 3.06 இரத்த சூலை

*இதுவும் கர்ப்பாசயத்தை பற்றிய சூலை வகையில் ஒன்றாகும் (கர்ப்ப சூலை - 21 என்பர்)*

செப்புங் கருப்பக் குழியதனிற் செளிம்போ டிரத்தந் தான்கூடி
ஒப்பத் திரண்டு கட்டுண்டே யுறலாற் றீட்டு மறிபட்டுக்
கெர்ப்பந் தரிக்கு மதுபோலக் கிளருங் குறிக டாங்கொண்டே
இப்போ பிள்ளை போலிருக்கு மியல்பை நோக்கி யுணர்வீரே. 1.

காணு முலையிற் பாலுமுண்டாங் கனத்து வயிற்றில் மயிரொழுக்கம்
பேணு முலைக்கண் டான்கறுத்துப் பிறகு வயிறு தான்வீங்கும்
தோணுங்கிங்க ளானதொறுஞ் சுகமாம் பிள்ளை போலிருக்கும்
காணும் பெரிய வைத்தியர்கள் கண்டே யாராய்ந் தறிதனன்றே. 2.

செப்பிய வாண்டு சென்றாற் சேர்ந்தது பிள்ளை யல்ல
ஒப்புறு வியாதி யென்றே யுணர்கவென் றுரைத்தார் முன்னம்
அப்புறு குடரே போல வழுகியே சியலும் வீழும்
தப்புள விரத்த மெல்லாஞ் சார்சிய னாற்ற நாறும். 3.

கருப்பையில் இரத்தம் சேர்ந்து கட்டும். தீட்டுமறி படும். கெர்ப்பம் தரித்துள்ளது போன்ற குணங்கள் தோன்றும்.அதாவது முலையிற் பாலுண்டாதல், முலை கனத்தல், வயிற்றில் மயிரொழுக்கம், முலைக்கண் கறுத்தல், வயிறு வீங்குதல், வயிற்றில் பிள்ளை இருப்பது போல உணர்வுண்டாகும்.

ஆனால், ஒரு வருடம் (12 மாதம்) சென்று விட்டால் பிள்ளை பிறக்காது. அதாவது கருப்பம் இல்லை என்பதை அப்போது உணர்ந்து கொள்வர் என்கிறார். (42 கிழமை வரை பிள்ளை பிறக்குங் காலமாம்)

அது மட்டுமன்றி தண்ணீரில் போடப்பட்ட குடலானது அழுகிப்போய்விடும்.அதுபோல அழுகிய நாற்றத்துடன் யோனியிலிருந்து நாற்றத்துடன் சீழும் இரத்தமும் வடியும் என்பர்.

**குறிப்பு:-** கருப்பையில் ஏற்படும் சில கட்டிகள் கருப்பத்தை ஒத்த குறிகுணங்களைக் காட்டி நிற்பதையும் அவை உரிய காலத்தில் சிகிச்சிக்கப் படாவிட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படு வதையும் காட்டுகிறது. இரத்தசூலை ஓர் அசாத்திய ரோகம் என்பதை நினைவிற் கொள்க.



| இரத்த சூலை | Tumour |
|---|---|
| 1. இரத்தம் கட்டிபட்டுத் திரளல் | 1. May be hard mass |
| 2. தீட்டு மறிபடுதல் | 2. Amenorrhoea |
| 3. கெர்ப்பந்தரிக்குங் குணங்கள் | 3. Signs and symptoms of pregnancy |
| 3. i. முலையிற் பாலுண்டாதல் | i. Breast secretion + |
| ii. முலை கனத்தல் | ii. Heaviness of the breast + |
| iii. வயிற்றில் மயிரொழுக்கம் | iii. Linea nigra + |
| iv. முலைக் கண் கறுத்தல் | iv. Darkness of the nipple + |
| v. வயிறு வீங்குதல் | v. Abdominal distension + |
| vi. பிள்ளை ஊர்வது போன்றஉணர்வு | vi. Feeling of Quickening + But, No foetal parts palpate on palpation. Foetal heart sound not heard |
| 4. சீழும் இரத்தமும் கசிதல் | 4. Vaginal discharge blood with pus + |
| 5. துர் நாற்றம் வீசல் | 5. Bad smell + |

கருப்பத்துக்கும் பொய்க்கருப்பத்துக்கும் உள்ள வேறுபாடுகள்.

| கருப்பம் | பொய்க்கருப்பம் (கட்டியால் வந்தால்) |
|---|---|
| 1. மூன்றுமாதத்துக்குமுன் அசைவை உணர முடியாது (Quickening) | மூன்று மாதத்துக்கு முன்பே கரு துடிப்பது போன்ற உணர்வு ஏற்படலாம். |
| 2. வயிறு படிப்படியாகப் பருக்கும் | ஆரம்பத்திலேயே வயிறு பருக்கும் |
| 3. 10 மாதங்களுக்கு மேல் நீடிப்பதில்லை | 4,5 வருடங்கள் வரை நீடிக்கக் கூடும். |

### சிகிச்சை

1) இரத்த சூலைக் குளிகை - சுண்டங்காயளவு நல்லெண்ணெயில் கொடுக்கமாறும்.
2) இரத்த சூலைக்கு நெய் - காலை, மாலை காசெடை உட்கொள்ள மாறும்.
3) வேலம்பட்டையெண்ணெய் - காசெடை காலை மாலை உட்கொள்ள கெர்ப்பசூலை, இரத்த சூலை, கெர்ப்பவிற்புருதி, கெர்ப்பவாயு மாறும். உப்புப்புளி நீக்கவும்.
4) வேலம்பட்டையெண்ணெய் II - காசெடை 1 மண்டலம் அருந்த கெர்ப்பசூலை, குடற்சுரப்பு வாதம், நெஞ்செரிவு, குன்மம், துடிவாதம் மாறும்
5) இலைக்கள்ளிக் குழம்பு - இரத்த சூலை, கெர்ப்ப வாயு, குன்மம் மாறும்.



## 3.07 நிதம்ப சூலை

இரத்தசூலையும், நிதம்ப சூலையும் போலிக் கருப்ப நிலைகளையே குறிக்கின்றன.

**வேறு பெயர் -** யோனிச் சூலை.

**தோற்புரை வழிய தாயங் குரித்தது கனத்தே யேறி**
**நீர்ப்புக வாயுக் கோத்து நிரம்பியே முளைத்தேங் காய்போல்**
**ஏர்க்கவே சவ்வு முற்றி யிறுகியே திரளு நாளில்**
**நீர்பொசிந் திருக்கு மென்று நிதம்பமாஞ் சூலைதானே. 1.**

**பிள்ளைப் பெற்ற விடந்தன்னிற் பெருக்க யோனி தனில்வாயு**
**உள்ளே குருதி யடைபட்டே யொதுங்கிப் புடைபட் டொடுவாகி**
**மெள்ளக் கனத்தோர் பால்வீங்கி வெடித்தே வலியு மாறாது**
**வள்ளைக் குழலா யிக்குணந்தா னிதம்ப சூலை வகைதானே. 2.**

**வெய்யதோர் கிரந்தி தன்னான் மேவிய யோனி மீதே**
**மொய்பனை யதின்காய்த் தோல்போன் மோதியே கனத்துக்கட்டி**
**நையுநீ ரொடுவு மாறா நத்தையிற் சதைபோ லுந்தும்**
**உய்விலா நிதம்ப சூலை யாமென வுரைக்க லாமே. 3.**

1. தோற்புரையிலிருந்து முளைத்துப் பருத்தது. நீர் சேர்ந்து அத்துடன் வாயுவும் கோத்துக் கொண்டு (நீருள் வாயு சேர்வதால் குமிழ்கள் (முத்துக்கள்) தோன்றும். அவ்வித வடிவுடன் உண்டாவது) கட்டி போல தோன்றும். அது தேங்காய் முளைபோல இருக்கும். பிறகு அது முற்றி இறுகித்திரளும். அப்போது யோனிவழியாக நீர் கசிந்திருக்கும்.

2. இங்ஙனம் கட்டி உண்டாவதற்குகுரிய வழி யாதெனில் - பிள்ளை பெற்ற இடத்தில், அதாவது, ஏற்கெனவே பிள்ளை பெற்றவளின் கருப்பையில் (Multipara) வாயு தோன்றி, அதனால் குருதி அடைபட்டுத் திரண்டு பொருமி, கனத்து, வயிற்றின் ஒருபக்கம் வீங்கி வெடிக்கும். அதனால் வலியுண்டாகி, அது மாறாமல் இருக்கும்.

3. கிரந்தி வியாதி காரணமாகவும், **யோனி** மீது மொய்பனையின் காய்த்தோல் (பனங்காய்த் தோல் - நன்கு பழுத்த பனங்காயில் ஈக்கள், கொசுக்கள் மொய்த்தாலும் அது நிலத்தில் வீழ்ந்து மோதுவதால் பிதுங்கி எவ்விதம் அசிங்கமாக இருக்குமோ அதுபோல் என்றும் கருதலாம்) போல வீங்கிக் கட்டி, நீர்க்கசிவுடன், நத்தையின் சதை போலும் காணும் எனபதாம்.

இங்கு தேங்காய் முளை (தேங்காய்ப்பூரான்) நத்தையின் சதை என்பன போல கட்டி / வீக்கம் இருக்கும் என்பதிலிருந்து இது வன்மையான கட்டி அல்ல என்பதை உணர்ந்து கொள்க.

**குறிப்புரை** - இங்கு கூறப்பட்டுள்ள குறிகுணங்கள் பெருமளவில் Hydatidiform mole அல்லது Vesicular mole எனப்படும் **'முத்துப்பிள்ளை'** நிலையுடன் பெருமளவில் ஒத்துக் காணப்படுகிறது.

Hydatidiform mole is a cystic degeneration of the chorionic villi, no foetus develops, but the uterus enlarges with masses of cyst.

The cause of hydatidiform mole is not known. But it is known that at times these are malignant and therefore early diagnosis and treatment is of great importance.



| நிதம்ப சூலை | Hydatidiform mole |
|---|---|
| 1. நீர்கோர்த்த கட்டி அல்லது வீக்கம் உண்டாகும். | 1. Vesicular Mole |
| 2. அது மிருதுவாக இருக்கும் | 2. Softness of the abdomen on palpation. |
| 3. யோனிவழியாக நீர் கசியும் | 3. There is some pinkish stained watery vaginal discharge + |
| 4. வயிறு பொருமிக் கனக்கும் | 4. Abdominal distension + |
| 5. வயிற்றின் ஒருபக்கம் வீங்கி வெடிக்கும் | 5. Perforation of the uterine wall by the cyst which have a tendency to erode through muscle |
| 6. அதனால் வலியுண்டாகி அது மாறாமல் இருக்கும் | 6. Severe abdominal pain due to the rupture of the cyst or uterine wall. This pain will be continuous and persistent. |

**Note:-** In hydatidiform mole -

There is no foetal parts on abdominal palpation.

Foetal heart sound is not heard on ausc1tation.

The mother has not felt foetal movements.

**குறிப்பு**

இங்கு சிகிச்சை முறையில் இரட்சை கூறப்பட்டிருப்பதுடன் கடுமையான இரத்த இழப்பு Severe Haemorrhage ஏற்படுவதால் உடல் குளிர்தல் முதலியன ஏற்படும் என்பதால் அக்கினி குமாரபற்பம் கொடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. வயிற்றிலுள்ள கட்டி அகற்றப்படுவதால் ஏற்படும் வயிற்றுப் புண்ணுக்கு (கர்ப்பாசயப் புண்ணுக்கு) உரிய சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

**சிகிச்சை**

1. புகை - I - பாம்புக்கண்டம், குந்திருக்கம்பிசின் நன்கு பொடி செய்து சட்டியில் தணலெடுத்துப் பொடியைத்தூவி புகைப் போடவும். நோயாளியை துணியினால் போர்த்தி, உரலின் மேலிருத்தி ஜனன உறுப்புகள் மீது புகைபடும்படி விட வேண்டும். நிதம்ப சூலை வலிகள் மாறும்.
2. புகை - II - ஓமம் வெள்ளுள்ளிச் சருகு, பாம்புச் செட்டை சுக்கு, மிளகு, திப்பலி. பெருங்காயம், வசம்பு, குந்திருக்கம்பிசின், வெளுத்தற்பிசின் நன்கு பொடித்து முன்போல புகை காட்ட யோனிச் சூலை மாறும்.



3. முடக்கொத்தானெண்ணெய் - உள்ளுக்குக் கொடுக்க மாறும்.
4. மேனியெண்ணெய் - குப்பை மேனிச்ச மூலம் அரைத்து நல்லெண்ணெயிற் கொதிப்பித்து ஆறு நாள் நக்க நிதம்ப சூலை மாறும்.
5. பிரமிநெய் - 2 காசெடை உட்கொள்ள யோனிச் சூலை மாறும்.
6. குடிமருந்து-கழற்சிக்கொடி வடக்குவேர் பிடுங்கி வெந்நீரிலரைத்து புன்னைக் காயளவு மூன்று நாட் குடிக்கத் தீரும்.
7. பூச்சு - வேப்பம் விதை, ஆமணக்கம் விதை சமன் வேப்பிலைச் சாற்றிலரைத்து மேலும் பூசி, யோனிவாயில் வைக்க வலி, குத்து நீங்கும்.
   ii. பெருங்காயம், தேவதாரம், வேப்பம் வைரம், வேப்பம்விதை, மஞ்சள் இவை மோரிலரைத்துப் பூசவும்.
   iii. வெள்ளுள்ளி, ஓட்டறை, விழாலரிசி, வட்டுப் பழச்சாற்றிலரைத்துப் பூசவும்
   iv. உள்ளி, வசம்பு மெய்வழி நீரில் (சிறுநீர்?) அரைத்துப் பூசவும்.
8. உள்ளியாமணக்கெண்ணெய் உட்கொள்ள. குன்மம், குடல்வாதம் பிலிகை, அஷ்டிலா (அட்டிலிகை), மலக்கட்டு பக்க சூலை, வயிற்றுப் பொருமல் தீரும்.

9. அக்கினிக் குமாரபற்பம் - பிரண்டைச்சாறு, எருக்கலம் வேர்ச்சாறு, கையாந்தகரைச்சாறு, கோசலம் இவை சமன் கலந்து பிரண்டைவேர் கொடுவேலிவேர், பெருமருந்துவேர், தூதுவளை வேர், சத்திச்சாரணைவேர், சமன் அரைத்துக் கரைத்து காயமாகக் காய்ச்சி அதில் அக்கினிக் குமாரபற்பம் சேர்த்துக் கொடுக்கமாறும். அரை மண்டலம் கொடுக்கவும். உப்பு, புளி நீக்கவும்.

10. செம்முள்ளிநெய் - நிதம்பசூலைக் கட்டியை விழுத்திய பின் வயிற்றுப்புண் மாறுவதற்கு இந் நெய்யைக் காசெடை அளவாகக் கொடுக்கலாம். நாலுநேரம் கொடுக்கவும்.

**குறிப்பு:-** கெர்ப்பசூலை, இரத்த சூலை, நிதம்சூலை மருந்துக்கு வசப்படாவிடின் இரட்சைசெய்ய வேண்டும். (அந்த இடத்தில் கருவியாற் சுடவேண்டும். அதன் பிறகு ஏற்படும் விரணத்தை மாற்ற பஞ்ச தீபாக்கினித் தைலம், துவரெண்ணெய் என்பன பூசவேண்டும் அதே நேரம் உள்ளுக்கு மேற்கூறியபடி அக்கினிக் குமார பற்பம் கொடுக்க வேண்டும்.

## 3.08 கெர்ப்ப வாயு

இதனையே சூதக வாயு, சூதகச்சூலை, தூரச் சூலை, சூதக வயிற்றுவலி, இரத்தவாத பித்தகுன்மம், சூதகக்குத்து, சூசிகவாயு, சூசிகாசூலை என்றும் கூறுவர்.



வலியுடன் ஏற்படும் மாதவிடாய் கெர்ப்ப வாயு எனப்படும்.

பொருமு முதரந் தனையடர்த்துப் போத மிகவும் வலியுண்டாய்க்
குருதி கழியில் வலிதீருங் கொள்ளுங் கெர்ப்ப முறவழிக்கும்
வருடி யிடுப்புத் துடையுளையு மயக்கு மலத்தை மிகவிறுக்கும்
பெருகப் பணைக்கு முதரத்திற் பேசுங் கெர்ப்ப வாயுவிதே. 1.

வேரா மிடது பாகத்தின் மிண்டி வலிக்கு மேலேறும்
சாருங் குருதி தணியாது தலையா மெனவே தலைதிமிர்க்கும்
நேரே திரளு நாபிக்கீழ் நிற்குஞ் சாய்கை யதிற்சாரும்
நாரி கடுக்குஞ் சந்துளையு நலஞ்சே ருதரந் தனில்வலியே. 2.

பாடலின் கருத்து

1. வயிறு பொருமி மிகவும் வலிக்கும். குருதி கழியில் (மாதவிடாய் உண்டானால்) வலிதீரும். கருப்பம் தரித்தால் அதனை (இவ்வியாதியை) அழிக்கும் (என்றும் கருதலாம்) இடுப்பு, துடை உளையும், மயக்கமுண்டாகும். மலத்தை மிக இறுக்கும். அதாவது மலச்சிக்கல் ஏற்படும்.

2. இடது பாகத்தில் வலியுண்டாகி அது மேல் நோக்கிப் பரவும். வெளியேறும் குருதி நிற்காது. (தொடர்ந்து போகும்) தலை திமிர்க்கும். வாயு நாபிக்குக் கீழ் திரண்டு நிற்கும். நாரி கடுக்கும். சந்துளையும் (மூட்டு வலிக்கும்)

**குறிப்பு -** புனுகு நெய் இற்குக் கீழே கெர்ப்ப வாயுவிற் சில நிலைகளில் இரத்தமாய் போகும் என்றும் சலத்துடன் இரத்தம் வீழும் என்றுங் கூறப்பட்டுள்ளது.

**குறிப்புரை -** கெர்ப்பவாயுவின் பெரும்பாலான குறி குணங்கள் Dysmenorrhoea வுடன் ஒத்துக் காணப்படு கின்றன.

| **கெர்ப்ப வாயு** | **Dysmenorrhoea (Congestive and Spasmodic)** |
|---|---|
| 1. வயிறு பொருமும் | 1. Flatulent distension of the upper colon + |
| 2. வயிறு வலிக்கும் | 2. Congestive dysmenorr-hoea takes the form of premenstrual pain situated either in the back or lower abdomen, occuring between three and five days and some-times even longer be-fore the onset of the menstruation |
| 3. மாதவிடாய் உண்டா னால் வலி தீரும் | 3. It is always relieved by the menstrual flow. |



| | |
|---|---|
| 4. கருவுண்டானால் அதனை அழிக்கும். கருத்தரித் தால் இவ்வியாதி அழியும் என்றும் கருதலாம். | 4. Marriage and child birth relieve spasmo-dic dysmenorr hoea |
| 5. இடுப்புத் துடை உளையும் | 5. The severe attack of pain is followed by a similar but less pronounced type of pain, felt in the lower abdomen and pelvis, and often down the antero - medial area of the thighs(spasmodic) |
| 6. மயக்கமுண்டாகும். | 6. A mild degree of shock may follow upon a very severe attack. verysevere pain is intermittent and spasmodic, and may cause faintness, collapse, vomiting and nausea (Spasmodic) |
| 7. மலச்சிக்கலுண்டாகும். | 7. Pain is accompanied by an alteration in bowel habit, usually constipation with some flatulent distension of the upper colon (conges tive) |

| | |
|---|---|
| 8. இடது பக்கத்தில் வலி யுண்டாகி அது மேல் நோக்கில் பரவும் | 8. The pain or discomfort is referred to one or other iliac fossa usually the left (congestive) |
| 9. தலை திமிர்க்கும் | 9. Head ache or tightness of the head + |
| 10. நாரி கடுக்கும் | 10. Back ache + |
| 11. வாயு நாரிக்குக் கீழ் திரண்டு (வலிக்கும்) நிற்கும். | 11. Abdominal pain and tenderness + |

Note:- The correct treatment is appropriate diet and the avoidance of excess carbohydrate and stronge purgetives, and some antispasmodic drugs. ஏறத்தாள கெர்ப்பவாயுவுக்கான சிகிச்சை முறைகளும் இவ்வாறே கூறப்பட்டிருத்தல் காண்க.

### சிகிச்சை

1. i) சூதகவலிக்கு புங்கு, மிளகு தாய்பாலில் அரைத்துக் கொடுக்கமாறும்.
   ii) மிளகு, இலைக்கள்ளித்துளிர் செவ்விளநீரில் கொடுக்கத்தீரும்.
2. உள்ளியாமணக்கெண்ணெய் -I- உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.
3. தேங்காய் நெய் - காசெடை மூன்று நாட் தின்ன கெர்ப்பவாயு, கெர்ப்பசூலை மாறும். பத்தியம்:- பால், நெய் சேர்க்கவும். கிரந்திப் பதார்த்தம் தவிர்க்கவும்.



4. சவர்க்கார எண்ணெய்
5. தேங்காய் நெய் - II
6. உள்ளியாமணக்கெண்ணெய் - II
7. காயம்

திரிகடுகு, கடுக்காய், சாம்பிராணி, பெருங்காயம், கல்மதம் வெண்காயம், மஞ்சள், குந்திருக்கம், இந்துப்பு, சமன் பொடி செய்து திராய், பாகல், ஆடாதோடை, வேம்பு இவற்றின் இலைச்சாறு சமன் கலந்து காய்ச்சி வற்றி வரும்போது பொடிதூவிக் காயங்காய்ச்சி எண்ணெய் வகையிற் புறப்பத்தியம் முடிந்தபின் கொடுக்கவும்.

8. பற்பம் (மஞ்சட் பற்பம்) - வெருகடி பிரமாணம் 3 நாள் தின்னவும்

எண்ணெய் மஞ்சள் (கஸ்தூரி மஞ்சள்) - பலம் - 4, வெண்காயுள்ளி - பலம் - 4, இந்துப்பு-பலம் -20, ஆண்பனைப்பாளை சுட்டசாம்பல் பலம் -20, பொன்னிறமாய் வறுத்துப் பொடிசெய்து வெருகடி தின்னவும் அழுக்குமாறின வுடன் மஞ்சள் மாக்களி கிண்டி மூன்றுநாள் உண்டு பின் தோல் போக்கி விளக்கின எள்ளு - படி- 1, பருத்திப் பருப்புமா ஒரு சிறங்கை, செங்கத்தாரிப் பட்டைத்தூள் ஒருசிறங்கை,இடித்து நேரம் ஒரு எலுமிச்சங் காயளவு - ஆறு நாள் தின்னவும் - பின் காந்தப் பற்பம் 20 -நாள் உப்புப்புளி நீக்கிப் பத்தியமாய்த் தின்னக் கெர்ப்ப வாயு முதலியன நீங்கிக் கெர்ப்பந்தரிக்கும்.

**9. காந்தபற்பம்**

*ஊசிக்காந்தம், இரசம், அரிதாரம், மனோசிலை, நெல்லிக்கெந்தகம், வகை - பலம் - 2, இருசீரகம். கடுகு, ஏலம், கராம்பு, வசுவாசி, இலவங்கம், நாகம்பூ, சாதிக்காய், குறாசாணி, அதிவிடயம், திரிகடுகு, உலுவா, வகை - பலம் - 1, தான்றிக்காய் - 10, கஞ்சாக்கொட்டை ½ - பலம் - ¼ அவின் பலம் - , இடித்தரித்து தேனிற்தின்னவும். வயிறுபுண்பட்டிருந் தால் பின்வரும் களியைக் கொடுக்கலாம்.*

**10. களி**

*உதிரவேங்கைகப்பட்டை, அழுக்கிராய்வேர், வேலம்பட்டை, இவை தனித்தனிமாவாக்கி குறுவை நெல்லுமாவுடன் கலந்து களிகிண்டி நல்லெண்ணெ யிற் தோய்த்துத்தின்ன குத்து, கொதிப்பு, வயிற்றுப் புண், கழுநீர்போல் தீட்டுப்படுதல் இவை தீரும்.*

**11. சந்திரகாந்த சூரணம் (மதிகாந்தச் சூரணம்)**

**மங்கையர்க்குச் சூதகத்தில் வந்தெதிரும் வாயுமுதல்**
**தங்குகெர்ப்ப வாயு தவிருதற்குத் - துங்கமுறு**
**சந்திர காந்தமெனும் தக்கதொரு சூரணங்கேள்**
**கெந்தகநற் சூதங் கிளர்காந்தம் - கொந்துசெறி**
**கூந்தன் மடமானே கூரு மயப்பொடியும்**
**போந்தபெருங் காய மிளகுசுக்கு - வாய்ந்தவிவை**
**முக்கழஞ்சு வெள்ளையுள்ளி முற்பகருஞ் சோம்பிருசீர**
**திப்பிலியு மேலந் திகழ்கடுக்காய் - சொற்பெரிய**



**சோமனுப்பு நற்கடுகு சொல்லுலுவா வோடோமம்**
**காமர் குலக்காய் வசுவாசி - ஆமினுங்கேள்**
**சேருமில வங்கப்பூச் சேர்ந்தபட்டை யோடிவைகள்**
**ஓரொன் றொருகழஞ்சா யுற்றபடி - கூடும்**
**குமரி மடச்சாறு கொள்ளவொரு நாளாட்**
**டமருமிஞ்சிக் சாற்றி லதுபோல் - நமைதீரும்**
**கையானின் சாறொருநா ளாட்டிக் கருத்துடனே**
**வெய்யிற் படாம னிழலுலர்த்தி - மைதவிரும்**
**நற்சந் தனமரைத்து நன்றா யுலர்ந்தபின்பு**
**சொற்சூ ரணத்தி னிடைகலந்து - மற்றினிக்கேள்**
**பூத்தநா ளைந்திற் புகன்றமுறை பேதிபண்ணிச்**
**சேர்ந்த மருந்துதனைத் தின்னக்கேள் - வாய்த்தபர**
**ஆனை முகவ னடிபணிந்து சொன்முறையே**
**தேனில் வெருகடி தூடின்று - மானனையாய்**
**தூய்யநீ ரிற்குளித்துச் சுடுநீரி னிற்றோய்ந்து**
**செய்யபத் தியங்காக்கத் தீர்நோய்கேள் - மையல்செயும்**
**கெர்ப்பத்தில் வாயு கிளர்கெர்ப்ப சூலையுடன்**
**கெர்ப்சோ ணிதவாயு கேடுசெயும் - கெர்ப்பக்**
**கிருமிமுதற் றீருமென வாயுண் மறையோர்**
**உரைசெய் வளமதனை யோர்.**

**12. கெர்ப்ப வாயுக்குழம்பு**

*அரபொடி - கழஞ்சு - 10, காந்தம் - கழஞ்சு - 3, தான்றிக்காய் கழஞ்சு - 4, பெருங்காயம், வசம்பு சன்னி நாயகன், சுக்கு, உள்ளி, மிளகு, சவர்க்காரம், வசுவாசி, மதுரம், கோட்டம், அக்கறா, நவச்சாரம், பெருங் குரும்பை, மஞ்சள், மல்லி, சந்தனம், சாதிலிங்கம், வகை - கழஞ்சு - 2, திப்பிலி, மனோசிலை நற்சீரகம்,*

கராம்பு, விழாலரிசி, சீனக்காரம், கண்டில்வெண் ணெய், வாலுளுவை, நெல்லிக்காய், சிறுதேக்கு, கடுகுரோகணி, வெளுத்தற்பிசின், சதகுப்பை, அரேணுகம், அத்தித்திப்பிலி, கார்புகா - வகை - கழஞ்சு - 1 சாதிக்காய் - கழஞ்சு - 1, நெய், தேன் கூட்டிக் குழம்பாக்கிக்கொள்ளக் கெர்ப்பவாயு தீரும். பிரமாணம் உடம்பின் இயல்பறிந்து கொள்ளவும்.

**13. நறுவலிநெய்**

நறுவிலிப்பட்டை, நாவற்பட்டை, பப்பரப்புளியிற் பட்டை, வகை - பலம் - 20, அத்திப்பட்டை, ஆத்திப் பட்டை, ஓதியம்பட்டை, வாழைப்பூ வகை - பலம் - 5, இடித்து எட்டுமரக்கால் தண்ணீர் விட்டு நாலொன் றாய்காய்ச்சி வடித்து நறுநெய், இருநாழி, நன்னாரி, இம்பூறல், முத்தற்காசு, தென்னம்பாளை, மலை தாங்கிவேர், கொட்டிக்கிழங்கு, கிழுவங்கொட்டை, புளியங் கொட்டைத்தோல், வெட்பூலாவேர், மாதளம் பிஞ்சு, அத்திப்பிஞ்சு, ஆத்திப்பூ,வில்வம்பழம், மாங் கொட்டை, கொடிக்களற்சிப்பருப்பு, இலந்தைத்தம் பலம், நாவற்கொட்டை, மாம்பால், மாந்துளிர், நாவற் றுளிர், விடத்தற்துளிர், துவரந்துளிர், சுக்கு, ஓமம், இருசீரகம், சாதிக்காய், கராம்பு, வசுவாசி, கோட்டம், கடுக்காய், காசுக்கட்டி, இந்துப்பு,அதிவிடயம், திப்பிலி, பேரீஞ்சு, முந்திரிகை - வகை - கழஞ்சு - 3, மேற்படி கஷாய நீர் விட்டரைத்துக் கரைத்து மெழுகுபதத்தில் வடிக்கவும். நேரம் கரண்டி நெய் தின்னக் கெர்ப்பவாயு முதலியனவும் பெரும்பாடு,



இரத்தபித்தம், அதிசாரம் இவையும் தீரும். இந்த நெய்க்கு அதிவிடயமும் இலவம்பிசினும் பொடிசெய்து நேரம் அரைக்காற்கழஞ்சு மேற்பொடி தூவித்தின்னவும்.

**14. காயம்**

பெருங்காயம், ஓமம், நற்சீரகம், மல்லி, உலுவா, வகை - கழஞ்சு - 2, வெள்ளுள்ளிப்பருப்பு ஒரு சிறங்கை, பூனைக்கழற்சிவித்து ஒருள்ளிப் பருப்பின் முகிழ் ஒருசிறங்கை இவையெல்லாம் பொட்டளி கட்டி வைத்துக் கொள்ளவும். ஒரு புதுப்பானையில் தண்ணீர்விட்டு கம்பிளியினால் வேடுகட்டி வேட்டின் மேல் முருங்கையிலையும் முடக்கொற்றானிலையும் பரப்பி அதன் மேற்பொட்டளியை வைத்து பழத் தேங்காய்ப்பூவினால் மூடிச் செம்மி மேலே சட்டி யினால் மூடி அவிக்கவும். அவிந்தபின் எடுத்து இலையையும் தேங்காய்ப்பூவையும் வெவ்வேறாய் பிழிந்து பின் ஒன்றாய்கலந்து மேற்படி பொட்டளியிற் சரக்கரைத்துக் கரைத்துக்காய்ச்சி எண்ணெய் பிரியும் பதத்திலிறக்கித் தான்றிக்காயளவு உட்கொள்ள கெர்ப்பவாயு வயிற்றிற்புண், கிருமி , வெட் டையினாலுண்டாகும் புண் இவையெல்லாம் தீரும். பத்தியமாய்க் கொள்ளவும்.

**15. கெர்ப்பவாயுப் பேதி**

விளக்கெண்ணெய் - படி - 1, நன்றாக முற்றிப் பழுத்தபேய்க்குமட்டிக்காய் வரகுவைக்கலிற் சுட்டுப் பிழிந்தசாறு - படி - 1, ஈருள்ளிச்சாறு, படி - 1, பசுப்பால் - படி - 1, எலுமிச்சம்புளி - படி - 1, கலந்து

பதத்தில் குழம்பாகக் காய்ச்சிவைத்துக் கொள்ளவும். கரண்டியளவு தின்று வெந்நீர் குடிக்கப் பேதியாகும். கெர்ப்ப வாயு, மலட்டுவலி முதலியன தீரும்.

**16. கெர்ப்பவாய்வீற் துவாலைக்கட்டுக்குக் காயம்**

ஆடாதோடைவேர், பாவட்டைவேர், கற்றாழைக் கிழங்கு, கான்றைவேர், உத்தமாகாணிவேர், பூனைக் கழற்சிவேர், மேற்படி விதைப்பருப்பு, கடற்சில்லுப் பருப்பு, வகைக்குப் - பலம் - ½ இடித்தவித்துப் பிழிந்தநீரில் திரிகடுகு, இருசீரகம், உள்ளி, ஓமம், சதகுப்பை, அரத்தை, செங்கொட்டை, பெருங்காயம், இந்துப்பு, வாளம்-வகை- கழஞ்சு 2, அரைத்துக் கரைத்துக் காயங்காய்ச்சி மூன்று நேரங்கொள்ள கெர்ப்பவாயு மறித்த துவாலையுடைபடும். உப்புப் புளி தவிரவும்.

**17. வேப்பிலைக்காயம்**

வேப்பிலை முற்றலும் துளிரும் தள்ளி நல்லதாய் எட்டுப்படி எடுத்து - 16 படி தண்ணீர் எட்டொன்றாய் வற்றவைத்து பிழிந்து வடிகட்டி மாவிலங்கை, வட்டுக்கத்தரி, தூதுவளை, நன்னாரி, காற்றோட்டி, பெருமருந்து, இன்பூறல், நொச்சி, இவைவேர் - வகை - கழஞ்சு - 1½. திரிகடுகு, இருசீரகம், ஏலம், இலவங்கம், ஓமம், பொரிகாரம், சீனக்காரம் மஞ்சள், உலுவா, மல்லி, வெளுத்தற் பிசின், பெருங்காயம்,-வகை -கழஞ்சு 1, அரைத்துக்



கரைத்துக் காயங்காய்ச்சிப் பத்தியத்துடன் பன்னி ரண்டுநாள் காலை மாலை தின்னத் துவாலை யுடைக்கும். அதனால் வந்த ரோகமெல்லாம் தீரும்.

**18. வில்வம்வேர்க்களி**

வில்வம், பெருமருந்து, கான்றை, நொச்சி, முருங்கை, எருக்கலை, நன்னாரி - இவை வேர். மாதளங்காய்த்தோல், கொறுக்காய்ப்புளி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், வசம்பு, சுக்கு, மிளகு. உள்ளி, கோட்டம், மஞ்சள் - இவை - வகைக்கு - பலம் - 1, நற்சீரகம், கருஞ்சீரகம், பெருங்காயம், குறாசாணி, கடுகுரோகணி, திப்பிலிமூலம், சித் தரத்தை, அக்கரா, அமுக்கிராய்க் கிழங்கு,சாரணை வேர், தூதுவளைவேர் - இவை சமன்கூட்டியரைத்துத் தோடங்காய்ப்புளியிற் களிகிண்டித் தான்றிக்காயளவு காலை மாலை தின்னவும். உப்புப்புளி கிரந்திப் பண்டம் தவிர்த்துப் பத்தியம் கொள்க. கெர்ப்ப வாயு,கெர்ப்பமுடக்கம், முதலிய கெர்ப்ப ரோகங் களும் கை காலெரிவு, உளைவு முதலியனவும் தீரும்.

**19. காய உண்டை**

கொட்டைப்பாக்கு - 100, இதைச் சொத்தை பூச்சி முதலிய பழுதுகளின்றிக் தெரிந்தெடுத்துக் கண்ட நிறைக்கு இருபங்கு பறங்கிக் கிழங்கு இரண்டும் முழுப்படியே ஒருமரக்கால் தண்ணீரில்

ஒரு இரவு முழுவதும் ஊற வைத்து விடிந்தபின் எடுத்து மெலிதாகச்சீவி முன் ஊறின தண்ணீரிற் போட்டு வற்றக்காய்ச்சிச் சாந்துபோல் அரைத்துக் கொண்டு அதில் நல்லெண்ணெயும் நெய்யும் செல்லுமளவு கூட்டி இருசீரகம், உள்ளி, வசம்பு, பெருங்காயம், வசுவாசி, சாதிக்காய், காசுக்கட்டி, திரிகடுகு, ஓமம் - வகை - கழஞ்சு - 1, அரைத்துக் கூட்டி, அனிச்சை, கசட்டை, அத்தி, பூலா, வெள்வேல் , கருவேல், இவற்றின் பட்டையும் தென்னம்பாளை யிளமணியும் தென்னங் குரும்பையும் கூட்டித் துவைத்து நன்றாயரைத்து நாழி தண்ணீரிற் கரைத்துக் காய்ச்சி இறுகினபதத்தில் முன்மருந்தும் சேர்த்துப் பிசைந்து காய்ச்சிப் பதத்தில் எலுமிச்சங்காய் பிரமாணம் உண்டைபண்ணித் தின்னவும். கைப்புப் புளிப்பு நீங்கிப் பத்தியம் கொள்ளக் கெர்ப்பவாய்வு 14 - ம் பிரமேகம் - 21 - ம் தீரும்.

**20. உள்ளிக்குழம்பு**

முருங்கைப்பூ - படி - 1, உத்தமாகாணிப்பூ - படி - 1, நேர்வாளம் -60, இவற்றை இரண்டு பழத் தேங்காய்ப்பூவுடன் கலந்து வேட்டிலவித்து நன்றாய் அவிந்தபின் துவைத்துச் சாறு பிழிந்து, அதில், உள்ளி - பலம் - 6, கடுகு - படி -¼ சீனக்காரம், பொரிகாரம், சவர்க்காரம், நவச்சாரம், இந்துப்பு கல்லுப்பு, வளையலுப்பு, பெருங்காயம், மிளகு, சுக்கு - வகை கழஞ்சு - 1, அரைத்துக் கரைத்துக் குழம்புப் பதத்திற் காய்ச்சிக் கொள்ளவும். முழுகினமறுநாள் காலையில் நோயின் பெலனுக்கும் உடம்பின் இயல் புக்கும் ஏற்ற அளவில் உட்கொண்டு வெந்நீர்



குடிக்க கெர்ப்பவாயு, கெர்ப்பசூலை, கெர்ப்ப விற்புருதி முதலியனவும் பக்கவாயு, நீராமை, பெரு வயிறு, வெப்புப்பார்வை இவையும் தீரும். உப்புப் புளி தவிர்க்கவும்.

**21. புனுகு நெய்**

பச்சைப் புனுகு கழஞ்சொன்று பகரு மஞ்சள் பலமுக்கால்
இச்சை மூன்று கழஞ்சிரத மிதனைக் கடுக்காய் நீர்கெடுத்துக்
கெச்சை வேர்க ளிருவேலி கிளர்ந்த கொடுவேலியின்வேரும்
கச்சை யணைக்கு முலைமானே கழஞ்சோ றொன்றுமூன்று
கொள்ளே. 1)

கொள்ளே சாரணை யின்வேருங் குலவு நாலு பிடிகொண்டு
துள்ளே துவைத்த சாறதனிற் றுலங்கு மாவி னெய்விட்டுக்
கள்ளே யனைய மொழிமாதே காய்ச்சிப் பதத்தில் வடித்ததனை
உள்ளே யருந்தில் வாயுவினொடு மிரத்த சூலையுமே. 2)

**22. குடிநீர் (கெர்ப்பவாயுவில் சலக்கான் இரத்தம் போனால் அதற்கு)**

i) வில்வம் வேரில்வைரம், சந்தனம், முத்தற்காசு, இலாமிச்சம்வேர் - வகை கழஞ்சு - 3. இடித்து நானாழிதண்ணீர்விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி எட்டுநேரம் குடிக்கவும்.

ii) செங்கழுநீர்க்கிழங்கு, வாழைத்தண்டு, தாழை விழுது, இருவேலி வேர் வகை - கழஞ்சு - 4, முன் போற் கஷாயஞ் செய்து குடிக்கவும்.

**23. கெர்ப்பவாய்விற் குத்துப்பொறுப்பு வயிற்றுப் பொருமல் இவைக்கு உடன் சிகிச்சை**

பூப்புவந்தமறுநாட் காலையில் நொச்சியிலையும் வெள்ளுள்ளியும் விழுதுவிட அரைத்துப் பாக்களவு வெந்நீரிற் குடிக்கவும். அடுத்ததநாள் முசுமுசுக்கையிலையும் வெள்ளுள்ளியுமரைத்து முன்போற் குடிக்சவும். நான்காநாள் முழுகின் உடனே ஈரப்புடவையுடன் வேப்பிலைச்சாறு காற்படி குடிக்கவும். இப்படி மூன்று நாட் குடிக்கக் கெர்ப்பவாயு, மலட்டுவலி, மலட்டுப்புழு முதலியன நீங்கிப் பிள்ளையுண்டாம். புளி நீக்கிப் பத்தியம் வைக்க.

## 3.09 கெர்ப்பக்கிருமி

கர்ப்பாசயத்தைப் பற்றி உண்டாகும் கிருமிகள் கெர்ப்பக் கிருமிகளாகும்.

**பொருமித் திரண்டு கீழ்வயிற்றிற் புண்பட்டமுந்திச் சியல்கொண்டு
மருவி வலிக்கும் வெள்ளையுண்டாம் வாய்நீரூறு முவாந்திக்கும்
உருவிப் பிழிந்தாற் போன்மேனி யுலர்ந்து தியங்கு மொடு வுண்டாம்
கிருமித் தோஷ மதுவென்னுங் கெர்ப்ப ரோகக் குணமாமே.**

**பாடலின் கருத்து:-**

வயிறு பொருமித்திரளும். கீழ் வயிற்றில் புண் உண்டாகும். அதிலிருந்து சியல் அல்லது கசிவு வெளியாகும். புண்பட்ட இடத்தை மருவி (சார்ந்து) வலிக்கும். வெள்ளைபடும். வாய் நீரூறும். வாந்தியுண்டாகும். உடம்பு மிகவும் உலர்ந்து (வரண்டு) காணும். தியங்கும். ஓடு(புண்)வுண்டாகும்.

**குறிப்புரை:**

இக்குறிகுணங்களைப் பார்க்குமிடத்து கர்ப்பாசயத்தைப் பற்றி உண்டாகும் கிருமிகளான Trichomonus vaginalis, Candida albicans என்பவற்றால் ஏற்படும் பாதிப்புகளை பெருமளவில் ஒத்துக்காணப்படுவது குறிப்பிடத்தக்கது.



| கெர்ப்பக் கிருமி | Trichomoniasis |
|---|---|
| 1. கீழ் வயிற்றில் புண் உண்டாகும் | 1. Inflammation of vulva +, superficial erosion of cervix + |
| 2. வலிக்கும் | 2. Vaginal wall tender + pruritus +,abdominal pain may be present |
| 3. வெள்ளைபடும் | 3. Profuse vaginal discharge + |
| 4. சியல் சீழ் வடியும். | 4. The discharge is frothy and irritating. secondary infection may occur |

| கெர்ப்பக் கிருமி | Candidiasis (moniliasis) |
|---|---|
| 1. கீழ் வயிற்றில் புண் உண்டாகும் | 1. There is often soreness and oe dema of the vulva |
| 2. சியல் சீழ் வடியும். | 2. A Reddened vaginal wall with profuse watery discharge; it is mucpu-rulent but without cheese patches. |
| 3. வெள்ளைபடும் | 3. There are profuse curdy discharge and intense pruritus |
| 4. வலிக்கும் | 4. Lower abdominal pain may be present |

### சிகிச்சை

1. *சிறு பாகலிலைச் சாறும், நல்லெண்ணெயும் மாத விடாய் வந்த நாள் முதல் மூன்றுநாளைக்குக் குடிக்கவும்.*
2. *வேப்பிலைக் காயமும் கொடுக்கலாம்.*
3. *இலசுனாதி முக்கூட்டெண்ணெயும் கொடுக்கலாம்.*
4. *கோரோசனைப் பற்பமும் கொடுக்கலாம்.*

**கோரோசனைப் பற்பம்**

மங்கை தனக்குக் கருக்குழியில் வாய்வும் புழுவுஞ் சூலைமுதன்
மாற்று மருந்து வேம்பாடல் மாஞ்சில் காய மரமஞ்சள்
தங்குங் குப்பை யிலவங்கஞ் சாதிக் காயும் பொரிகாரந்
தக்க கராம்பு வசுவாசி சாத்திர வேதி கடுகிஞ்சி
பொங்குங் கோவின் ரோசனையும் புகலுங் கன்னா ரக்கறாவும்
போத நிறையோர் கழஞ்சுசுத்தி புரிந்த வாளங் கழஞ்சிரண்டு
பங்கம் படாது வறுத்திடித்துப் பகரு மளவு வெருகடியாம்
கருக வெந்நீர் மலங்கழியும் பரியுங் கிருமி தொலைந்திடுமே.

*மருந்தை இளவறுப்பாய் வறுத்திடித்துப் பாதிக்கு வாளம் சேர்க்கவும். முழுகின மற்றநாள் காலையில் வாளஞ்சேர்ந்த பாகத்தில் வெருகடி கொண்டு வெந்நீர் கொள்ள மலம் கழியும். மாலையில் வாளஞ்சேராத பாகத்தில் வெருகடிகொள்ளவும். இப்படி - 10 - நாள் - 20 - நாள் கொள்ளலாம். வேண்டாதபோது வாளம் சேர்ந்த பாகத்தை நிறுத்தி மற்றதையே இருவேளை யும் கொள்க. புளி, எண்ணெய், கிரந்திப் பாதர்த்தம் தவிர்க்கவும்.*



5. *குடிமருந்து*

*பூத்த நாள் முதல் மூன்று நாளும் மலைவேம்பி னிலை பறித்து இரண்டாம் முறை கழுவிய கழுநீர் தெளித்துப் பிழிந்து அரைக்காற்படி குடித்து, நாலா நாள் முழுகி ஈரப்புடைவையுடன் சிறுபாகலிலையும் மலை வேம்பினிலையும் துவைத்துப்பிழிந்து நாலு, ஆறுமுறை வடிகட்டி அரைக்காற்படி குடிக்க. உப்புப்புளி தவிரவும் கெர்ப்பகிருமி மலட்டுப்புழு முதலியன நீங்கிக் கெர்ப்பந்தரிக்கும்.*

**குறிப்பு:** *கிருமி இருபத்தொருவகை என்றும், கெர்ப்ப வாயு பன்னிரண்டு வகை என்றும் தொகை கூறப்பட்டி ருப்பினும் விபரம் ஒன்றும் பெறப்படவில்லை.*

## 3.10 கெர்ப்ப விற்புருதி

*விற்புருதி என்றால் கட்டி. கர்ப்பப்பையைப்பற்றி உண்டாகும் கட்டி கெர்ப்ப விற்புருதி எனப்படும்.*

அடிவயி றதைத்து விம்மி யழுந்திடும் புண்போ னோவாம்
தடைபட விரத்த நின்று சற்றுச்சற் றாக வீழும்
இடருற வலிக்கு மாத விடையினா லிரத்த மில்லை
மிடைபடுங் குணமே கெர்ப்ப விற்புருதி யென்னலாமே. 1.

வயிற்றைவலிக்கும்வெள்ளைச்சமதுபோற் பிடவை தனிற் படுமாம்
உயிர்ப்பைச் சிறந்த வுடலுருக்கு முவந்தன் னத்தி னாடாது
வெயிற்கட் பொறாது தாகமுமா மிகவே மேனி தளர்ச்சியுண்டாம்
குயிற்சொற் பயிலுங் கொடியிடையீர் குறிக்கும் விற்புரு
திக்குணமே. 2.

**பாடலின் கருத்து:**

அடிவயிறு (Lower abdomen) அதைத்து, பொருமும். புண்போல நோகும். மாதவிடாய்க் குருதி தடைப்பட்டும், ஒழுங்கற்று, சற்றுச்சற்றாகவும் வரும். கடுமையாக வலிக்கும். மாதவிடாயில் இரத்தம் வராமலும் இருக்கும்.

வயிற்றை வலிக்கும். வெள்ளெச்சம் போலப்படும். (அதாவது மாதவிடாய் நன்கு வராது) உடம்பு மிகமெலியும். (உருகும்) பசியிராது. வெய்யிலைத் தாங்க முடியாது. தாகம் மிகும். உடம்பு தளரும்.

**குறிப்பு:-** விற்புருதி என்பது கு[illegible]மையாகும். அதனால் தான் சிகிச்சையில் விற்புருதி கூட்டோடு **விழும்** என்று கூறப்படுள்ளது.

மேலும் கெற்பவிற்புருதி 4 என்றும், 21 என்றும் கூறப்பட்டுள்ளது.

நாலுவகை விற்புருதிகளாவன:--

1) ஊற்றுவிற்புருதி
2) வற்றியவிற்புருதி (சுஷ்கவிற்புருதி)
3) முற்றிய விற்புருதி
4) தடித்த மலட்டு விற்புருதி

என்பனவாம்.

இவற்றுக்குக் காரணம் - பேய், தெய்வக் குற்றம்,பித்தம், கிருமி என்று கூறப்பட்டுள்ளது. **மலட்டு விற்புருதியில்** கீழ் வயிறு நோகும். சிறுநீர் **கடுத்து** இறங்கும்.



**கறைபடும் விற்புருதியில்** (வற்றின விற்புருதி) கடுக்கும், நாறும். **ஊற்றுவிற்புருதியில்** அழற்சிகாணும். **முற்றின விற்புருதியில்** கறைபடும் போது இறைச்சி கழுவின நீர் போலவும் மணத்துடனும் (Bad smell)போகும். (இந்நிலை uterine cancer ஆகும்)

**குறிப்புரை:-** கெற்பவிற்புருதி சாத்தியரோகம் என்று கூறப்பட்டுள்ளது. இதன் குறிகுணங்கள் Uterine Fibroid உடன் பெருமளவில் ஒத்துக் காணப்படுகிறது.

Fibroid or myoma is a benign tumour arising from muscular and fibrous tissue of uterus

| கெர்ப்ப விற்புருதி | FIBROID |
|---|---|
| 1. அடிவயிறு அதைத்துப் பொருமும் | 1. Abdominal swelling + |
| 2. புண்போல நோகும் வயிற்றை வலிக்கும் கடுமையாக வலிக்கும். | 2. Pain and feeling of weight in pelvis + |
| 3. மாதவிடாய்க் குருதி தடைப்பட்டும், ஒழுங்கற்று சற்றுச் சற்றாகவும் வரும். மாதவிடாயின் போது இரத்தம் போகாமலும் விடும். | 3. Menstrual disturbances + |

| | |
|---|---|
| 4. உடம்பு தளரும் | 4. Weakness + |
| 5. உடம்பு மெலியும் | 5. Emaciation |
| 6. பசியின்மை | 6. Loss of appetite |
| 7. தாகம் மிகும் | 7. Increase thirst |
| 8. வெள்ளெச்சம் போலப் படும் | 8. Leucorrhoeal discharge + |
| 9. சிறுநீர்கடுத்து இறங்கும் | 9. Dysuria (retention of urine due to the pressure of the fibroid and infection causes dysuria) |

**சிகிச்சை**

1. நறுவிலிநெய் கொடுக்கலாம்
2. நாவல்நெய் கொடுக்கலாம்
3. விசயசுந்தரி நெய் கொடுக்கலாம்.
4. தேங்காய் நெய்

சுக்கு, மிளகு, கழற்சிப்பருப்பு - வகை - கழஞ்சு - 3, சுத்திசெய்த வாளம் கழஞ்சு - 2, தேங்காய்ப் பாலி லரைத்துக் கரைத்துக் காய்ச்சிப் பதத்திலிறக்கி எண் ணெயும் கடுகும் வெவ்வேறாக வைத்துக் கொண்டு மாதவிடை வந்த மூன்றாம் நாள் காசிடை எண்ணெ யும் அவ்வளவு தண்ணீரும் கலந்து குடிக்கவும். மலங் கழியாவிடின் கடுகு கூடத்தின்னக் கழியும். கெர்ப்பக் கூடு விழும். கெர்ப்பவலி தீரும்.



5. குடிமருந்து

நாய்நாக்கி வடவேரை யிழைத்தெ டுத்து
 நலம்பெறவே யான்பாலிற் கொடுக்க நன்றாம்
மாயாத புளிநடலைக் கிழங்கு தன்னின்
 மாவினுட னோரளவா யரைத்தே யுண்ணில்
ஓயாம லொடுப்பாவுங் கெர்ப்ப ரோக
 முதரமதிற் கிருமிசிய லுள்ள நோவும்
தூய்தாகக் கழிந்துருகிப் போவ தென்று
 தொல்லுலகி னன்முனிவர் சொன்ன தாமே.

6. முருங்கைவித்து மூன்று பருப்புப் பொடிசெய்து ஆழாக்குப்பசுப்பாலிற் கொடுக்கவும். இப்படி - 3 நாட்கொடுக்க விற்புருதி மாறும்.

7. குளவரகு சுட்டசாம்பலை முட்கிளுவையிலைச் சாற்றிற் கலக்கிக் குடிக்க விற்புருதிக் கூடுவிழும்.

8. சுத்திசெய்து கட்டின பொன்னரிதாரம், பேய்க் குமட்டிக்காய் வகைக்கு நாலு மஞ்சாடியளவு அரைத்துக் கோசலத்திற் கரைத்துக்குடிக்க விற்புருதி கூட்டோடே விழும்.

9. களி

வேலம்பட்டையிடித்து இரண்டு ஆழாக்குத்தூள் நல்லெண்ணெயிலூறப்போட்டு. அதுபோலத் தண்ணீரி லூறப்போட்டு வெவ்வேறாக வைத்துக்கொள்ளவும். குறுவை நெல்லரிசிமாவைப் பட்டையூறின தண்ணீற் களிகிண்டி, அந்தக் களியில் பட்டையூறின எண்ணெய் வார்த்து மூன்று நாள்தின்னவும். பின்பு, எழுமுள்ளுப் பட்டை, இலுப்பைப்பட்டை, அத்திப்பட்டை, நாவற் பட்டை, சமன்கொண்டிடித்து நல்லெண்ணெயிலூறப் போட்டு அந்த எண்ணெய்சற்றே நக்கவும்.

## 3.11 கெர்ப்பப் புணர்ச்சி

கெர்ப்பமாக இருக்கையில் புணர்ச்சியில் ஈடுபடுவது கெர்ப்பப் புணர்ச்சியாம்.

இந்திரி யந்நீர் போல விடைவிடா தொழுகி விழும்
உந்தவே தங்குங் கெர்ப்ப முடைபடு முதிர மாகச்
சிந்தியே யோடும் வாயு திரட்சியாய்ச் செறுத்து விம்மும்
புந்தியை மயக்குங் கெர்ப்பப் புணர்ச்சியின் குணமா மென்னே.

**பாடலின் கருத்து:-**

இந்திரிய நீர் போல இடைவிடாது யோனிக் கசிவு இருக்கும். கர்ப்பம் சிதையும் (கருச்சிதைவு ஏற்படும்). இரத்தம் வெளியாகும். வாயு திரண்டு வயிறு விம்மும். புத்திமயக்கும்.

**குறிப்புரை:-**

கருத்தரித்திருக்கையில் உடலுறவு வைத்துக் கொள்ளலாமா கூடாதா என்ற கேள்வி அன்றும் உள்ளது, இன்றும் உள்ளது. கர்ப்பத்தின் ஆரம்ப மாதங்களிலும் (முதல் மூன்று மாதங்கள்) இறுதி மாதத் திலும் உடலுறவைத் தவிர்த்தல் வேண்டும் என்பது பொதுவிதி. மேலும் நஞ்சுக்கொடி கீழிருத்தல் (Placenta previa), முந்திய குறைமாதப் பிரசவங்கள் அல்லது கருச் சிதைவு (Previous history of abortion or premature delivery) ஏற்பட்டிருப்பின் அத்தகைய பெண்கள் உடலுறவை (புணர்ச்சியை) அறவே தவிர்ப் பது நன்று. அல்லாவிடின் கருச்சிதைவும், அதன் தொடர்ச்சியான இரத்தப் பெருக்கும் ஏற்படும்.



கெர்ப்பப்புணர்ச்சி சாத்தியரோகமாகும். இதற்குச் சிகிச்சை கூறப்படவில்லை. காரணம் கர்ப்பப் காலத் தில் புணர்ச்சியை (Sexual intercourse) தவிர்ப்பதே இதற்குரிய ஒரே வழியாகும்.

## 3.12 கெர்ப்ப வஞ்சனை

கெர்ப்ப வஞ்சனை என்பது கருத்தரிக்க முடியா மல் வஞ்சனை செய்தலாகும். பில்லி, சூனியம் முதலிய வற்றால் இது செய்யப்படும் என்பது கூற்று.

'பஞ்சென வெளுக்கு மேனி பறிந்திடுந் தலையு ரோமம்
நெஞ்சுற வெரித்து வாய்நீ ரூறியே நிதம்பங் காய்ந்து
மிஞ்சவே சோரை சாயும் வேர்வையு மிகவு முண்டாம்
வஞ்சனைக் குறையாங் கெர்ப்பம் வருத்திடுங் குணங்கடாமே

**பாடலின் கருத்து**

மேனி பஞ்சுபோல வெளுக்கும். தலைமயிர் உதிரும். நெஞ்செரியும். வாய்நீர் ஊறும். நிதம்பம் காய்ந்து போயிருக்கும். வியர்க்கும். வெள்ளைபடும்.

1. மேனி பஞ்சுபோல வெளுக்கும் - Pallor of the body
2. தலைமயிர் உதிரும் - Loss of hair
3. நெஞ்செரியும் - Heart burn
4. வாய் நீரூறும் - Increase salivation
5. நிதம்பம் காய்ந்துபோகும் - Dryness of the external genitalia
6. வெள்ளைப்படும் - Leucorrhoea

## 3.13 கெர்ப்ப மருத்தீடு

*கருத்தரிக்கவிடாது அல்லது கருவை அழிப்பதற்குச் செய்யப்படும் மருத்தீடு கெர்ப்ப மருத்தீடாகும்.*

அருந்திடும் பொசிப்புக் காணா வறவுலர்ந் தத்தி யாகும்
வருந்தியே நெஞ்சு லர்ந்து வரட்சியா யிரும லுண்டாம்
பொருந்திய கெர்ப்ப நீர்போற் பொங்கியே யுதிரம் போகா
மருந்தினீ டதனால் வந்த கெர்ப்பநோய் வகையி தாமே.

**பாடலின் கருத்து:-**

*உண்ட உணவு உடலிற் சுவறாது. அதாவது உடல் மெலியும். உடம்பு மிகவும் காய்ந்து போய் (மெலிந்து போய்) எலும்பும் (அத்தி) தோலுமாய்க் காணப்படுவர். நெஞ்சுலர்ந்து வரட்சியாயிருமலுண்டாகும்* (Dry cough) *கெர்ப்பநீர்போல (வயிறு) பொங்கும்.* (Ascitis?) *உதிரம் போகாது* (Amenorrhoea)

**குறிப்புரை:-**

*கெர்ப்பமருந்தீடு, கெர்ப்ப வஞ்சனை இரண்டும் ஏறத்தாள ஒரேமாதிரியானவை. கருத்தரித்தலைத் தடுத்தல் அல்லது உண்டான கருப்பத்தை அழித்தலை நோக்கமாகக் கொண்டவை. சொத்துப்பிரச்சினை, மாமியார் மருமகள் பிரச்சினை போன்ற காரணங்களுக்காக சில போலிச்சாமியார்கள் மூலமும், மந்திரவாதிகள் மூலமும் இது போன்ற கொடூரமான*



*செயல்கள் தற்போதும் சில இடங்களில் நடைபெற்று வருவதை இந்திய சின்னத்திரைப் படங்களில்* (T. V Dramas) *காண்கிறோம். இல்லாத ஒன்றை யாரும் படம் பிடித்துக் காட்டமாட்டார்கள் அல்லவா? உண்மையில் இங்ஙனம் கருவை அழிக்க செய்யும் முயற்சிகள்* (Criminal abortion) *சட்டவிரோத கருச் சிதைவு ஆகும். இது தண்டனைக்குரிய குற்றமாகும்.*

*கெர்ப்ப வஞ்சனை, கெர்ப்ப மருத்தீட்டுக்கு தனித் தனி சிகிச்சை கூறப்படவில்லை. காரணம் இவை மந்திரம், மாந்திரிகம் என்பவற்றுக்குரியனவாகக் கருதப்படுவதால் ஆகும்.*

# 4. பெரும்பாடு

## (Menorrhagia)

*பெரும்பாடு என்றால் மாதவிடாய் அதிகளவில் போதலாகும்.*

**வேறு பெயர்கள்:** *துவாலை, சூதகப்பெருக்கு, இரத்த ஸ்ராவம், அஸ்ருக்தரம், பிரதரம், இரத்தப்பெருக்கு.*

### பெரும்பாடு

'வருபெரும் பாட்டு ரோக மண்டியே யிருந்தால் வாலை
தருபரு வத்தி னோர்க்குத் தங்கிய சோரி தானும்
பொருமுய லுதிரம் போலப் போந்துவாய் கிழிந்து நாளும்
சொரிவது பெரும்பா டென்று சொல்லுவர் முறையு ணர்ந்தோர்.'
1.

### பெரும்பாட்டு ரோகத்தின் ஏது

தானிவை வருமுற் பத்தி தனைச்சொலின் வெப்பினாலும்
மானவ ரிடைவி டாதே மருவுத லாலுங் கெர்ப்பப்
பீனமொட் டித்து நொந்து பிளந்திட லாலு மோகம்
வான்முலை மடந்தை நல்லாய் வருத்துத லாலு முண்டே.
2.

உண்டினங் கறையா காதே யுக்கிர மிகுதி யாலும்
மண்டியே பித்த வாதம் வருசிலேற் பனம்ப கைத்துக்
கொண்டிடு முதரங் கெர்ப்ப முடைந்திடக் குடல்க லங்கித்
திண்டிறற் குழன்மா தர்க்குச் சிந்திடும் பெரும்பா டன்றே.
3.





*பிறப்புறுப்புக்களை அடிக்கடி தடவுதல் (Infection), வெப்பு, அதிகபுணர்ச்சி, மோகம், வாதபித்த, சிலேற்பனம் பகைத்தல் (மிகுதலால்) கருச்சிதைவு, முதலியனவாம்.*

### முத்தோஷ வேறுபாடு

"பாடுறு வாத கோபம் பகருமஞ் சணிப்புக் கொள்ளும்
தேடுறு பித்த கோபஞ் சிவப்பது குணமுண் டாக்கும்
வாடுறு மய்யின் கோபம் வகையது வெளுத்தி ருக்கும்
நாடுறு மிந்த வண்ண நாடொறும் போக்கி நின்றே."

*வாதம் கோபித்து (பகைத்து) உண்டாகும் பெரும் பாட்டில் துவாலை துணியில் மஞ்சணிறத்தைக் காட்டும். பித்தகோபத்தால் உண்டானால் செந்நிறத் தையும், ஐயகோபத்தாலுண்டாயின் வெளிறியும் இருக்கும்.*

### பொதுக்குணம்

நின்றுடல் வெதும்பிச் சென்னி நித்தமு நொந்து காது
பொன்றவே யிடித்துத் தண்ணீர் பொலவுட் டாக மாகி
அன்றவே யுடம்பெ ரித்துக் கீழ்வயி றதுக னத்துக்
கன்றிட வருத்தஞ் செய்யுங் கடுபெரும் பாட்டு ரோகம்

*உடல்வெதும்பல், தலைவலி, காதுவலி, உடம் பெரிதல், கீழ்வயிறு கனத்தல். மாதவிடாய் அதிகம் போதல்*

**குறிப்புரை:**

பெரும்பாடு என்பது Menorrhagia வைக்குறிக்கும் என்பது வெளிப்படை. கருப்பையில் இருந்து யோனி வழியாக அதிகளவில் குருதி வெளியாகும் நிலைகள் யாவும் பெரும்பாடு என்றே கூறப்படுகிறது. உதாரண மாக கருவழியும் போது ஏற்படுவதும், பிரசவத்துக்கு முன்னர் ஏற்படுவதும் கர்ப்பப் பெரும்பாடு (Ante partum hemorrhage) (நவீன மருத்துவத்தில் கருச்சிதைவு, Ante partum hemorrhage என்பன வேறுபடுத்திக் கூறப்பட்டுள்ளது.) என்றும் பிரசவத்தின்போது அல்லது பிரசவத்தின் பின்னர் ஏற்படும் அதி இரத்த இழப்பு பிரசவப் பெரும்பாடு (Intrapartum and post partum haemorrhage) என்றும் கூறப்படுகிறது.

**குறிப்பு** - இரத்தபித்தம் என்பது உடலின் பல்வேறு பகுதிகளினாலும் ஏற்படும் இரத்த இழப்பைக் (Bleeding tendencies) குறிக்கும். அந்த வகையில் கீழ் நோக்கிய இரத்தபித்த நோய்களில் ஒன்றாக பெரும்பாடு அமைகிறது.

**சிகிச்சை**

1. சூதக சிந்தாமணிக் குளிகை
2. கயரெண்ணெய்
3. நாவல் நெய்



நாவற்பாட்டை உலர்த்தியிடித்து 30 - பலம் கொண்டு 8 - மரக்கால் தண்ணீர்விட்டு நாலொன்றாய்க் காய்ச்சிப் பிழிந்து வடிகட்டி, அத்துடன் தயிரின்மேல் தெளிந்த தண்ணீர் புளியாரைச்சாறு, நறுநெய், வகைக்கு நாழி - 4 கூட்டி வில்வப்பழச்சதை, வெள்ளி லோத்திரம், சாம்பிராணி, பேரீச்சம்பழம், நாகம்பூ, வரட்சுண்டிவேர், தாதுமாதுளம்பூ, பிஞ்சு, பங்கம் பாளைவேர், முத்தற்காசு, ஓமம், நாவல் வித்து, கொட்டிக்கிழங்கு, கருஞ்சீரகம் - வகை - கழஞ்சு - 4, இடித்துக் கஷாய நீரிலரைத்துக் கலக்கிப் பதத்தில் வடித்து நாளொன்றுக்கு 2 களஞ்சு நெய் சற்றே வெதுப்பி உட்கொள்ள பெரும்பாடு, இரத்தபித்தம், இரத்த ரோகம், எலும்புருக்கி, அதிசாரம் இவையெல் லாந் தீரும். நெய்தின்னும்போது வில்வவேரிலாணி, சுக்கு, மிளகு இவை வகைக்கு நாலுகழஞ்சு நருக்கி இருநாழி நீர்வார்த்து உழக்காய்க் காய்ச்சிக்குடிக்க அரோசிகம் வாய் நீரூறல் இவை தீரும்.

4. நாவல்நெய் - II
5. பருத்திக்குழம்பு
6. இளநீர்க்குளம்பு

சிற்றாமுட்டி - சமூலம் - பலம் - 24 நறுக்கியிடித்து இளநீர் பதக்கிலிட்டு நாலொன்றாய்க்காய்ச்சிப் பிழிந்து வடித்து அதனுடன் பசுப்பால், தாழைவிழுதுச்சாறு, எலுமிச்சம்புளி - வகை - படி - 4, கூட்டிக் காய்ச்சவும். பாதிவற்றியபின்: அதிமதுரம், முத்தற்காசு ஏலம், இலா மிச்சம் வேர், நிலப்பனைக்கிழக்கு, வெண்கோட்டம்

வகை - பலம் - 1 சூரணித்துத்தூவிக் கருப்புக்கட்டி கூட்டிக் கிண்டவும். பதத்தில் நல்லெண்ணெய் சற்றே விசிறியிறக்கி நெல்லிக்காயளவு கொண்டு வெந்நீர் கொள்ளப் பெரும்பாடு, எலும்புருக்கி, சுக்கிலப் பிரமியம், உட்டணத்தால் வந்த மூத்திரரோகம், உள்வெக்கை இவை தீரும். மெலிந்த உடம்பு தடிக்கும். தாதுவிருத்தியும் பெலனுமுண்டாம்.

## 7. அடை

நற்சீரகம், அதிவிடயம், திப்பிலி, ஓமம், மாயாக் காய், ஆவரைவித்து, மேற்படிமரப்பட்டை, வேர்ப் பட்டை சமன்கொண்டு தூள்செய்து புழுங்கலரிசி மாவு டன் கலந்து அடைசுட்டு நல்லெண்ணெயிற் தோய்த் துத் தின்னப் பெரும்பாடு தீரும்.

## 8. எள்ளுப்பாகு

எள்ளு விளக்காமல் ஒருபடி, புல்லாந்தி, ஆல், அரசு, ஒதி, கறுக்காய், நாவல், செங்கத்தாரி, வேல், கிளுவை இவற்றின் பட்டைத்தூள் - வகைக்குப்பிடி - 1, சாதிக்காய், கராம்பு வசுவாசி, ஏலம், கறுவா, கடுக்காய், மதுரம் - வகை - கழஞ்சு - 1, பாகுபண்ணித்தின்னவும்.

## 9. ஈருள்ளிப்பாகு

உதிரவேங்கைப்பட்டை, கயட்டைப்பட்டை, அகில், நாவற்பட்டை, இதரை வாழைப்பூ, புளியங்கொட்டைத் தோல், மாதுளம்பிஞ்சு, இவை எல்லாம் சமன் இடித்துப் பதக்கு நீரில் எட்டொன்றாய்க்காய்ச்சிப்



பிழிந்து அதில் - ஈருள்ளி, வெள்ளுள்ளி, நற்சீரகம், திப்பிலி, ஏலம், கராம்பு, சாதிக்காய், மஞ்சள், மிளகு, செவ்வள்ளி, சுக்கு, மதுரம், மாயாக்காய் களிப்பாக்கு, மல்லி, சமனாகக்கொண்டு சூரணித்துத் தூவிக்கிண்டி எள்ளை விளக்காமல் ஊற்றியெடுத்த எண்ணெய் விசிறிப்பாகு செய்து தின்னப் பெரும்பாடு தீரும்.

## 10. சீரகப்பாகு

நற்சீரகம், திப்பிலி, ஓமம், வகை - பலம் 5, சிற்றா முட்டிவேர் - பலம் - 2, பறங்கிக்கிழங்கு - பலம் - 1, இடித்தரித்துத் தேன்கூட்டிப் பாகு செய்து தின்னப் பெரும்பாடு தீரும்.

## 11. திரிகடுகுப்பாகு

சுக்கு மிளகு திப்பிலியுந் துய்ய கடுகு வெந்தயமும்
ஓக்க வுள்ளி யோர்நிறையா யுற்ற தேங்காய்ப் பாலுடனே
மிக்க முருங்கைச் சாறதுவும் வெம்மை யான காற்றோட்டி
பக்க மாகச் சரிகொண்டு பாகாய்க் காய்ச்சி யெண்ணெய்விடே. 1.

விட்டே கொடுக்கிற் பெண்களுக்கு மேவும் பெரும்பா டுடனேதான்
சுட்டே கொல்லுங் கிருமியுடன் சுருக்காய்க் குத்தும் வாயுவதும்
மட்டில் லாத வுதரத்தில் வந்த வியாதி யத்தனையும்
திட்டமாக வோடுமென்று தென்பான் முனிவன் கூறினனே. 2.

## 12. சம்பாதிச்சூறணம் (நாவற்பட்டைச் சூறணம்)

நாவற்பட்டை பலமெட்டு நவிலு மத்தி மரப்பட்டை
மேவுந் நாலு பலங்கைப்பு மிகாம லிரண்டு பலமாகும்
பாவுந் தெங்கின் பாளையிள மணியுங் கொம்பி லரக்குடனே
பூவிற் படருங் கருவாழைக் கிழங்கும் வகைக்குப் பலமொன்றே. 1.

ஒன்றித் தவினும் பலங்காலா யுலர்த்தி யிடித்துச் சூரணித்துக்
குன்றிற் பெரிய முலைமடவாய் கூறுநாலு வராகனிடை
துன்ற வெடுத்தா நெய்பாலிற் றுய்க்கக் காலை மாலையிற்றேன்
நன்றே யுனது பெரும்பாடு நவிலு மெலும்பை யுருக்குவதும். 2.

போகும் கெர்ப்பக் கரைவு புழுக்கடி
ஆகும் யோனி யதிலுறு ரோகமும்
வேக மான துவாலையும் வெள்ளையும்
போகு மென்று புகன்றனன் மாமுனி. 3.

### *13. உண்டை*

i. *அவின், சாதிக்காய், கராம்பு, சுக்கு - சமன் கொண்டு கையாந்தகரைச் சாறு விட்டரைத்து உருட்டிப்பாலில் அல்லது தேனிற்குடிக்கப் பெரும் பாடு மாறும்.*

ii. *ஆவரம்பட்டைத்தூள் - படி - 2 சுக்கு, களிப்பாக்கு - வகை - பலம் -1, இரசம், கழஞ்சு -1/2 நாவற் பட்டைச் சாற்றிலரைத்துக் கிளுவங்காயளவு உருட்டிக் காலை மாலையாவின்பாலிற் கரைத்துக் குடிக்கத் துவாலை, பெரும்பாடு, வெள்ளை, சியல்புண்பாடு, வயிற்றுநோ மாறும்.*

iii. *வெள்ளைக்குந்திருக்கம், சாதிக்காய், சீலை சுட்டசாம்பல், வகை - வகை பலம் - 1, அபின் - கழஞ்சு - 2, பொடிசெய்து தேனிற்தின்ன மேற்கண்ட ரோகங்கள் தீரும்.*



### *14. குடிநீர்*

i. வேலம்பட்டை பலமொன்று வேர்க்கொம் புள்ளி களிப்பாக்குச்
சாலக் கைப்போ டிவைநாலுஞ் சரியா யவித்துக் கொள்வீரேல்
கோலத் துவாலை பெரும்பாடு குடலில் வலிப்போ டுட்குத்து
நீல வெள்ளை சியன்மாறி நிதானஞ் சுகத்தில் வருந்தானே. 1.

ii. *நாவல், புல்லாந்தி, அமுக்கிறாய், இலாமிச்சு, சிற்றமட்டி கடலிறாஞ்சி, ஆலம்முகை - விழுது, சுக்கு, கைப்பு, களிப்பாக்கு இவை அவித்து தேன் குங்குமப்பூ கூட்டிக்குடிக்க.*

iii. கருவாழைக் கிழங்கத்தி யாத்தி நாவல்
கருதுபட்டை யுடன்றெங்கின் பாளை தானும்
சரியாகப் பலங்கூட்டி யிடித்துத் தெள்ளித்
தானதிலே பன்னிரண்டு கழஞ்செ டுத்தே
இருநாழி யிருழக்காய்க் காய்ச்சி ஞாழ
லினிமையுறு தேனதிலே கலந்து கொள்ளத்
திருவாரைக் கெர்ப்பமழிப் பதுவுந் தீருந்
தீராத பெரும்பாடு தீரு மன்றே 2.

### *15. பெரும்பாட்டிற்குக் கைமருந்துகள்*

i. *ஆவரை சமூலம் இந்துப்புக் கூட்டியரைத்து எருமை மோரிற் குடிக்க, கிளுவம்பட்டையும் பருத்தியிலையும் அரைத்துப் பசுப்பாலிற் குடிக்க. இதற்குத் தீராவிடின் அபின்குன்றியிடை கூட்டி அரைத்துஎருமைத் தயிரிற் குடிக்க.*

ii. *வில்வம்வேர், மலைதாங்கிவேர், செவ்வந் திப்பூ, தேற்றாவேர்ப்பட்டை, சிற்றாமட்டிவேர் இவற்றைத் தனித்தனியாயினும் சிலவற்றை ஒருங்குகூட்டியாயினும் பசுப்பால் எருமைத் தயிர் இவற்றிற் குடிக்க நன்று.*

iii) சீலைசுட்ட சாம்பல் மூன்று பாக்களவு நல்லெண் ணெயிற் குழப்பித்தின்னவும்.

iv) கீரைவேரும் குளவிந்தமும் நல்லெண்ணெயிற் கொதிப்பித்துக் குடிக்க, புளியங்கொட்டைத் தோல் பொடித்துத் தேங்காய்ப்பாலிற் கலக்கிக் குடிக்க.

v) ஆவரையிலையும் மல்லிகையிலையும் அரைத்து எருமைத்தயிரிற் குடிக்க.

**குறிப்பு:** இம்மருந்துகள் உண்ணும் காலத்தில் வரகுவைக் கோல் சுட்டுத்தண்ணீரிற் கலக்கிக் கால்கழுவ நன்று.

vi) வேலம்பட்டையும் செங்கத்தாரிப்பட்டையும் அவித்த நீரில் சுக்குமாத்தூவிக் களிகிண்டித் தின்னத் துவாலை வெள்ளை, சியல் மாறும்.

vii) ஆவரம்பூ, இலை, வேர், பட்டை, பெருமருந்திலை சமன் இடித்த சாறு பிழிந்து அரையாழாக்கும் நல் லெண்ணெய் அரையாழாக்கும் கலந்து மூன்றுநாட் குடிக்க ஓயாத்துவாலை, சிக்குத்துவாலை, துளித்து வாலை, பெரும்பாடு, வெள்ளை, சியல் மாறும்.

## 4.01 துவாலை (மாதவிடாய்)

**வேறுபெயர் -** சூதகம்

மாதவிடாயின்போது வெளியாகும் கழிவே துவாலை எனப்படுகிறது.



பரராசசேகரத்தில் துவாலை மூன்று வகை என்று கூறப்பட்டுள்ளது. அவையாவன

1. ஓயாத்துவாலை
2. சிக்குத்துவாலை
3. துளித்துவாலை

இவைபற்றி விவரம் நூலில் காணப்படாவிடினும் ஓயாத்துவாலை என்பது பெரும்பாட்டையும் (Menorrhagia) சிக்குத்துவாலை என்பது மாதவிடாய் இடையில் ஏற்படும் நிலையையும் (Metorrhagia), துளித் துவாலை என்பது மாதவிடாய் குறைவாகப் படுதல் (Oligomenorrhoea) என்ற நிலையையும் குறிக்கின்றன.

**குறிப்பு:** சூதகபந்தம் (Amenorrhoea) என்பது மாதவிடா யின்மையாகும். இதுவே சூதகக்கட்டு என்றும் அழைக்கப்படுகிறது.

சூதகக்கட்டுக்கு கொடுக்கக்கூடிய மருந்துகள்

1) மஞ்சட் பற்பம்
2) பட்டுக்கருப்புச் செந்தூரம்

# 5. மலட்டு ரோகம்
## (Infertility and Sterility)

**வேறுபெயர் -** குழந்தைப்பேறின்மை, வந்தியாரோகம்

பெண்களுக்குக் குழந்தைப் பேறின்மைக்குரிய காரணங்களும் அதற்குரிய பரிகாரங்களும் இதில் கூறப்படுகின்றன.

**மலட்டுக்குறி**

திறிமல டாகும் வாறு சென்மநாட் டோஷத் தாலும்
உறுதிருப் பூ  த்த நாளா லொளிர்தெய்வ விரோதத் தாலும்
செறியுமுத் தோஷத் தாலுஞ் சிலேட்டும மிகுதி யாலும்
மறுவுற மலடா மென்று மாத... ..ருளிச் செய்தான்.

**பாடலின் கருத்து -**

**பெண்கள் மலடாவதற்குரிய காரணங்களாவன;**

1. சென்ம நட்சத்திர தோஷம் - அதாவது பிறந்த நட்சத்திரதோஷம் (ஜாதக அமைப்பிலுள்ள தோஷம் என்றே பொருள் கொள்ள வேண்டும்) பிறந்தநேரம், நட்சத்திரத்தைக் கொண்டுகணிக்கப் படுவது ஜாதகமாகும்.
2. பூப்படைந்த நாள் - அதாவது ருது ஜாதகத்தில் உள்ள தோஷம் ருதுவானநேரம், திகதியைக் கொண்டு கணிக்கப்படுவது ருது ஜாதகமாகும்.
3. தெய்வக்குற்றங்கள் - உ-ம்: நாகசாபம், தேவதைக் குறைபாடு



4. முத்தோஷக்குற்றம்
5. சிலேட்டுமம் மிகுதியாதல் (கர்ப்பாசயத்தில்) என்பனவாம்.
   இவற்றை விட கர்ப்பப்புழு

**குறிகுணங்கள்**

**செய்யுமக் குணங்கள் செப்பிற் செறுவி லக்கஞ் சேட்சித்து
நையுநீா போலப் பட்டா ணாபிக்கீழ் நோவுண் டாகும்
மையுழுத் தோஷ மானால் விலக்கமு மதம்போற் கண்டு
நொய்யவே யுதர மெல்லா நோவுற்றே யுவாந்தி கொள்ளும் 1.**

**கொள்சிலேற் பனதீ தாகிற் குணமது பலவுண் டாகும்
விள்ளுவிந் துவின்றீ தென்றால் விலக்கப்பச் சரிசி யூறித்
துள்ளிய கழுநீா போலத் தோற்றிநெஞ் செரியும் பண்டி
மெள்ளவே யெரித்து நாளும் விதமுறு பச்சை மேவும். 2.**

**பாடல் கருத்து -**

1. **விலக்கம் சேட்சித்து - அதாவது (மாதவிலக்கு) மாதவிடாய் குன்றி நையுநீா போலப்பட்டால் நாபிக்கு (Umblicus) கீழ் நோவுண்டாகும்.**

   **புழுத்தோஷமானால் (Infection) மாதவிடாய் அதிகமாக (மதம்போல்) ஏற்படுவதுடன் (Menorrhagia) வயிறும் நொந்து, வாந்தியும் ஏற்படும்.**

2. **சிலேற்பன கோபத்தால் ஏற்படின் மாதவிடாய் பலவிதமாகக் கழியும்.**

விந்துவினால் ஏற்பட்ட தீங்கு என்றால் (அதாவது ஆண்குறி (Penis) enter பண்ணுவதில் உள்ள பிரச்சினை என்றும் கருதலாம்)

மாதவிலக்கு பச்சரிசி ஊறியபின் வடித்த கழுநீர்போலத் தோற்றுவதுடன் நெஞ்செரியும், வயிறும் எரிந்து அஜீரணமும் உண்டாகும் (பச்சை மேவும் என்றால் அஜீரணம் என்றும் பொருள்)

## 5.01 மலட்டின் காரணம் – வேறு

இதில் மலட்டுத் தன்மைக்கான மேலும் ஏழு காரணங்கள் கூறப்பட்டுள்ளன. அவையாவன.

1. பூவாயில் விலகி நிற்றல்
2. பூவாயில் வேது (புகை) பிடித்தல்
3. கருவாயில் (பூவாயில்) சதை வளர்ந்திருத்தல்
4. கிருமி, புழு மிகுந்திருத்தல்
5. உஷ்ணம் மிகுந்திருத்தல்
6. கருக்குழியில் இரத்தம் மிகுந்திருத்தல்
7. பசாசு, தேவதை, நாகசாபம்

**குறிப்புரை** - இங்கு கூறப்பட்ட ஏழுகாரணங்களிலும் புணர்ச்சியை அடுத்து (after sexual inter course or durring sexual inter course) வேதனை ஏற்படுவதே முக்கிய குறியாக உள்ளது. இதனை Dyspareunia வுடன் ஒப்பிடுவது பொருத்தமுடையதாக உள்ளது.

குறிகுணங்கள்

1. பூவாயில் விலகி நிற்றல் - புருடனுடன் கூடி நீங்கிய பின் தலைநோகும் கருத்தங்காது.
   சிகிச்சை - பருத்தி வித்தும் கோழிப்பித்தும் அரைத்துப் பூப்பு வந்த நாலாம்நாள் குறியில் பூசி தாம்பத்திய உறவு கொள்ளக் கருத்தங்கும்.



**குறிப்புரை** - இந்நிலை Cervicle incompetence என்ற நிலையுடன் ஒப்பிடலாம். சிகிச்சை முறைகள் ஆய்வுக்குரியன.

2. பூவாயில் வேது பிடித்தல் - புகையினால் மணி கரைந்து (விந்து) கருத்தங்காது. கூடி நீங்கிய பிறகு உடம்பு நோகும்.

சிகிச்சை - சோமனாதிப்பெருங்காயம் நல்லெண்ணெய் விட்டரைத்து, நாலாம்நாள் பூசி பின் உறவு கொள்ளவும்.

**குறிப்பு** - புகையினால் விந்து கரையும் (அழியும்) என்பது - யோனிவாயில் சுரப்பின் PH அமிலத்தன்மை யுடையது (PH 4.5 - 5) ஆனால் விந்தணுக்கள் காரத்தன்மையான ஊடகத்தில்தான் உயிருடன் வாழும் - எனவே அதுபோன்ற ஒரு நிலையே இதுவாக இருக்கலாம்.

3. கருவாயில் தசை வளர்ந்திருந்தால் கருத்தரியாது. கூடி நீங்கிய பின் நெஞ்சுநோகும்.

   சிகிச்சை: கஸ்தூரியும், திப்பலியும் கோழிப்பித்தும் கூட்டியரைத்துப் பூசியபின் உறவு கொள்ளவும்.

   **குறிப்பு:** இது Fibroid ஆக இருக்கலாம்.

4. கிருமி, புழு மிகுந்திருந்தால் - மணியை (விந்து) தின்றுவிடும். கூடி, நீங்கியபின் கீழ்வயிறும், அடிமுதுகும் நொந்து வலிக்கும்.

1. நற்சீரகமும், மிளகும், நல்லெண்ணெயிலாதல், கடுகெண்ணெயிலாதல் அரைத்து முன்போலப் பூசி தாம்பத்திய உறவு கொள்ளவும்.
2. முடக்கொத்தானிலையும், கருங்குறுவையரிசியும், கோழிமுட்டையும், மிளகும் அரைத்து அடைதட்டி, விளக்கெண்ணெயில் பொரித்துத் தின்ன மலட்டுப் புழு, கெர்ப்பப்புழு முதலியனமாறும்

**குறிப்புரை:**

யோனியைப் பற்றி ஏற்படும் Trichomoniasis, Candidiasis போன்ற கிருமித் தொற்றுக்களை இங்கு கருத்திற் கொள்ளலாம்.

5. உட்டணம் மிகுந்திருந்தால் - மணிகருகிவிடும். அனலாக வீசும். கூடி நீங்கிய பின் கெண்டைக் கால் வலிக்கும்.
   1. அபின், பொரிகாரரம், கடுக்காய், கூட்டி யரைத்து முன்போலப் பூசி தாம்பத்திய உறவு கொள்ளவும்.
   2. கருங்குறுவையரிசிமாவில் ஆவாரமிலை கூட்டிப் புட்டவித்து நெய்விட்டு மூன்று நாள் தின்னவும்.
   3. ஏலும்,இலவங்கம், செங்கழுநீர், கோட்டம், மதுரம், செவ்வள்ளி, மல்லி, கடுகு, திப்பலி, சந்தனம், வெட்டிவேர், இலாமிச்சம்வேர், சதகுப்பை, சாதிக்காய், நற்சீரகம், நன்னாரி, மயில்மாணிக்கம், முத்தற்காசு, சிற்றாமட்டி, சீந்தில் தண்டு, பொன்னாங்காணி இவற்றை யெல்லாம் பசுப்பாலில் ஊறப்போட்டு, அரைத்துக் கரைத்துக் குடிக்கவும்.
   4. பசுநெய்யில் அதிவிடயமும் எலுமிச்சம் புளி யும் கூட்டிக் காய்ச்சித் தலைக்கு வைக்கவும்.
   5. சஞ்சீவி மிருத்தியாதித்தைலம், சஞ்சீவிச் சூரணம், நறுவிலிநெய், நாவல்நெய் முதலி யன கொடுக்க நன்று.

**குறிப்புரை:**

விந்துவுக்கும் Vaginal or Cervical PH இற்கும் இடையிலுள்ள ஒவ்வாமை இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். அவ்விதமே மிக அரிதாக சில விந்துப் பாய்பொருட்கள் (Seminal fluid) பெண்ணின் கருப்பையில் ஒவ்வாமை நிலையை அடைய நேரி டுவதால் கருத்தரித்தலுக்கு வாய்ப்பே இல்லாமல் போவதும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

6. கருக்குழியில் இரத்தம் மிகுந்து புறத்திற் சிதறும் கூடிய நீங்கியபின் குளிர் நளிருண்டாம்.

   சிகிச்சை - நீர்க்கோழிப்பித்தும், கஸ்தூரியும், திப்பலியும் அரைத்து முன்போற் பூசி தாம்பத்திய உறவு கொள்ளவும்.

7. பசாசு, தேவதை, நாகசாபத்தினால் ஏற்படின் கூடி நீங்கியபின் நோ நோன்பனவு இல்லையாகும். (அதாவது மனத்திருப்தி இல்லையென்பது கருத்துப் போலும்)

   சிகிச்சை - கஸ்தூரி, புனுகு, குங்குமப்பூ, பொன் னம்பர் அரைத்துப் பூசி தாம்பத்திய உறவு கொள்ளவும்.

   குறிப்பு - நாகசாபம் நீக்கி தெய்வப்பிரீதி செய்து முன்னர் கூறிய மருந்தகளில் தகுந்தவற்றை உட்கொள்ளக் கர்ப்பம் உண்டாகும்.

குறிப்புரை - நாகசாபம் நீங்குவதற்கு நாகசாந்தி செய்வதும், ஆலயங்களில் நாகப்பிரதிஷ்டை செய்வது வழக்கம். அவ்விதமே தெய்வப் பிரீதிக் கும் உரிய சாந்தி, பரிகாரங்கள், சந்தானகோபாலர் பிரதிஷ்டை என்பன மருத்துவ - சமய - சோதிட நூல்களில் கூறப்பட்டுள்ளன. குழந்தை யின்மைக்கு unknown causes பற்றி நவீன மருத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.

மருத்துவப் பரிசோதனையில் ஆண், பெண் இருவரிடத்தும் எவ்வித குறையும் இல்லாதவிடத்து இத்தகைய பரிகாரமுறைகளைப் பின்பற்றுதல் வெற்றி யளிக் கூடும். குழந்தை வேண்டி விரதமிருத்தல், அரசமரத்தை விதிப்படி சுற்றி வழிபடுதல், தலயாத் திரை, முற்காலத்தில் காசி, இராமேசுவரம் - போன்றன வியக்கத்தக்க வகையில் பலருக்கு பயன்கொடுத்திருப் பதும் நோக்கற்குரியது.

குறிப்புரை - II மலட்டுக்கான காரணங்கள் பற்றி வேறுநூல்களில் பின்வருமாறு காணப்படுகிறது.

## 5.02 அறுவகை மலடு (சாம்பசிவம்பிள்ளை அகராதி)

1. வாதமலடு (வாதத்தால் ஏற்படுவது)
2. பித்த மலடு ( பித்தத்தால் ஏற்படுவது)
3. சிலோத்தும மலடு ( கபத்தினால் வருவது)
4. கிருமி மலடு ( கிருமியால் வருவது)
5. சூதகமலடு (கர்ப்பாயாசக்கோளாறுகளால் வருவது)
6. மாமிச மலடு (கர்ப்பாயாசக் கட்டியால் வருவது Myoma (Fibroid)



## 5.03 ஐவகை மலடு (சாம்பசிவம்பிள்ளை அகராதி)

1. ஆதிமலடு - (பிறப்புவாசியாக ஏற்படுவது) congeintal causes (Infertility)
2. காகமலடு - (இரண்டு குழந்தைகள் மட்டும் உள்ள நிலை) (Sub fertility)
3. கதலி மலடு - (ஒரு குழந்தை மட்டும் உள்ள நிலை) (Sub fertility)
4. கருப்பமலடு - (கருப்பாசயக் காரணிக்களால் ஏற்படுது)
5. ஆண்மலடு - (ஆணில் உள்ள குறைபாடு களால் ஏற்படுவது)

### சிகிச்சை

**1. கெர்ப்பந்தரிக்க நெய்**

ஆடாதோடைச்சாறு, சீந்திற்சாறு, பாகலிலைச் சாறு, வெள்ளாட்டுப்பால், நெய் வகை - படி 1 கூட்டி நாலா நாள் வடித்து அந்திசந்தி 20 நாள் காசிடை நக்க உதரநோ கிருமி புழு முதலியவை நீங்கிக் கருத் தரிக்கும்.

**2. கெர்ப்பந்தரிக்க ஆமணக்கெண்ணெய்**

ஆமணக்கம் முத்தை இளநீரில் அவித்து உலர்த் தித் தூள்செய்து இளநீரில் கலக்கிக்காய்ச்சி யெடுத்த

எண்ணெய் - படி - 1 முடக்கொற்றானிலைச் சாறு, கழற்சியிலைச்சாறு, குமரிமடற்சாறு மூன்றும் படி - 1 கலந்து மூன்றுநாட் சூரியபுடம் வைத்து நாலா நாட்காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து பூப்பு வந்த நாலாநாள் முழுகி அன்றுதொடக்கம் ஒவ்வொரு சிப்பி யெண்ணெய் - 12 நாள் அந்திசந்தி தின்றுவர கெர்ப் பந்தரிக்கும்.

**௩. வேறு நெய்**

அமுதவள்ளிக்கிழங்குச்சாறு, தூதுவளை, பிரமி. வேம்பு, கழற்சி, குறிஞ்சா இவை இலைச்சாறு - வகை - படி - 2 நறுநெய் படி 1 கலந்து காய்ச்சிப் பதத்தில் வடித்து முழுகினநாள் முதல் காலை மாலை கரண்டி நெய் நக்கப் பிள்ளையுண்டாம்.



# ௬. கருச்சிதைவு
# (Abortion)

**வேறுபெயர்:-** காய் விழுதல், பிண்டங்கரைதல், கரு அழிதல், கர்ப்பம் அழிதல், அழிகர்ப்பம், கர்ப்ப ஸ்ராவம், கர்ப்பப்பாதம்.

தமிழ் மருத்துவ நூல்களின்படி கருவுக்கு உயிருண்டாதல் ( அதாவது உயிருடன் பிறத்தல்) ஒன்பது மாதத்துக்குப்பின்னர் என்பதாகவுள்ளது. எனவே, அதற்கு முன்னர் கருப்பையில் கருத்தங்காது அழியும் அனைத்து நிலையுமே கருச்சிதைவு என்றே கூறப்படுகின்றது. அதாவது குழந்தை உயிருடன் பிறக்காது இறந்து பிறந்தாலும் அதனையும் கருச் சிதைவு என்பதற்குள் அடக்கப்பட்டிருப்பது போலவே தோன்றுகிறது. (எனினும் சில இடங்களில் கருப்பை யில் குழந்தை இறத்தல் பற்றியும் கூறப்பட்டுள்ளது)

எனவேதான் கெர்ப்பரட்சணி போன்ற மருந்து களில் 10 மாதம்கள் வரை கருச்சிதைவு ஏற்படாமல் குழந்தை பிறப்பதற்கான மருந்துகள் என்று கூறப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**குறிப்புரை:-**

தற்கால மருத்துவ முறைகளின்படி ஆறு மாதங் களுக்குப் பின்னர் பிறக்கும் குழந்தையை தகுந்த வழிமுறைகளைப் பின்பற்றி மருத்துவமனைகளில் உயிருடன் வாழச்செய்ய முடியும் என்று கண்டறிந்

துள்ளனர். எனவே கருச்சிதைவு என்பது 24 கிழமைகளுக்கு முன்னர் கருவழிதலைக் குறிக்கும். அதன் பிறகு குழந்தை இறந்து பிறத்தலை Still birth என்று கூறுவர்.

## சிகிச்சை

கருச்சிதைவுக்கான காரணங்கள் பலவாக இருக்கலாம். அவைபற்றி பரராசசேகரத்தில் விரிவாகக் கூறப்படவில்லை. ஆயினும் கருச்சிதைவைத் தடுப்பதற்கான பல்வேறு மருந்துகள் கூறப்பட்டிருத்தல் குறிப்பிடத்தக்கது.

உதாரணமாக, கெர்ப்பரட்சணி. கெர்ப்பத்தை ரட்சிப்பது - பாதுகாப்பது என்று பொருள். அதாவது கருச்சிதைவு ஏற்படாமல் தடுப்பது கர்ப்பரட்சணியாகும். எனவே, கர்ப்பரட்சணி ஏற்கெனவே கருச்சிதைவு ஏற்பட்ட சரித்திரமுள்ள ஒரு பெண் மீண்டும் கருத்தரிக்க நேரிடின் அக்கருவை அழியாமல் பாதுகாக்கக் கொடுக்கப்படும் ஒரு மருந்தாகும். எனவே, சாதாரண கர்ப்பிணிகளுக்குக் கெர்ப்பரட்சணி கொடுக்கப்படல் அவசியமில்லை என்பதும் வெளிப்படையாகின்றது.

### 1. கெர்ப்பரட்சணி

கருவுற்ற முதல் மாதம் தொடக்கம் பத்துமாதங்களுக்கும் ஒவ்வொருமாதத் தொடக்கத்திலும் முதல் மூன்று நாளைக்குக் கீழ்க்காணும் மருந்துகளை முறைப்படி குடித்துவரக் கருச்சிதைவு முதலிய விக்கினங்களின்றிப் பூரணசுகத்தோடு கெர்ப்பம் வளரும் (மாதத்தொடக்கம் என்பது முழுகினபக்கத்தையே



குறிக்கும். ஆமணக்கெண்ணெய் முதலியவற்றைப் பேதிக்குச் சாப்பிட வேண்டினோரும் இக்காலங்களிற் சாப்பிடுவதே நன்று.)

**1ம் மாதம்** தாமரைப்பூவிலுட்காயும் நற்சந்தனமுமரைத்துப் பசுப்பாலிற் குடிப்பது.

**2ம் மாதம்** நெய்தற்கிழங்கு, முதற்காசு, கஞ்சா, மதுரம், இஞ்சிக்கிழங்கு வகை - கழ - 1 அரைத்துப் பாலிற் கலக்கிக் குடிப்பது.

**3ம் மாதம்** சந்தனம், தகரம், கோட்டம், தாமரையல்லி, சீந்திற்றண்டு சமன் குளிர்ந்த தண்ணீரில் அரைத்துக் குடிப்பது.

**4ம் மாதம்** நெய்தற்கிழங்கு, சீந்திற்றண்டு, நிலப்பனைக் கிழங்கு, நெருஞ்சிவேர்-பாலிலரைத்துக் குடிப்பது.

**5ம் மாதம்** சாரணைக்கிழங்கு, இலுப்பைப்பூ, அழிஞ்சில் விதை, தகரம், எள்ளு, நெய்தற்கிழங்கு, பாலில் அரைத்துக் குடிப்பது.

**6ம் மாதம்** முயற்பித்து தண்ணீரிலரைத்துக் குடிப்பது

**7ம் மாதம்** கச்சோலம், ஆமணக்குவேர், நெய்தற்கிழங்கு அரைத்துத் தண்ணீரிற் கலக்கித் தேன்கூட்டிக் குடிப்பது.

**8ம் மாதம்** மதுரம், தாமரைவித்து, முத்தற்காசு, விளாம்பிஞ்சு, அத்தித்திப்பிலி, நெய்தற்கிழங்கு அரைத்துப் பாலிற் கலக்கிக் குடிப்பது.

**9ம் மாதம்** வட்டுவிரை பொடிசெய்து தேனிற் குழப்பித் தின்பது.

**10ம் மாதம்** முதற்காசு, முந்திரிகைப்பழம், நெய்தற்றண்டு, சீனி இவையரைத்துத் தேனிற் குழைத்துத் தின்பது.

(இவற்றிற்கெல்லாம் பிரமாணம் சரக்கினியல் புக்கும் உடம்பின் நிலைக்கும் ஏற்றபடி கொள்க.)

## 2. சஞ்சீவிமிருத்தியாதி எண்ணெய்

1 தேக்கரண்டி வீதம் காலை, மாலை கருத்தங்கிய நாலாம் மாதம் முதல் மாதந்தோறும் முதல் மூன்று நாள் உண்டுவர, மலட்டுத்தன்மை நீங்கி கருவுண்டாகும். கருப்பம் நன்கு வளரும். கருவையழிக்கும் வாயு, கிரந்தி தீரும். பிள்ளை சுகமாகப் பிறக்கும்.

## 3. கர்ப்ப சஞ்சீவி எண்ணெய்:—

மாதந்தோறும் 1 தேக்கரண்டி வீதம் முதல் மூன்றுநாள் உண்டுவரவும். தலைக்கு வைத்து வரவும். வாய்வு, மலக்கட்டு நீங்கி சிசுவும் நன்கு வளர்ந்திடும்.

**குறிப்புரை:**

இங்கு மாதந்தோறும் முதல் மூன்று நாட்கள் காலை, மாலை, 1 தேக்கரண்டி வீதம் எண்ணெய் உட்கொள்ளவேண்டும் என்று கூறப்பட்டிருப்பினும் மூன்றாம் மாதத்தின் பின்பே அவ்விதம் உட்கொள்ளக் கொடுக்கவேண்டும் என்பதாக உள்ளது. மேலும் இவை தற்கால உணவுமுறைகளுடனும் உடல் வன்மையுடனும் ஒப்பிடுகையில் பேதியை உண்டாகக்கக் கூடியனவாகவும் உள்ளன. எனவே, கருச்சிதைவைத் தடுப்பதற்குப்பதில் கருச்சிதைவைத் தூண்டவுங்கூடும். இது பற்றி மேலாய்வுகள் அவசியமாகின்றன.



4. சிற்றாமணக்குமுத்தை இளநீரில் அவித்துலர்த்தி இடித்து இளநீரில் கலக்கிக் காய்ச்சி எடுத்த எண்ணெயைக் காய்ச்சிய பசுவினது பாலும் கற்கண்டுப் பொடியும் கலந்து மூன்றாம் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒரு நாள், இரண்டு நேரம் வீதம் கொடுத்துவர நன்று. சகல நோயும் தீரும் பிள்ளையும் சுகமாய்ப் பெறுவள்.

5. சிற்றாமட்டிவேர், பேராமட்டிவேர் சமனிடை கொண்டு ஒரு படி தண்ணீர் வைத்து நாலொன்றாய்க்காய்ச்சி வடித்த நீரில் பச்சைவெண்ணெய் ஒரு கொட்டைப் பாக்களவு கூட்டி இரண்டாம் மாதம் 3 நாளும் மூன்றாம் மாதம் 4 நாளும் நாலாம் மாதம் 5 நாளும் இப்படி ஒன்பது மாதத்துக்கும் கொடுத்தாற் சகலநோயும் தீர்ந்து கரு வளரும். சுகப்பிரசவமும் உண்டாகும்.

6. வேறு

* **நாலுமாதக்கட்டி கரைந்தால்**

  அதாவது நாலுமாதத்தில் கருச்சிதைவு ஏற்பட்டால் வாழைப்பூவும், விளாங்காயும் சமன் எடுத்து அரைத்து கரைத்துக் கொடுக்கவும்.

* **ஐந்து மாதக் கட்டி கரைந்தால்**

  காரைக்காயும், உளுந்தும், நனைய வைத்து தோல்போக்கி அரைத்துக் கொடுக்கவும்.

* **ஏழு, எட்டு, ஒன்பது மாதங்களில் உடைந்தால்**

  மலைதாங்கியிலையும், எள்ளுப் பிண்ணாக்கும் உளுந்தும் கொடுக்கவும்.

# ௭. கெர்ப்ப சூலம்

*கெர்ப்ப சூலம் என்பது கருத்தரித்த பின்னர் கர்ப்பிணிகளுக்குக் கர்ப்பாயாசத்தைப் பற்றியுண் டாகும் கடுமையான வலி (சூலத்தால் குற்றுவது போன்ற வேதனை) யாகும். அதற்கு உரிய சிகிச்சை களை மேற்கொள்ளாவிடில் கருச்சிதைவும் வேறுபல தீங்குகளும் ஏற்படும் என்பது கருத்து.*

*சிலர் கெர்ப்பசூலம் என்பது கருவுற்ற பத்து மாதங்களிலும் வரும் நோய்கள் என்றும் கூறுவர்.*

**கெர்ப்பசூலம்**
**பத்துமாதங்களல வரும் நோய்களும்**
**சிகிச்சையும்**

முதற்றிங்க டனிற்சூலம் வந்து தோன்றின்
முதியகைகா னெஞ்செரியும் வசனப்பூ வின்
இதழ்ச்சந்த மோரொன்று கழஞ்சு கொண்டே
யினியபசு வின்பாலிற் குடிக்கத் தீரும்
விதற்பமுறு மிரண்டான திங்கள் தோன்றின்
மேவுசலங் கழுநீர்போற் கழியுங் கொட்டி
மதாப்பான கிழங்குடனே கொட்ட மேல
மருந்துகளோ ரொன்றுடனே கழஞ்சு வாங்கே. 1.

வாங்கியரைத் தேயாவின் பாலிற் கொள்க
மருவியமூன் றாமாதந் தோன்றிற் சூலம்
தேங்குமிரு விழிசிவந்தே யிருண்டு காட்டுஞ்
செங்கமல வளையமுடன் கொட்டி தன்னில்



ஓங்குகிழங் கினைநீரை வார்த்த ரைத்தே
யுறுபசுவின் பால்கலந்து குடிக்கத் தீரும்
தாங்கியநா லாந்திங்க டோன்றிற் சூலந்
தளருதிரங் கலங்கியே கட்டி தண்ணீர். 2.

நீருடனே விழும்வயிறு வலிக்கு நோகு
நெருஞ்சியின்வே ருங்கொட்டிக் கிழங்குமானைத்
தீருறுதந் தமுநீரி லரைத்துப் பாலிற்
சிறந்திடவே குடிக்கநன்று தீரு மஞ்சாம்
வாரமுறு திங்கடனிற் சூலந் தோன்றில்
வயி றுவலித் திடுங்கீழா முதுகு நோகும்
சாரமுறு திப்பிலியுஞ் சந்தங் கொட்டி
தனிற்கிழங்கு முதிரையினிற் கனியுந்தானே. 3.

தானமுறு மோரொன்று கழஞ்ச தாகத்
தகர்த்தரைத்துப் பசுப்பாலிற் குடிக்கத்தீரும்
..........................................................................
.......................................................................... 4.

*(மிகுதி பிரதிகளிற் காணப்படவில்லை.)*

**பாடலின் கருத்து:-**

1. *கருவுற்ற முதல்மாதத்தில் சூலம் வந்தால் கை, கால் நெஞ்சு எரியும்.*
*அதற்கு தாமரைப்பூவிதழும், சந்தனமும் ஒரு களஞ்சு வீதம் பசுப்பாலில் கலக்கிக் குடிக்கத் தீரும்.*

2. இரண்டாம் மாதம் சூலம் வந்தால் சிறுநீர் கழுநீர் போலக் கழியும்.
அதற்குக் கொட்டிக்கிழங்கு, கோட்டம், ஏலம் என்பன ஒரு களஞ்சு வீதம் எடுத்து அரைத்து பசுப்பாலில் கலக்கிக் குடிக்கத் தீரும்.

3. மூன்றாம் மாதம் சூலம் தோன்றினால் கண் விழிகள் இரண்டும் சிவந்து பார்வையும் மங்கலாக காணப்படும்.
அதற்குச் செந்தாமரை வளையமும் கொட்டிக் கிழங்கும் சமவளவு எடுத்து நீர்விட்டரைத்துப் பசுப்பாலில் கொள்ளத்தீரும.

4. நாலாம் மாதம் சூலம் வந்தால் இரத்தம் கலங்கி, கட்டி நீராய் விழும். வயிறு வலிக்கும். நோகும். அதற்கு நெருஞ்சிவேர், கொட்டிக்கிழங்கு, யானைத் தந்தம் சமன்எடுத்து நீர்விட்டரைத்து பாலிற்குடிக்க மாறும்.

5. ஐந்தாம் மாதம் சூலம் வந்தால வயிறு வலிக்கும். கீழ் முதுகு நோகும்.
அதற்குத் திப்பலியும், சந்தனம், கொட்டிக்கிழங்கு, முதிரைக்கனி வகை ஒரு களஞ்சு வீதம் எடுத்து அரைத்து, பசுப்பாலிற் குடிக்க மாறும்.
( ஏனைய மாதங்கள் பற்றி பாடலில்லை)



## 7.01 கெர்ப்ப சூலம் – வேறு

முதன்மாத மடிவயிறு வலித்துக் காட்டு
முந்துநல்ல சந்தனத்தோ டிலாமிச் சம்வேர்
திதமான பசுப்பாலி லரைத்து மூன்று
தினங்குடிக்க லாமிரண்டாந் திங்க டன்னில்
விதமானநீர் கடுக்குங் கொட்டி கொவ்வை
வியந்திடுதா மரைமூன்றுங் கிழங்கெ டுத்துப்
பதமாக பசுப்பாலி லரைத்து மூன்று
பரிவுடைய நாள்களுக்குப் பருக லாமே. 1.

ஆகியமூன் றாமாத நோவுண் டாகு
மம்புயத்தின் மூலமொடு நெய்தன் மூலம்
சேகுறுசீ ரங்கைப்புச் சரிகொண்டாவின்
நீம்பாலின் மூன்றுதின மரைத்துக் கொள்க
வாகுறுநா லாமாத நீர்க டுக்கும்
வயிறுவலித் திடுமுதிரக் கட்டி வீழும்
பாகுறுசிற் றேலமரை வராக னோடு
பகர்நெய்தன் மூலமுமான் பாற்கொண் முந்நாள். 2.

நாளுடைய மாதமைந்திற் சோரி தன்னை
நயமுறவே கரைத்ததுபோற் கட்டிவிழும்
நாள்வனசங் கொட்டியினிற் கிழங்கி னோடு
நல்லாவிற் பாலின்முந் கிழங்கி னோடு
நீளுறவா றாந்திங்கள் வயிறே யூது
நெய்தன்மலர் மூலமுமுந் திரிகைப் பழத்தோ
டாளியன்மா தளம்பழமு மரைத்தான் பாலி
லருந்திடநன் றாமூன்று நாளுந் தானே. 3.

தானியலே மூம்மாதம் வயிற்றிற் பிள்ளை
    தான்பிறக்க நோவதுபோ னோம தற்கு
வானியனெய் தற்கிழங்கும் பூ வும் கொட்டி
    வளர்கிழங்குஞ் சர்க்கரையு மோரொன் றாகக்
காணுறுநாற் கழஞ்சாவின் பாலின் மூன்று
    கருதியநாட் பருகிடலா மெட்டாந் திங்கள்
ஊனுடலிற் பசித்தாப்போ லிருக்கும் வாய்நீ
    ரூறிவிழு மகப்பெறல்போ லேயி ருக்கும். 4.

இருக்குநல்ல சந்தனத்தோ டிலாமிச் சந்தூ
    ரிகல்வனச முடன்கொட்டிக் கிழங்கோ ரொன்று
பெருக்கவறு கழஞ்சுபசுப் பாலின் மூன்று
    பெட்புறு நாட் கொள்ளுகவொன் மதுமா சந்தான்
விருப்புறுபற் பலதீனு மெட்டாந் திங்கள்
    விளம்பியநன் மருந்தாகும் பத்தாந் திங்கள்
திருக்கறுகெர்ப் பனியுடைய சுபாவ மன்றித்
    தீயநோய் களின்மருந்து கைகண் டாரே.

1. *முதல் மாதம்:- அடிவயிறு வலிக்கும். அதற்கு வெண்சந்தனம், இலாமிச்சம்வேர், பசுப்பாலில் அரைத்து மூன்றுநாள் குடிக்கவும்.*
2. *இரண்டாம் மாதம்:- நீர் கடுக்கும் அதற்குக் கொட்டிக்கிழங்கு, கொவ்வைக்கிழங்கு, தாமரைக்கிழங்கு சமன் எடுத்து ( 1 களஞ்சுவீதம்) பசுப்பாலில் அரைத்து மூன்று நாள் குடிக்கவும்.*
3. *மூன்றாம் மாதம் - நோவுண்டாகும். அதற்குத் தாமரைக்கிழங்கு, நெய்தற்கிழங்கு, சீரகம், கைப்பு சமன் எடுத்து பசுப்பாலில் அரைத்து மூன்றுநாள் குடிக்கவும்.*



4. *நாலாம் மாதம்:- நீர்கடுக்கும். வயிறு வலிக்கும் இரத்தக்கட்டி வீழும். அதற்கு சிற்றேலம் - 1/2 வராகன்,நெய்தல் கிழங்கு பசுப்பாலில் அரைத்து மூன்றுநாள் குடிக்கவும்.*
5. *ஐந்தாம் மாதம்:- இரத்தம் கரைத்தது போல கட்டி விழும். அதற்கு தாமரைக்கிழங்கும் கொட்டிக்கிழங்கும் சமன் எடுத்து பசுப்பாலில் அரைத்து மூன்று நாள் குடிக்கவும்.*
6. *ஆறாம் மாதம் - வயிறூதும் அதற்கு நெய்தல்பூ, நெய்தற்கிழங்கு, முந்திரி கைப்பழம், மாதாளம்பழம் என்பன பசுப்பாலில் அரைத்து மூன்றுநாள் குடிக்கவும்.*
7. *ஏழாம் மாதம்:- பிள்ளை பிறக்கப்போவதுபோல வயிறுநோகும். அதற்கு நெய்தல் கிழங்கு, நெய்தல்பூ, கொட்டிக் கிழங்கு, சர்க்கரை சமன் எடுத்து பசுப் பாலில் மூன்றுநாள் குடிக்கவும்.*

   **குறிப்புரை:-** *ஏழாம் மாதத்திலிருந்து பிரசவம் போன்று ஏற்படும் வலியை* Braxton kicks contraction *என்பர்.*

8. *எட்டாம் மாதம் - பசிப்பதுபோல இருக்கும்.வாய் நீரூறும். பிரசவம் ஏற்படுவது இருக்கும். அதற்குச் சந்தனம், இலாமிச்சம்வேர், தாமரைக் கிழங்கு, கொட்டிக்கிழங்கு சமன் எடுத்து பசுப் பாலில் அரைத்து மூன்றுநாள் குடிக்கவும்.*

*9. ஒன்பதாம் மாதம்:- பற்பல உணவுகளில் விருப்பம் ஏற்படும்.* (Perverted appetite)
*அதற்கு எட்டாம் மாதத்திற்குரிய மருந்தைக் கொடுக்கலாம்.*

*10. பத்தாம் மாதம் குழந்தை பிறக்கும்.*

## 7.02 கெர்ப்பசூலம் – வேறு

திருமதலை யுதித்தமுதற் றிங்க டன்னிற்
சிலையென்றோர் நோவுகொள்ளுங் கமல மூலம்
அருமைபெறு செங்கழுநீர்த் தண்டி னோடே
யாவரையின் வேரரைத்துக் கொடுக்கத் தீரும்
இருமதியில் வருநோய்தான் கொலையென் றாகு
மிதற்குமருந் தாவரை வேர் புருண்டி மூலம்
திரிமதியில் குறையெனவாங் கல்லா ரத்திற்
சேர்கிழங்கு மாவரையின் வேரு மாமே. 1.

அடுத்திடுநாற் றிடங்கடனி னாரை யென்றா
மப்பையின்றன் கிழங்குடனே நாவ லின்றோல்
தொடுத்திடுபச் சரிசியுட னுண்ணத் தீருந்
தோன்றுமைந்திற் சிலையென்றோர் நோவு கொள்ளும்
படித்திடுதிப் பிலிமிளகு தண்ணீர் விட்டான்
பகர்கிழங்குங் கருங்குறுவை யரிசி தானும்
எடுத்தரைத்துக் கருப்பினுறு கூட்டி கூட்டி
யினிதருந்த நன்றாகு மாறிற் கேளே. 2.



ஆறினிலே களியென்றா நெல்லி முள்ளி
யதினுடனே தான்றிக்காய் கரிய சீரம்
மாறின்றி யரைத்தாவின் பாலிற் கொள்க
மற்றேழிற் கழலென்ப தொருநோ யுண்டாம்
கூறுகின்ற பசுநெய்யா மணக்கி னென்ணெய்
குற்றமறு மெள்ளெண்ணெய் கொதிப்பித் துப்பின்
ஆறுகின்ற போதினிலே மிளகுத் தூளை
யதிற்றூவிக் கொடுத்திடநோ யகலு மன்றே. 3.

அகலுமெட்டிற் கொலையெனலாம் வேப்பம் வேரு
மதினிலையுங் கடுக்காயு மிளகு சுக்குத்
தகவுடைய நீர்வள்ளிக் கிழங்கு தானுந்
தகர்த்தரைத்துத் தூளாக்கிக் கொடுக்கத் தீரும்
மிகவுமழ கொழுகுவிழி மடநல் லாய்கேள்
மேவுமுளை யென்றொருநோய் நாலோ டைந்தில்
பகர்மிளகு நெய்யிலுண்ட பின்னர் தானே
பச்சரிசி மாவாக்கிப் பகரக் கேளே. 4.

ஏயும் மாவொடு கொட்டியின் மூல மிசைத்தேயுண்
டாயுந் தீஞ்சொன் மாமயி லாயங் கருமெண்ணெய்
நீயும் பின்னா லுண்ணுக மாறிடு மெந்நோயும்
சேயுந் நன்றா மென்றுரை செய்தார் முனிவோர்கள்.

*1. முதலாம் மாதம்: நோவுண்டாகும்.*
*அதற்கு தாமரைக்கிழங்கு, செங்கழுநீர்த்தண்டு, ஆவாரை அரைத்துக்கொடுக்கத் தீரும்.*

*2. இரண்டாம் மாதம்:- கொலை செய்வதுபோல நோகும்.*
*அதற்கு ஆவாரைவேர், கொடிமல்லிகைவேர், அரைத்துக் கொடுக்கவும்.*

3. மூன்றாம் மாதம் - சூலம் உண்டானால் கொட்டிக்கிழங்கும் ஆவாரை வேரும் அரைத்துக் கொடுக்கவும்.

4. நாலாம் மாதம் சூலம் வந்தால் ஆவாரைவேர் கொவ்வைக்கிழங்கு, நாவல்தோல், பச்சரிசியுடன் உண்ணத்தீரும்.

5. ஐந்தாம் மாதம்: - நோவுண்டானால் திப்பலி, மிளகு, தண்ணீர் விட்டான் கிழங்கு, கருங்குறுவை அரிசியும் எடுத்தரைத்து கருப்பட்டியுடன் உண்ணத் தீரும்.

6. ஆறாம் மாதத்தில் சூலம் வந்தால் நெல்லி முள்ளி, தான்றிக்காய், கூஞ்சீரகம் அரைத்துப் பசுப் பாலில் கொள்க.

7. ஏழாம் மாதம் சூலம் வந்தால் பசுநெய், ஆமணக் கெண்ணெய், நல்லெண்ணெய் கொதிப்பித்து ஆறும்போது மிளகுதூள் தூவிக்கொடுக்க மாறும்.

8. எட்டாம் மாதம்:- கொலைபோல சூலம் வரும். அதற்கு வேப்பம்வேர், வேப்பிலை, கடுக்காய், மிளகு, சுக்கு, சாத்தாவாரிக்கிழங்கு அரைத்துக் கொடுக்கத் திரும்.

9. ஒன்பதாம் மாதம் முளையென்றொரு நோய் வந்தால் மிளகும் நெய்யும் சேர்த்துண்ட பின்னர் பச்சரிசிமா, கொட்டிக் கிழங்கு சேர்த்தரைத்துக் கொடுக்க. நல்லெண்ணெய் சேர்த்துக் கொடுக்க எவ்விதநோயும் மாறி பிள்ளையும் நன்றாக வளரும்.



# 8. காயாசுவாதம்
## (Asthma during pregnancy)

காயாசுவாதம் என்பது காயாக உள்ளபோது (அதாவது கரு பழுக்காமல் இருக்கும்போது) அதாவது கருவுற்றிருக்கும்போது ஏற்படும் சுவாத காசமாகும். அதாவது Antenatal period இல் வருவது காயாசுவாதமாகும். (சுவாதகாசம் என்றும் ஒன்றுண்டு. அது பிரசவத்துக்குப் பின்னர் வருவதாகும். அதாவது post natal period இல் வருவதாகும்.)

**மூச்சு வாங்கி நாவரண்டு மூக்கு மலரச் சுழிக்குமேற்**
**பேச்சு முண்டாய் வேர்வரும்பிப் பெருகு மழலை தவனமுமாய்க்**
**காய்ச்சல் கழிச்சல் குளிர்மறப்புக் கனத்துப் புறந்தா**
**ளதைத்திடினும்**
**ஆச்சு மரண முண்டென்றே யறியக் காயா சுவாதமிதே. 1.**

மூச்சுவாங்கும் (dyspnoea), நாவரளும், (dryness of tongue மூக்கு மலர்ந்து சுழிக்கும், வியர்வை அரும்பிப் பெருகும். உள் அழல் உண்டாகும். (நோ) தவனமாகும். காய்ச்சல், கழிச்சல், குளிர், புறங்கால் அதைக்கும். (Oedema) மரணமும் உண்டாகலாம். பிடரிவலி, கண்குத்து, உச்சிக்குத்து முதலியனவும் ஏற்படும் என்பர்.

குறிப்புரை:- மேற்படி குணங்குறிகள் கர்ப்பிணிகளில் காணப்படக்கூடிய Bronchial Asthma அல்லது Cardiac Asthma வைக் குறிப்பனவாக உள்ளன. சிலர் காயாசுவாதத்தைப் Puerperal Sepsis என்று கருதுவர். அது தவறாகும். காயாசுவாதம் - கருவுற்ற காலத்தில் Antenatal period இல் ஏற்படுவதாகும்.

## சிகிச்சை

### 1. குடிநீர்

கொர்ப்பிணி யான பேர்க்குக் கேடுறு சுவாதங் காய்ச்சல்
முற்படு மிருமல் கூதன் முடிவுறக் குடிநீர் கேண்மின்
சுற்றுறு முத்த மாடா தோடைதூ துளைமுள் வட்டுச்
சொற்பெறு மிவைவேர் சுக்குச் சொல்லுவல் லாரல் தேடே. 1.

தேடிய பிரமி சிறந்திடு மிலையும்
நீடிய மிளகு நிலவே ருடனே
சாடிய தண்ணீர் தானது விட்டு
வாடிய பின்னர் மகிழ்ந்துடன் குடியே. 2.

*முத்தற்காசு, ஆடாதோடை, தூதுவளை, வட்டுக் கத்தரி, இவைவேர், சுக்கு, வல்லாரை, பிரமி, இவை இலை, மிளகு நிலவேர் சமன் எடுத்து குடிநீரிட்டுக்கொடுக்கச்சுவாதக்காய்ச்சல் தீரும்.*

2. **பெரிய சிவப்புச் சூறணம்:-** *பணஎடை இஞ்சி, தேன், முலைப்பால், கற்கண்டு, கல்லாக்காரம், உள்ளி, சுக்கு, இவற்றில் குணங்கண்டு கொடுக்க காயாசுவாதம் , சுவாதகாசம் தீரும்.*

3. **காராம்புச்சூரணம்:-** *முன்போல கொடுக்கத் தீரும்.*

4. **வசுவாசிச் சூரணம் :-** *பண எடை, இஞ்சி, தேன் முலைப்பாலில் கொடுக்கக் கர்ப்பிணிக்கு வரும் கழிச்சல், குத்து, காய்ச்சல், முட்டுத்தொய்வு, இருமல்,நாவரட்சி,குளிர் விறைப்பு, சளியடைப்பு, சுவாதமுட்டு, சுவாதகாசம் முதலியன தீரும்.*



5. **கொர்ப்ப சஞ்சீவிக்குளிகை:-** *கர்ப்பிணிகளில் ஏற்படும் பிணிகளுக்கு மிளகளவு குளிகை தகுந்த அனுபானத்தில் கொடுக்கத் தீரும். குழவி நெஞ் சிலேறிடுதல் (Breech presentation) சுழல் வாய்வு. பல திருகினும் (குழவி கருப்பையில் பல விதமாகத் திருப்பப்படுதல் Version) உட்குத்து புறவீச்சு என்பன மாறும்.*

*ஆடாதோடைச் சுரத்தில் 1 குளிகை திப்பலி பொடி தூவி, தேன் கலந்து கொடுக்க கபமிகுதி யால் வரும் சுவாதமூச்சு, மாறாத காய்ச்சல், கோழை, குக்கல், குளிர், கூதல், இட்டுமுட்டு, தொய்வு, இளைப்பு, ஈளை, சுடர்காசம், வீக்கம் என்பனவும் பித்தகபத் தொந்தப் பிணிகளும் சுரமும் காயாசுவாதமும் மாறும்.*

6. **கொதியெண்ணெய்:-** *தலைக்கு வைத்து உள்ளும் கொடுக்கக் காயாசுவாதம், சுவாதகாசம் மாறும்.*

7. **வேறு எண்ணெய்:-** *இருகளஞ்சு வீதம் காலையில் மட்டும் 10 நாள் கொடுக்கக் காயாசுவாதம் இருமல், கண்டத்தைப் பற்றிய நோய்கள் தீரும்.*

8. **நீற்றுப் பூசினி நெய்:-** *சீனி கலந்து உண்டுவர காயாசுவாதம், உளைமாந்தை, கசரோகம், கோழை, கபரோகங்கள் எலும்புருக்கி, இளைப்பு, இரத்த ரோகங்கள், ஈளை, வயிற்றெரிவு, உள்ளு ருக்கி, வரட்சூரை என்பன தீரும்.*

**9. நீற்றுப்பூசணி நெய் (வேறு):-** நாட்பட்ட காயா சுவாதம், வெள்ளைபடுதல், எலும்புருக்கி தீரும்.

10. ஆடாதோடை, தூதுவளைவேர், திற்பலி, அதி மதுரம், மிளகு வகை சமன் எடுத்துக் குடிநீரிட்டு 3 நாள் 6 வேளை கொடுக்க ( காலை மாலை ) மாறும்.

**11. கண்டங்கத்தரிச் சூரணம்:-**

கண்டங்கத்தரி - 4 களஞ்சு, தூதுவளை, வட்டு, நன்னாரி, கோரைக் கிழங்கு. இவை வேர், வேர்க் கொம்பு, மிளகு, திப்பலி, நெல்லி, தான்றி, கடுக்காய், இருசீரகம், ஓமம், கோட்டம், அதிமதுரம், அரத்தை, அக்கரா, ஏலம், இலவங்கம், சாதிக்காய், கராம்பு, வசுவாசி, நாகம்பூ, இந்துப்பு, சூகைநீறு, உள்ளி, மாயாக்காய், தேற்றாங்கொட்டை, சன்னிகள நாயகன், இவை வகை - 1 களஞ்சு. இவற்றை நன்கு தூளாக்கி, 9 தரம் ஓடு சுடவைத்து இறக்கிய பின் தூளைப் போட்டெடுத்து, சீனி, கல்லாக்காரம், தேன், நெய் இவைகளில் ஏதும் ஒன்றில் வெருகடிப் பிரமாணம் கொடுக்க குத்து, இருமல், கொழுவல், நெஞ்சடைப்பு முதலியன தீரும்.

கஞ்சி, கரைபுற்கை முதலிய லேசாய்ச் சமிக்கக் கூடிய உணவுகள் சாப்பிடவும்.



# 9. கெர்ப்பரோக மகோதரம்

## (செகராச சேகரம்)

## (Polyhydramnios)

**வேறுபெயர்:** சூல் மகோதரம்

கெர்ப்பரோகத்தில் வயிற்றில் (கருப்பையில் நீர் கோர்த்து வரும் மகோதரம் கெர்ப்ப மகோதரம் எனப்படும்.

"கெற்பத்திற் கிரந்திதோன்றிக் கெடுத்திடு வெப்புண்டாகி
உற்பத்தியேழிலெட்டி லுவாதியாய் வீங்கி முட்டாய்ச்
சற்பத்தின் விடம்போல் மூடித் தாகிக்குந் தொய்வு முண்டா
கிற்பத்திக் கெற்ப ரோக மகோதரங் கிளத்துங்காலே"

கர்ப்பிணிகளுக்குக் கிரந்திநோய் தோன்றி, வெப்பு முண்டானால் கருவுற்ற 7,8 ஆம் மாதத்தில் உவாதி செய்து வயிறு வீங்கும். மூச்சுக்கஷ்டம் உண்டாகும். தாகம் உண்டாகும். இட்டுமுட்டு ஏற்படும்.

**குறிப்புரை:-** இந்நிலை Polyhydramnios உடன் ஒத்துக் காணப்படுகிறது.

| கெர்ப்ப மகோதரம் | Polyhydramnios |
|---|---|
| 1. கர்ப்பிணிக்கு வரும் கிரந்தி நோய் காரண மாகிறது | 1. Cause may be syphilis. |

| | |
|---|---|
| 2. கருத்தரித்து 7,8மாதத் தில் ஏற்படும். | 2. More common after 30 weeks of pregnancy. |
| 3. இட்டு முட்டு | 3. Abdominal discomfort occurs due to the compression of the stomach and intestine by unduly enlarged uterus |
| 4. மூச்சுகஷ்டம் (தொய்வு) | 4. If the uterus is very much enlarged she may have dyspnoea |

## 9.01 கெர்ப்ப நீராமை (செகராச சேகரம்)

'பொற்புறக் கெற்பமாகிப் பொருந்திய நாலாந்திங்கள்
அற்பநீர் மறுப்பதாகி யடசி நீரெரிந்து குத்தி
நிற்ப நீர் முட்டதாகிப் பொசிந்து நீர் நெடுக நிற்கும்
கெற்ப நீராமை தீமை செய்குணங் கிளத்தினாரே.'

அதாவது, கருவுற்ற நாலாம் மாதம் இவ்வியாதி உண்டாகும். அதற்குச் சிறுநீர் மறிபட்டு (அதன் விளைவாக) சிறுநீரெரிச்சல் (Dysuria) குத்து (Pain) உண்டாகி, வயிற்றில் (கருப்பையில்) நீர் முட்டி நிற்கும் வியாதி கெர்ப்ப நீராமையாகும். இது தீமை (கருவையழிக்க) செய்யவல்லதாம்.



## 9.02 நிதம்ப நீராமை (செகராச சேகரம்)

'மந்தித்துப் பொருமிக்குத்தி மலசலமடைத்து முட்டாய்
அந்தித்து அவலமாகி யதிகமாய் மயக்கி வேர்த்து
உந்திக் கீழ் வயிறு விங்கி யுரத்திடுமோங்காளிக்கும்
நிந்திக்குங் கொலையுஞ் செய்யும் நிதம்ப நீராமையாமே.'

அதாவது, வயிறு பொருமிக்குத்தும். மலசலம் அடைக்கும். முட்டு உண்டாகி கஷ்டப்படுத்தும். மயக்கம். வியர்த்தல், நாபிக்குக் கீழ் வயிறு பொருமியிருத்தல். ஓங்காளம். இது கொலையுஞ் செய்யும். (அதாவது கருவை அழிக்கக் கூடியது)

குறிப்புரை:- கெர்ப்ப மகோதரம் 7, 8 மாதங்களில் ஏற்படும் என்று கூறப்பட்டுள்ள அதேநேரத்தில் கெர்ப்பநீராமை 4 மாதத்தில் ஏற்படும் என்று கூறப் பட்டுள்ளது. தற்கால மருத்துவ நூல்களில் Polyhydra -mnios ஆனது Acute, Chronic என்னும் இரு நிலைகளில் ஏற்படலாம் என்றும் Acute polyhydramnios - 20 வாரங்களுள் ஏற்படும் என்றும் Chronic polyhyd -ramnios - 30 கிழமைகளுக்குப் பின்னர் ஏற்படும் என்றும் கூறப்பட்டிருத்தல் காண்க.

மேலும் Polyhydramnios இற்கு Renal diseases உம் ஒரு காரணமாகும். நான்கு மாதத்தில் ஏற்படுவதால் நாபிக்குக் கீழ் வயிறு பெருத்துக் காணப்படும் என்று கூறப்பட்டுள்ளமையும் பொருத்தமானதே.

(ஆனால் Fundus Height 20 கிழமையிலும் பார்க்க கூடுதலான உயரத்தில் காணப்படும்) இங்கு கூறப்பட்டுள்ள குறி குணங்களும் Polyhydramnios உடன் ஒத்துக்காணப்படுகின்றன.

Polyhydramnios இனால் கர்ப்பகால நச்சு வியாதி, குறைமாதப்பிரவசம், நஞ்சுக் கொடி நழுவுதல், உரிய காலத்துக்கு முன்னர் பனிக்குடம் உடைதல், குழந்தையின் தோற்றங்கள் (Presentations) மாறுதல் அல்லது Abnormal Presentation, குழந்தை இறந்து பிறத்தல் போன்ற பல தீமைகள் ஏற்படும் என்பதையும் கவனத்திற் கொள்க.



# 10. அபானவாயுவின் குணம்

மங்கை தனக்குத் திருமதலை வயிற்றி லுதித்து வளர்நாளில்
திங்கண் மூன்று நாலைந்து சேருந் திங்க ளீரைந்தில்
பொங்கு முதரந் தனில்வாயு பொருமிப் பரந்து திமிரேறும்
அங்குச் சொன்னோ மடிவயிற்றி லடசு மபான வாயுவிதே. 1.

அடசும் பரவி வாய்வதுதா னபான முதர நோவுகொள்ளும்
துடிசே ரிடையார் கருமாறித் தோன்றித் துயரங் காண்பிக்கும்
அடிய முடியுந் தான்சுருக்கி யதனோ டுதர நோவுகொள்ளக்
கொடியே ரிடையாள் முகம்வேர்க்குங் கூறுஞ் சலமுங்
கட்டுண்ணும். 2.

**பாடலின் கருத்து:-**

கர்ப்பிணிகளில் கருவளர்ந்து வரும்நாளில் 3, 4, 5, 10 மாதங்களில் அபானவாயு மிகும். வயிற்றுப் பொருமல் (Flatulence) ஏற்படும். அவ்வாயு அடி வயிற்றைப் பற்றிப் பரவி, அபானமும் (மலவாசல்), உதரமும் நோவு கொள்ளும். அத்துடன் கருவும் மாறித்தோன்றி துயர் விளைவிக்கும். கருப்பத்தின் (வயிற்றின்) அடியும், முடியும் சுருங்கி அதனோடு வயிறும் வலிக்கும். கர்ப்பிணியின் முகம் வேர்க்கும். சலம் கட்டும்.

**குறிப்புரை:-** இங்கு கரு மாறித் தோன்றும் என்பதில் இருந்து கருப்பையில் பிள்ளையின் தோற்றம் (Presentation) மாறியமையும் என்று கருத்தாகிறது. மேலும் அடியும் (கருப்பையின்) முடியும் (Fundus)

சுருங்கிக் காணும் என்பதிலிருந்து மேற்படி கருமாறு தலால் தலை மேற்புறமாய் அமையும் என்றாகிறது. (அதாவது Breech Presentation ஏற்படும்) எனவே, கருப்பையில் குறுக்காக Transverse அல்லத சாய் வாக (Oblique) இருந்த குழந்தை தலை மேற்புறம் வரும் வகையில் (Spontaneous version) தானாகவே திரும்புவதை இங்கு கருதமுடியும். தற்கால மருத்து படி இங்ஙனம் திரும்புதல் 32 கிழமைக்குப்பிறகு நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் கருப்பையில் குழந்தை திரும்புவதற்கு அபான வாயுவே காரணம் என்பது இப்பாடலின் கருத்தாக உள்ளது.

### சிகிச்சை

செப்பு மிதற்குப் பரிகாரஞ் சேரு முள்ளி மோதகமிந்
துப்பு மரைத்துப் பொடியாக்கி யுற்ற தேனிற் குழைத்துண்ண
ஒப்பாங் கான்றை வேர்சுக்கு முள்ளி யொடுகாக் கணம்வேரும்
அப்பிற் காய்ச்சி யிட்டருந்த வபான வாயு வகன்றிடுமே. 1.

இடுமே முதலிற் பேதிபண்ணி யியம்பு மருந்து பிறகுகொடு
துடியே ரிடையாய் காய்ந்தநீா் தொட்டே குடிக்க நன்றாகும்
படிசே ருள்ளி தனைப்பாலி லவித்துக் கடைந்தே யோமமதிற்
பொடிகுங் குமப்பூ மேற்றூவிக் கொடுக்க வகலும் பொருவாயு. 2.



# 11. குதிரை வலி
## (Eclampsia)

**வேறுபெயர்** - பித்தவாதசந்தி, பிரசவ வலிப்பு, வாத சந்தி, சந்நிவாதம், கா்ப்பகாலவலிப்பு.

குதிரைவலியானது தலைப்பிள்ளைத் தாச்சி களுக்கு (கன்னிச் சூல் மகளிர் - Primi) வயிறு நோகின்ற அவதியில் வரும். அதாவது பிரசவ சமயத் தில் ஏற்படும். அது உண்ணும் உணவின் பேதத்தி னாலும், பிறகோளாறுகளினாலும், வயிற்றில் மந்தம் தோன்றி, அதில் வாதமும் சந்நியும் வயிற்றிலடங்கப் பிள்ளை விக்கினப்படும் (Foetal distress) வாதத்தில் சந்நி என்னும் விஷம் (Toxaemia) சேர வலியுண்டாகும். வலிகண்டவுடன் தாமதமின்றிப் பிள்ளையைப் பெறவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது வைத்தியனுடைய கடமையாகும். பெரும் பாலும் பிள்ளை வயிற்றுள்ளே சாகும் (Intra uterine death) சிலது பிறந்தபின் இறப்பதும் உண்டு (Neonatal death) வயிற்றிலே பிள்ளை இறந்து அதனால் சந்நி தோன்றி வலிவருமாயின் மீளுதல் அரிதாம். அதாவது தாயும் இறக்கநேரிடும் (Maternal death)

தலைப் பிள்ளைத்தாச்சிக்குப் பிரசவநோக்காட் டுக்கு முன் ஐந்து நாட்களுக்குள் வருவதுவே குதிரைவலி என்பது சிலரின் கருத்து (பிரசவ சமயத்தையும் இதனுள் அடக்குவர்) பிள்ளைபெற்று

*ஐந்து, ஆறு நாட்களுக்குள் வருவதும், வழிப்பிள்ளைத் தாச்சிக்கு (Multipara) வருவதும் ஆகிய இவை யெல்லாம் குதிரைவலியன்று. மந்தவலி, அதிமந்த வலி, வாதசந்நிவலியாயும் வருவதுண்டு. இங்கு கூறப்படும் சிகிச்சைகள் எல்லாவலிகளுக்கும் ஏற்றன வாகும்.)*

### குதிரைவலிக்கான காரணம்

'சீதத்தின் மந்தந் தோன்றித் திமிர்த்ததில் விறைப்புண் டாகிச்
சேதத்தின் மண்ணீ ரோடு தேயுவாய் வாகா யங்கள்
பேதத்திற் குளிர்ந்தொன் றாகிப் பெருத்திடுங் குணங்கள் பித்த
வாதத்திற் சன்னி தோன்றில் வலித்திடும் வலியாய் வந்தே.' 1.

கன்னிச்சூன் மகளிர் தங்கள் கடுங்கொடும் வினைக்கீ டாகிச்
சென்மவுற் பத்தி யான தினமுதற் பத்தாந் திங்கள்
வன்மத்தி னலைத்த மார்பன் வலியதே வதையை யேவக்
குன்மத்தின் கொடுமை யான குதிரையின் வலிவந் தெய்தும்.

**பாடலின் கருத்து:-**

1. *சீதத்தில் மந்தம் உண்டாகி திமிர்த்து விறைப் புண்டாகி உடலிலுள்ள பஞ்சபூதங்களும் குளிர்ந்து ஒன்றாகி பித்தவாத சந்தி என்னும் விஷமாகி வலிப்பை உண்டாக்கும்*

**குறிப்புரை:-** *இங்கு வலிப்புக்குக் காரணம் பித்தவாத சந்நி என்னும் விஷநிலை என்பது* Toxaemia *வுடன் ஒப்பிடத்தக்கது.*



2. *கன்னிச்சூல் மகளிருக்கு அவர்கள் முன்பு செய்த வினைப் பயனாக கருவுற்ற பத்தாம் மாதம் குன்மத்திலும் கொடுமையான வலி ஏற்படும். என்பதாம்.*

**குறிப்புரை:-** *இங்கு வலிக்குக் காரணம் முன்பு செய்த வினைப்பயன் என்பது* Idiopathy *அல்லது* Unknown causes *ஐக் குறிப்பதாக அமையலாம். வினை என்பதற்கு நோய் என்றும் கருத்துண்டு.*

### குணம்

காலுங் கரமுங் கண்மூக்குங் கதிக்கத் திருகி வலியுண்டாம்
மேலுங் கனன்று கண்சிவந்து மிகவு நெஞ்சிற் சழிகட்டித்
தோலுந் தசையும் படபடெனத் துடித்துக் கண்ணு மிமையாதால்
ஆலம் விழியார் குதிரைவலி யாகு மிதுகண் டறிவீரே.

**பாடலின் கருத்து:-**

*கால், கை, கண், மூக்கைப் பற்றியதாக வலி யுண்டாகும். உடம்பு சுடும். கண் சிவக்கும் நெஞ்சில் சளிகட்டும். தோல், தசை என்பன மிகவும் துடிக்கும். கண் துடித்தல், இமையாது.*

### அசாத்தியக்குறி

எண்ணுஞ் சன்னி வாதத்தி லிதுவுங் குதிரை வலியென்னும்
கண்ணிற் புருவங் கதுப்புதரங் கரமுங் காலு மொருபக்கம்
எண்ணு நுரையு மிகுந்துதள்ளி யேறத் திருகி வலியுண்டாம்
விண்ணைப் பார்த்து விழிநிற்கின் மீளா திதுவுந் திண்ணமிதே.
1.

கண்ணும் வீழ்ந்திட் டொளிகுன்றிக் கண்டத்தடைத்துச் சிலேற்பனமும்
உண்ணின்றிழுத்துவரண்டடைத்தேயுற்றுச் சலமு மலமழிந்திட்
டெண்ணம் வேறாய் மெய்குளிர்ந்திட்டிழுத்தேவலியுமிள்ளடங்கில்
விண்ணின் றியமன் விடுந்தூதாய் விளம்பு மரிய வாயுண்மறை

2.

பிள்ளையும் வயிற்றிற் செத்துப் பெருந்திமிர் விறைப்புண்டாகிக்
கள்ளமார் வலியு முள்ளே கரந்துறச் சன்னி தோன்றி
மெள்ளவே மூச்சு மாகி விறைத்துட னிருக்கு மாகில்
கொள்ளவே கூற்று வந்த தெனமனந் துணிந்து கொள்ளே.

**பாடலின் கருத்து:-**

*சொல்லப்பட்ட சந்தி வாதமெனும் குதிரை வலியில் கண்,புருவம், கன்னம், உதடு முதலியவற்றில் தொடங்கி, கையும், காலும் ஒருபக்கம் இழுத்து வலித்தல், வாயால் நுரை தள்ளுதல், ஆகிய குணங்கள் காட்டும். **விழி** மேல் நோக்கிச் செருகிக் காணின் அசாத்தியமாம் (அதாவது தாய் இறப்பாள் என்பதாம்)*

2. *கண்பார்வை மங்கும், தொண்டையில் அடைக்கும் சிலேற்பனம் உண்ணின்று இழுக்கும். வாய் வரளும். மலசலம் வெளியாகும் (அழியும் என்பதால் வெளியாகும் என்று கருத்து, நினைவிழக்கும் (எண்ணம் வேறாகும்), உடம்பு குளிரும். இங்ஙனம் குறிகுணங்கள் காணின் அது ஆபத்தாம். (தாய் இறக்க நேரிடும் என்பதாம்)*



3. *பிள்ளை வயிற்றில் இறப்பதுடன், கடுமையானதிமிருடன் (Stiffness) விறைப்புமுண்டாகி (Rigidity) வலிப்புடன் சந்நியும் உண்டானால் மூச்சும் மெள்ளக் குறைந்து உடம்பும் விறைத்து வந்தால் (தாய்) மரணம் ஏற்படும் என்பது நிச்சயமாம்.*

**குறிப்புரை:-** *இங்கு கூறப்பட்டுள்ள குறிகுணங்கள் ஏறத்தாள தற்கால மருத்துவத்தில் கூறப்படும் பிரசவ சமயத்தில் ஏற்படும் வலிப்பான Eclampsia வை ஒத்திருப்பதைக் காணலாம்.*

| குதிரை வலி | Eclampsia |
|---|---|
| 1. காரணம் -<br>i. வினைப்பயன் அல்லதுமுந்தைய நோய்<br>ii. வாத சந்தி என்னும் விஷம் | 1. Toxaemia in Pregnancy |
| 2. தலைப்பிள்ளைத் தாச்சிக்கு வரும் | 2. More common in primi gravida |
| 3. கண் சிவத்தல், கண் துடித்தல் | 3. Twitching and rolling of the eye ball |
| 4. கண், புருவம், கன்னம், உதடு பற்றி ஆரம்பித்து கையும் காலும் ஒருபக்கம் இழுத்து வலிக்கும். | 4. (Tonic stage) the twitching beginning in the face, and being succeeded by more violent contractions of the limbs |

| | |
|---|---|
| 5. வாயில் நுரைதள்ளும் | 5. Frothy discharge from the mouth (foaming at the mouth) |
| 6. விழிமேல் நோக்கிப் பார்க்கும். | 6. The eyes turned up or to the side |
| 7. கண்பார்வை மங்கும் | 7. Dimness of vision. the pupil do not react to light. |
| 8. தொண்டை அடைக்கும் | 8. Respiration is stopped |
| 9. மலசலம் வெளியாகும் | 9. Faeces and urine may be passed |
| 10. நினைவிழக்கும். | 10. Patient is quite uncon - scious |
| 11. பிள்ளை வயிற்றில் இறக்கும் | 11. Foetal death |
| 12. கடுமையான திமிருடன் விறைப்புண்டாகி, வலிப்புடன் சந்நியும் உண்டானால் மூச்சுக்குறைந்து, மரணமும் ஏற்படும். | 12. In severe cases recurrent fits occur and the patient remains deeply unconscious between them. |



**Note:-** Eclamsia may be defined as an acute toxaemia occuring during pregnancy, during labour, or in the puerperium, characterized by convulsions and coma, and usually associated with high blood pressure, with generalized oedema and albuminuria.

*பிள்ளை பெற்றபின் வயிற்றுப்புண் ஆறும் போதும் முற்றாய் ஆறாமல் இருக்கும் போதும் வலிவரக் காத்திருக்கும்* (Puerperal convulsions)

'சூல்நீங் கியபின் பெற்ற சூற்பைப்பு ணாறி டாதேல்
கோலவேல் விழியாய் புண்ணிற் குறைவிருந் திடுமப் போதும்
சூலத்தி லேற்புண் டாகித் தொடர்ந்திடும் வலிதா னென்று
வாலறி வுடையோ னந்நாள் வகுத்துரைத் திட்டா னன்றே'

**பாடலின் கருத்து:**

*சூல் நீங்கியபின் அதவது பிரசவத்தின் பின் கருப்பைப்புண் ஆறாமல் இருந்தாலும், அல்லது அப்புண் ஆறுவதில் தடை இருந்தாலும், கருப்பைப்புண் காரணமாக ஏற்பு* (Tetanus) *ஏற்பட்டாலும் அதன் விளைவாக வலிப்பு ஏற்படும் என்பதாம்.*
*புண் முற்றாய் மாறியபின் மந்த சந்நிவலி, அதிமந்த வலியாக ஒரே சமயத்தில் வருவதுமுண்டு.*

**குறிப்புரை:-** *பிரசவத்தின்போது அல்லது அதனைத் தொடர்ந்துவரும் நாட்களில் கிருமித் தொற்றுக் காரணமாக தாய்க்கு (குழந்தைக்கும்) ஏற்புவலி வருவதற்குச் சந்தர்ப்பங்களுண்டு. அதற்காகத்தான் தற்காலத்தில்* Antenatal period *இல் தலைப்பிள்ளைத்தாச்சிக்கு மூன்றுமாதத்தின் பின் ஒரு தடவையும், அதற்கு 6 வாரங்களின் பின்னர் ஒரு தடவையும் ஏற்புத்தடுப்பூசி போடும் நடைமுறையுள்ளது. அடுத்துவரும் மூன்று கர்ப்பங்களுக்கு தலா ஒரு தடவை ஏற்பு வலித் தடுப்பூசி போடுவதும் நடைமுறை.*

**குறிப்புரை - II** *மந்தவலி, அதிமந்தவலி என்பவை* Mild form of fits *என்று கருதமுடியும். அதாவது மந்தமாகவும் (மந்தவலி) அதிமந்தமாகவும் (அதி மந்தவலி) ஏற்படும்.*

## 11.01 மந்தவலி குதிரைவலியின் பொதுக்குணத்தில் அசாத்தியம்

**தலையாம் பிள்ளைத் தாச்சிக்குத் தான்மூன் றைந்தே ழொன்பானாள்**
**தலைதான் மூழ்கி னன்று பின்னாட் டலையும் வலித்துமிகக்குத்தி**
**உலைவாய்ப் பிடரி தனைவாங்கி யுபாதி பண்ணி நாள்விட்டும்**
**அலைவாய் மூன்று நாலுவலி வலித்துச் சற்றே யாறிடுமே. 1.**



**ஆறா வலியுந் திமிருண்டா யடுத்து விடாமற் பசிதோன்றக்**
**கூறு வித்து மூன்றாநாட் கூறுள் வலியாய்த் தோன்றாமல்**
**மீறி வலித்துச் சன்னிகண்டு விண்ணிற் சேரு மென்றறிவாய்**
**கூறு வலிமேற் பார்வைதிமிர் குறையாதாகின் மருந்தென்னே. 2.**

**கொடுக்கு மருந்திற் குறைவிலையேற் கொல்லும் வலியு மென்பார்கள்**

**அடுக்கும் வலிவந் தடுக்குமுன மறிவாய் வலது பாரிசத்தில்**
**மிடுக்காய்க் குத்தித் தலைகனத்து மேவு மொருசார் கால்சுரமும்**
**தொடுக்குங் கண்ணு முகந்தானுந் தொடர்ந்து சுழித்து வலியாமே. 3.**

**வலிக்கும் போது கண்புரளும் வாய்கண் புருவ மூக்குநுனி**
**சுழிக்கு மந்தப் பக்கத்திற் சொற்கால் விரல்கள் குறண்டிவிடும்**
**நலிக்கு மிந்த வலிசீலாய் வழியச் சேற்ப நெஞ்சடைக்கில்**
**கலக்க முறவே மரணமென்று தமிழ்தேர் முனிவன் கழறினனே. 4.**

**பாடலின் கருத்து:-**

1) *தலைப்பிள்ளைத்தாச்சியில் பிரசவித்து 3, 5, 7, 9 ஆம் நாளில் தலைமுழுகிய தினத்தில் தலை வலித்து, குத்தி, பிடரியைப் பற்றி உபாதிபண்ணி மறுநாள் 3, 4 தரம் வலிவந்து மாறிவிடும். (இது மந்த வலி* Mild form of fits *ஆகும்)*
2) *வலியும் மாறாமல் (நீடித்து, திமிருண்டாய், விடாமல் பசியும் உண்டாகி, மூன்று நாட்களுக்குள் வலி தோன்றாமல் பிறகு கடுமையாக வலித்து, சந்நி கண்டால் விழியும் மேல்நாக்கி, திமிரும் குறையாமல் மரணம் உண்டாகும்.அதற்கு மருந்தில்லை என்பதாம்.*

3) கொடுக்கும் மருந்துக்கு வலிகுறையாதிருந்தாலும் மரணம் ஏற்படும். அடுத்தடுத்து வலி தோன்றுமுன் வலது பாரிசத்தில் (பக்கத்தில்) கடுமையாகக் குத்தி, தலை கனத்து, கைகால் ஒரு புறம் இழுத்து கண், முகத்தைத் தொடர்ந்து சுழித்து (Twitching) வலி ஏற்படும்.

4) வலிக்கும் போது கண்புரளும் (Rolling of the eyes) வாய்,கண், புருவம், மூக்குநுனி சுழிக்கும் (Twitching) கால் விரல்கள் குறண்டும். அத்துடன் சேற்பம் நெஞ்சையடைக்குமானால் மரணம் ஏற்படுமாம்.

**Note:-**

1. If eclampsia occurs in the antepartum period, it usually induces a premature labour, the child being frequently born dead. Death or expulsion of the child is usually followed by the cessation of fits.
2. In intra - partum period pain is usually violent and causes labour to end quickly. But in some cases rigidity of cervix or other cause may call for operative delivery.
3. Post partum eclampsia usually occurs within a few hours of the completion of labour and is characterised by a few fits, followed by recovery.



**சிகிச்சை**

குதிரை வலி கண்டவுடன் பேதிக்கு அல்லது (Enema) கொடுத்து பிள்ளையைப் பிறப்பிக்க வேண்டும். அதன் பின் வலிக்குரிய சிகிச்சையாக அஞ்சனம், நசியம், கலிங்கம், தைலம் என்பவற்றைப் பிரயோகிக்க வேண்டும்.

1. **இலசுனாதி அண்டத்தைலம்:-** (உள்ளி சேர்ந்த அண்டத் தைலம்) (அண்டத்தைலம் பொதுவாக வலிப்புக்கு நன்று) இதனை நசியமாகவும், கலிங்கமாகவும், தைலமாகத்தலைக்கும் வைத்து உள்ளுக்கும் அளவுடன் காலை, மாலை கொடுத்துவர வலி நீங்கும்.
2. **கொதியெண்ணெய்:-** I உள்ளுக்குக் கொடுக்கலாம்.
3. **கொதியெண்ணெய்:-** II - சிரசுக்கும் வைத்து, உள்ளும் கொடுத்து, அஞ்சனம், நசியமாகவும் பாவிக்க குதிரைவலி, பூதசந்நி, குத்து, குரக்கு வலி, பூனைவலி, குமரகண்டன், காக்கைவலி அமரகண்டன்வலி என்பன மாறும்.
4. **பெரிய கொதியெண்ணெய்:-** இதை அண்டத் தைலத்துடன் சேர்த்து தலைக்கு வைத்து மேலும் பூசி, நசியமும் செய்ய (காது, மூக்கில் விட) வலிகள் யாவும் மாறும்.
5) **இராமபாணத் தைலம்:-** இதை நெற்றி, காதடி, கன்னச்சுழி, தலை, உள்ளங்கால் முதலிய இடங்களிற் பொருத்தி, உள்ளும் கொடுத்து, கடுகு புகை காட்ட குதிரை வலி, ஏர்ப்புவலி, சந்நி வாதம் முதலியன தீரும்.

**6. நசியம்:-**

திரிகடு குள்ளி காயஞ் சேருமிந் துப்ப ரத்தை
மருவுறு கராம்பி னோடு வசம்புவெண் கார மின்னம்
வருமதூ கத்தின் கட்டி யுடன்வசு வாசி சீனத்
துரைபெறு கார நல்ல பனரையின் பழுமி தெல்லாம். 1.

நிறைதர வெடுத்த ரைத்து நேர்முலைப்பாலிற் கூட்டிக்
குறைவற நசியஞ் செய்யக் குதிரையின் வலிபேய் பூதம்
விறைதரு சன்னி மூர்ச்சை வேறுள வலிக ளெல்லாம்
மறுவற வோடு மென்று மாதவ னருளிச் செய்தான். 2.

பூகம் பழமும் பழவரப்பும் புதிய மிளகோ டிந்துப்பம்
ஆகத் தடங்கு மகத்திப்பா லதுவோ டொக்கப் பொடிசெய்தே
வேகக் குதிரை வலிதனக்கு விடவே யோடு மிதுவன்றிப்
பாகக் கபால வலிபூ தப் பசாசும் பறந்து போமன்றே. 3.

**7. அஞ்சனம்:-**

திப்பிலி மிளகு நாக வல்லியின் சிறந்த காம்பு
பொற்புற வரைத்துக் கண்ணி லஞ்சனம் போடு வீரேல்
முற்படு வலிக ளோடு பூதங்கண் மூர்ச்சை யாதி
சொற்பெறு சன்னி மற்றுந் தொலைந்திடு மென்றார் முன்னோர்.

8. *நொச்சி, இஞ்சி, ஆடா தோடைக் குடிநீரில் அக்கினிக் குமாரன் குளிகை கொடுக்கலாம்.*

9. *இவற்றுக்கு மாறாவிடின் இரட்சை செய்யவும்.*



# 12. கருங்கிரந்தி
# (Syphilis)

**வேறு பெயர்:-** *கிரந்திநோய், கர்ப்பக்கிரந்தி, பெருங்கிரந்தி, மேகநோய்.*

*கருங்கிரந்தியின் குணம்*

**மங்கை தனக்குத் திருமதலை வயிற்றி லுதித்த நாண்முதலாய்
அங்கந் தலைகா லம்முகமு மரிக்குந் தினவு மிகக்கொள்ளும்
பொங்குங் கரிய முட்போலப் போடும ங்கம் விருவிருக்கும்
திங்க ணாலைந் தாறெட்டிற் றிடனாய்க் கருவை யழிப்பிக்கும். 1.**

கருவை யழிக்குங் கருங்கிரந்தி கால்கை யெரியும் வயிற்றுவலி
அரிவை வயிற்றிற் றுவாலையுண்டா மார்பு மிடுப்புத் துடையுளையும்
திருவே யனையார் திருமேனி சேரச் சோருஞ் சோகமுண்டாம்
வருகைக் குரிய பண்டிதர்கள் மதித்தே யறிந்து கொள்ளநன்றே. 2.

வருந்திட மேனி நொந்து வயிற்றினில் வலியுண் டாகித்
திரிந்திட வங்கம் பூ ரித் திடர்செயுங் குருதி பாயும்
மருங்கொடு விலாவி ரண்டும் வயிறது மிரைச்ச லுண்டாம்
கருங்கடுங் கிரந்தி யென்று கருத்தினி லறிந்து கொள்ளே.

**பாடலின் கருத்து:-**

1. *கருத்தரித்த நாள் முதல் உடல், தலை, கால், முகம் என்பனவற்றில் அரிப்பும் தினவும் (itching) மிகுந்து காணும். பொங்கிய கருநிறமுட்களைப் போல வீக்கம் / விரணம் உண்டாகும் 4 அல்லது 5 அல்லது 6 அல்லது எட்டு மாதத்தில் கருவை அழிப்பிக்கும்.*

2. கால்கை எரியும். வயிற்றை வலிக்கும். துவாலை (மாதவிடாய்) உண்டாகும். மார்பு, இடுப்பு, துடை என்பன உளையும். உடல்சோரும் (கருவழிதலால்) சோகமுண்டாகும். (திருவேயனையார் திருமேனிசேரச் சோரும் என்பதால் கணவனுடன் (நோயுற்ற) சேர்வதால் வரும் என்று கருதவும் இடமுண்டு)

3. உடல் நோகும். வயிற்றினில் வலியுண்டாகும். அங்கம் வீங்கி இடர் செய்யும். குருதி பாயும் (கருச்சிதைவால்), விலா நோகும். வயிறிரையும்.

**குறிப்புரை** I:- இங்கு கருங்கிரந்தி என்றது மேக நோயான Syphilis ஐக் குறிக்கிறது. மேக நோயுள்ள பெண் கருத்தரித்தால் அல்லது கருத்தரித்த பின் மேக நோய் ஏற்பட்டால் நான்கு மாதத்துக்குப் பின்னர், (Placenta form பண்ணிய பின்னர்) கருச்சிதைவு ஏற்படும். அதனையே 4,5, 6 ஆம் மாதங்களில் திடமாய் கருவையழிப்பிக்கும் என்று கூறியுள்ளார். அங்ஙனம் கருச்சிதைவு ஏற்படாவிடின் குழந்தை இறந்து பிறக்கும் (Still birth) அதுவே 8 ஆம் மாத்தில் ஏற்படும். (நாம் ஏற்கெனவே குறிப்பிட்டது போல 10 மாதத்துக்கு முன்னர் கருவழிதல் அல்லது இறந்து பிறத்தல் அனைத்தையுமே கருவழிதல் என்றே முன்னோர் குறிப்பிட்டுள்ளனர் என்பதை நினைவிற் கொள்க).



இங்ஙனம் கருச்சிதைவு அல்லது உரிய காலத்துக்கு முந்திய பிரசவம் (Premature delivery) நடப்பதால் யோனியிலிருந்து குருதி பாயும். அடிவயிறு, துடை, இடுப்பு முதலியவற்றில் நோ காணும். அவற்றையே பாடலில் கூறப்பட்டுள்ளது.

**குறிப்புரை:-** II இங்கு கிரந்திநோய் வருவதற்கு உணவுப் பிழைகள் காரணம் என்று கூறப்படவில்லை என்பதையும் கவனத்திற் கொள்க. சிலர் கிரந்தி என்பதை உணவுப் பிழையால் (ஒவ்வாத உணவுகளால்) வரும் ஒரு தோல் வியாதியாகக் கருதுவர். இங்கு அது ஏற்புடையதல்ல.

**குறிப்புரை** - III கிரந்திநோய் ஏற்பட்ட கர்ப்பிணியில் கருச்சிதைவு, குழந்தை இறந்து பிறத்தல் போன்ற நிகழ்வுகளின்றி குழந்தை உயிருடன் பிறந்தால் அக்குழந்தைக்குப் பிறப்புவாசியாக கிரந்திநோய் ஏற்படும். குழந்தை கருவில் இருக்கையில் இந்நோய் தோன்றுவதால் அதனைக் கருவில் தோன்றும் நோய் (Congenital syphilis)என்று கூறுவர். பாலரோகத்தில் கூறப்படும் கிரந்தி என்பது Congerital Syphilis ஐக் குறிக்கும் என்பது இங்கு கூறப்பட்டவற்றிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

Effects of untreated syphilis on pregnancy-

1. Abortion may occur any time after 20 weeks.
2. The foetus may be still born or macerated.
3. The child may have developed congenital syphilis.

குறிப்புரை - IV தற்காலத்தில் தாய்க்கும் அவள் மூலம் சேய்க்கும் கிரந்திநோய் ஏற்படாமல் தடுப்பதற் காக கர்ப்பகாலத்தில் VDRL என்னும் சோதனை செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### சிகிச்சை

1. **பெருங்கிரந்தி எண்ணெய்:-** I கருவுயிர்த்த மூன்றாம் மாதம் மூன்றுநாட்களுக்கு தினம் 1 தேக்கரண்டி வீதமும் நான்காம்மாதம் நான்கு நாட்களுக்கு தினம் 1 தேக்கரண்டி வீதமும், அவ்விதமே 10 மாதம் வரை கொடுத்துவர கிரந்திவகை தீர்வதுடன் தாயும் சேயும் சுகமாக இருப்பர்

**குறிப்புரை** - இதில் மூன்றாம் மாதத்திலிருந்து (பாடல் பார்க்க) கிரந்தியெண்ணெய் கொடுக்கப்பட வேண்டும் என்பதால் அதற்கு முன்னர் கிரந்தியால் (பிள்ளைக்கு) பாதிப்பு ஏற்படாது என்று பொருள். மேலும் தாயும் சேயும் நலமடைவர் என்பதால் இருவருக்கும் ஏற்படும் பாதிப்பு நீங்கும் என்பதும் கருத்து.

2. **பெருங்கிரந்தி எண்ணெய்:-** II - இதனையும் முன்போல உள்ளுக்குக் கொடுத்துவர (கருச்சிதை வின்றி) கர்ப்பம் வளரும்.
3. **செம்பரத்தம்பூ எண்ணெய்:-** கர்ப்பிணிகளுக்கு முன் கண்டவாறு கொடுத்துவர கிரந்திவகை தீரும்.
4. **கிரந்தியெண்ணெய்:-** முன்போல
5. **கொதியெண்ணெய்:-** முன்போல



**குறிப்புரை** - தற்கால மருத்துவத்தில் கர்ப்பிணிகளுக்கு ஏற்படக்கூடிய முக்கிய தொற்று நோய்களாக TORCHS infection கூறப்படுகிறது.

T - Toxo plasmosis - இது கூடுதலாக பூனை மலம் மூலம் பரவும். எனவே கர்ப் பிணிகள் வீட்டுப்பிராணிகள், அவற்றின் மலங்களைத் தீண்டு வதைத் தவிர்க்க வேண்டும்.

O- Other viruses, Eg. Hepatitis B virus, AIDS virus

R - Rubella

C - Cytomegalo virus

H - Herbis zoster

S - Syphilis

இத் தொற்றுக்களால் கருச்சிதைவு, குழந்தை இறந்து பிறத்தல் அல்லது பிறவிக் குறைபாடுகளுடன் (Congenital malformations) பிறத்தல் என்பன ஏற்படக் கூடும்.

# 13. சூசிகாவாயு
## (False labour pain)

சூசிகை - என்றால் கர்ப்பிணி. எனவே கர்ப்பிணி களுக்கு வரும் வாயுத்தொல்லை சூசிகா வாயு வாகும். இதனையும் சூதக வாயுவையும் வேறு படுத்தியறிய வேண்டும். (சூதகவாயு என்பது வலி யுடன் வரும் சூதகத்தை (dysmenorhoea) குறிக்கும்)

மங்கையர்க்குக் கருப்பமுற்ற பத்தா மாதம்
வாயுவினில் வாயுவதிற் பித்தந் தோன்றித்
தங்குகெர்ப்ப பிரவேசங் கண்டா லங்கந்
தனில்வெயர்வை பெலவீனந் தாது நாசம்
அங்ககம்ப மயிர்கூச்ச நெற்றி வேர்வை
யாயசங் குருதிவலி யழலும் வேகம்
துங்கவிழி யுறங்காதோங் காளங் கண்டாற்
சூசிகா வாயுவெனச் சொல்ல லாமே.

**பாடலின் கருத்து:-**

கர்ப்பமுற்ற பத்தாம் மாதத்தில் 2 பங்கு வாதமும் 1 பங்கு பித்தமும் சேர்வதால் வலி ஏற்படுவது சூசிகா வாயுவாகும். இதில் பிரசவம் நிகழாது (கர்ப்பம் தங்கிநிற்கும்). ஆனால், உடல் வியர்க்கும் ; பெல வீனம் குறி நாணுதல் (தாது நாசம்), உடல் நடுங்கும்; மயிர்க்கூச்செறியும்; நெற்றிவேர்க்கும்; ஆயாசம்; குருதி வலி ; அழல், தூக்கமின்மை, ஓங்காளம்.



**குறிப்புரை:-** இதை பிரசவத்தை அண்டிய காலத்தில் ஏற்படும் பொய்யான பிரசவவலி (False pain - பொய் நோக்காடு) என்று கருத முடியும். ஏனெனில், இவ் வலியினால் பிரசவம் ஏற்படாது என்று பாடலிலேயே தெளிவு படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, இதற்குரிய சிகிச்சை மருந்துகளான பலவாய்வுக் குளிகை, வெள்ளை வெங்காயக்குளிகை, பெருங் காய வில்லை என்பவற்றின் குணத்தில் அவை பேற்று நோக்காட்டை - வயிற்றுவலியை தடுத்து நிறுத்தும் என்று கூறப்பட்டுள்ளமை நோக்கற் பாலது.

### சிகிச்சை

1. **பலவாய்வுக்குளிகை:-** உள்ளி, மிளகு, சுக்கு, உலுவா, காக்கணம் வேர் அவித்த நீரில் இரண்டு குளிகை கொடுக்க சூசிகவாயு, அபான வாயு, சுரோணிதவாயு, வயிறு நொந்து வலிக்கும் சூலைவாயு முதலியன தீரும். கெர்ப்பிணிக்கு மலங்கழிந்தால் நற்சீரகமும் ஓமமும் கருகவறுத்த வித்த நீரில் இரண்டு குளிகை கொடுக்கவும்.
2. **வெள்ளை வெண்காயக் குளிகை:-** I - வெந்நீர் அல்லது சாரணைக்கிழங்கு அவித்தநீர் முதலிய வற்றில் கொடுக்கவும். பத்து மாதமும் கொடுக் கலாம்.
3. **வெள்ளை வெண்காயக் குளிகை:-** II - தேனும் இஞ்சிச்சாறும் சேர்த்துக் கொடுக்க வயிற்றின் மந்தம் சூசிகவாயு தீரும். கெர்ப்பணிக்குப் பேதி வேண்டின் நேர் வாளஞ் சேர்ந்த பங்கில் செய்த ஒருகுளிகையை இஞ்சி, தேனில் கொடுக்கவும்.

பலவாயு, பக்கவாயு, அபானவாயு, தீரும். பேற்று நோக்காட்டைத் தடுத்து நிறுத்தும்.

**குறிப்பு** I - முற்காலத்தில் பேதிக்குக் கொடுத்தல் ஒரு வழக்காக இருந்துள்ளது. (ஆரோக்கிய நிலையில் ஆறுமாதத்துக்கு ஒரு தடவை எல்லோரும் பேதிக்கு மருந்து எடுப்பர்) அந்தமுறையில் கர்ப்பிணிகளுக் கும் தேவையைப் பொறுத்து பேதி கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. தற்காலத்துக்கு இது பொருந்துமா என்பது ஆய்வுக்குரியது.

**குறிப்பு** - II அட்ட சூறணமும் கொடுக்கலாம். தற்காலத் திலும் அட்டசூறணம், வெள்ளை வெண்காயக்குளிகை கொடுக்கப்படுகிறது.



# 14. வெள்ளை சாய்தல்
## (Leucorrhoea)

**வேறுபெயர்** - வெள்ளைபடுதல்; வெள்ளை ; மேகம் ; கர்ப்பமேகம்; ஸ்வேதட்பிரதரம்; எலும்புருக்கி; கெர்ப்ப வெட்டை; வெண்துவாலை; கர்ப்பஸ்ராவம்; கர்ப்பப் பிரமேகம் ; வெள்ளைப்பிரமேகம்.

மருமேவு மாலையணி முலைமு கத்து
மானனையார் விரகமுறு மயலே கொண்டு
கருமேவு மடிவயிற்றிற் குத்தி நொந்து
காட்டுவெள்ளை சத்ததுபோற் றுவாலை தானும்
உருமேவி யேசாயும் பிடரி நோவா
முறுநெற்றி தனிலிடிக்கும் வேர்வை சொட்டும்
திருமேனி யும்வெளுத்து மெலிந்து தோன்றுஞ்
செய்குணங்க டோர்ந்துமருந் தீத னன்றே.

**பாடலின் கருத்து:-** அடிவயிற்றில் குத்தி, நொந்து, வெள்ளை நிறமாக துவாலை (யோனிக்கசிவு) வரும். பிடரிநோகும். தலைவலிக்கும். வேர்க்கும். தேகமும் வெளுத்து மெலிந்து தோன்றும்.

### 14.01 எலும்புருக்கி

கர்ப்ப காலத்தில் ஏற்படும் வெள்ளைபடுதல் வகைக்கு "எலும்புருக்கி" என்றும் பெயர். (சிறுவருக்கு ஏற்படும் எலும்புருக்கிநோய் (Rickets) என்பதும் இதுவும் ஒன்றல்ல என்பதைக் கவனத்திற் கொள்ள வும்) இதனையே கர்ப்ப மேகம் என்றுங் கூறுவர்.

உட்காய்ச்ச லெடுக்குமத்தியுறையும் வெப்பு
முயர்கிரந்தி யதிகரிக்கு மூல வாயு
நட்பாக வேயுண்டாம் வெள்ளை சாயுந்
நவில்வாதங் கோவித்தாற் பெரும்பா டாக்கும்
கொட்பான பித்தமது கோவி க்குங்காற்
கொடியவெலும் புருக்கியினிற் சாய்க்குஞ் சாய்த்தால்
தட்பான காலெரியு மலமுஞ் சிக்குந்
தலைவலிமெய் கிறுகிறுக்கும் வற்றுந் தானே.

**பாடலின் கருத்து:-** உட்காய்ச்சல், எலும்புறையும். நிணநீர்க் கணுக்கள் வீங்கும் (இங்கு கிரந்தி என்பது Inguinal Glands) மூலவாயு உண்டாகும். வெள்ளை சாயும். வாதம் மிகுந்தால் அதிகளவில் வெள்ளை சாயும். (இங்கு பெரும்பாடு என்றது அதிகளவில் வெள்ளைபடுதலைக் குறிக்கும்) பித்தம் கோவித்தல். வெள்ளை சாய்தலுடன் காலெரிவு, மலச்சிக்கல், தலைவலி, தலை கிறுகிறுத்தல், உடல்மெலிதல் என்பன ஏற்படும்.

**குறிப்புரை:-** இங்கு வெள்ளை சாய்தல், எலும்புருக்கி என்பவற்றுக்கு ஒரேவிதமான சிகிச்சைகளே கூறப் பட்டுள்ளன. எனவே, சாதாரண காலங்களில் பெண் களுக்கு ஏற்படும் வெண்ணிற யோனிக்கழிவை வெள்ளைசாய்தல் என்றும் கர்ப்பகாலத்தில் ஏற்படும் வெள்ளை சாய்தலை எலும்புருக்கி என்றும் கருத இடமுண்டு.

**குறிப்புரை II-** வெள்ளை சாய்தலை தற்கால மருத்துவத் தில் Leucorrhoea என்று கூறுவர்.



## சிகிச்சை

1. **நீற்றுப் பூசணி நெய்:-**
2. **சஞ்சீவிச் சூரணம்:-** 40 நாள் காலை, மாலை வெந்நீரில் சாப்பிடவும் கிரந்திப்பண்டம், கார சாரவகை நீக்கவும்.
3. **சீந்தில் நெய்:-** அத்திப்பட்டை மேற் பொடி தூவிக் கொடுக்க கால்கையெரிவு, வெள்ளைசாய்தல் எலும்புருக்கி, நெஞ்செரிவு, வரட்சி தீரும்.
4. கற்றாளை மணியும் சந்தனமும், பசு வெண்ணெ யிற் குழைத்துஎலுமிச்சங்காயளவு விழுங்கவும்.
5. சீந்தில் தண்டும், நெல்லி முள்ளியும் வகை 5 களஞ்சு எடுத்து, குடிநீரிட்டுப் பசுநெய் கலந்து குடிக்கவும்.
6. பொன்னாங்காணிவேர்,வெள்ளறுகம்வேர், முத்தற் காசு, நற்சீரகம், ஏலம், உலுவா இவை சமன் எடுத்து, பசுப்பால் விட்டரைத்து எலுமிச்சங் காயளவு எடுத்து பசுப்பாலிற் கலக்கிக்குடிக்கவும்.
7. தாதுமாதுளைவேர், குப்பை மேனிவேர், வசம்பு, உள்ளி, எண்ணெயிற்காய்ச்சி உள்ளுக்குக் கொடுக்க மாறும்.
8. அதிமதுரம், கோட்டம், யானைத்திப்பலி, அதா வரிசி, சுக்கு, வெட்பாலையரிசி, மாஞ்சில், செங்கழுநீர்க் கிழங்கு, கண்டில் வெண்ணெய், நன்னாரி, தாமரைக் கிழங்கு, இலாமிச்சு வகைக்கு - 2 களஞ்சு பசு நெய் விட்டுக் காய்ச்சி உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.
9. **வெண் பூசணிலேகியம்:-** கொட்டைப்பாக்களவு, காலை, மாலை பாலிற் கொடுக்கலாம்.

# 15. கர்ப்ப காலத்தில் ஏற்படக் கூடிய சில பொதுவான நோய்களும் அவற்றுக்கான சிகிச்சையும்.
## (Common illness during pregnancy)

### 15.01. கெர்ப்பிணி கழிச்சலுக்கு பாகு
(Diarrhoea during pregnancy)

i. அதிவிடயம், கல்நார், ஓமம், கராம்பு, நற்சீரகம், சாதிக்காய், இலவம் பிசின், குறாசானி, கைப்பு, சுத்தி செய்த - கஞ்சா, அபின் வகை கழஞ்சு 1 வறுத்து, தேனைக் காய்ச்சி நுரை நீக்கி இறக்கி ஆற்றி அதில் சூரணத்தைத் தூவிக்கிண்டி தூதுளங்காயளவு கொள்ளவும்.

ii. சுண்டைவற்றல் சூரணமும் கொடுக்கலாம் திற்பலி, வேர்க்கொம்பு, நற்சீரகம், ஓமம், மாங்கொட்டைப்பருப்பு கழற்சிப்பருப்பு, கரு வேப்பந்தண்டு, சுண்டைவற்றல், கருவேப் பிலை சமன் வெதுப்பிச்சூரணித்து வெருகடி பிரமாணம் நாள் 2 முறை தேனில் கொடுக்க.



### 15.02. கெர்ப்பிணி பித்தத்துக்கு
(Vomiting, Giddiness during pregnancy

அதிமதுரம், இலாமிச்சம்வேர், கோட்டம், ஏலம் சமன் நருக்கி நாழி நீர் விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும்.அனுபவ வைத்தியர்கள் அத்திப்பட்டை, மலைதாங்கி வேர், வெந்தயம் ஆகியவற்றையும் சேர்க்கலாம் என்பர்.

### 15.03. கெர்ப்பிணி சிலேற்பனத்துக்கு

கொன்றைப்பட்டை இருநாழி நீர்விட்டு உழக்காய்க் காய்ச்சி திப்பிலி மேற்பொடி இட்டுக் கொடுக்கவும்.

### 15.04. கெர்ப்பிணி காய்ச்சல், கழிச்சல் முதலிய வற்றிற்கு காந்த பூபதிச் சூறணம்.

ஊசிக்காந்தம், வசுவாசி, கடுகு, கருஞ்சீரகம், பெருங்காயம், அதிவிடயம், ஓமம், குங்குமப்பூ, கோரோசனை, அபின் வகை கழஞ்சு 1 சூரணித்து ஏழு புடம் பண்ணி தேனிலிடவும், கழிச்சல் முதலியன தீரும். மீறினால் மோரை வற்றக் காய்ச்சி அதிலிடவும்.

### 15.05. கெர்ப்பிணி வீக்கத்துக்கு
(Oedema during pregnancy)

கர்ப்பிணிகளுக்கு கர்ப்பகாலத்தில் இலேசாக கால், முகம், உடம்பு அதைப்பது (வீங்குவது) வழக்கம். அதற்கு சிறுநீர்பெருக்கி அவுடதங் களும், உப்பு, புளியைத் தவிர்ப்பதும், ஓய்வும் போதுமானது.

ஆயினும் சில நிலமைகளில் கால் வீக்கம், சிறுநீரில் அல்புமின், இரத்த அழுத்தம் அதிகரித்தல், உடல் நிறை வழமையிலும் கூடுதலாக அதிகரித்தல் போன்ற நிலைமைகள் ஏற்படின் அது கர்ப்பகால நச்சு வியாதியின் ஆரம்ப அறிகுறியாகும் (Pre eclampsic Toxaemia) அதற்கு தகுந்த சிகிச்சைகளைப் பெறுதல் அவசியமாகும்.

**1. கெர்ப்பிணி வீக்கத்துக்குக் குடிநீர் - I**

i. சாரணை - கழஞ்சு - 8 பச்சையிஞ்சி - கழஞ்சு 12 இவைதட்டி பசுப்பால் அரைப்படி தண்ணீர் அரைப்படி விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி ஐந்துநேரம் குடிக்க கெர்ப்பத்து மேல்வீக்கம் தீரும்.

ii. சாரணைக்கிழங்கு - கழஞ்சு - 5 பச்சையிஞ்சி 10 நீர் முள்ளிவேர் - கழஞ்சு 12 கடுக்காய் - கழஞ்சு - 6 இவையெல்லாம் தட்டி நாலுபடி தண்ணீர்விட்டு ஒருபடியாய் வற்றவைத்து எட்டு நேரம் குடிக்கவும்.

**2. புளியமிலைக் குழம்பு**

புளியமிலை காற்றுலாம். கழுநீர்க்காடி நாலு கொத்திலிட்டு அவித்து பழைய இரும்புக்கிட்டம் சுட்டு இடித்ததூளை அதற்குள்போட்டு நன்றாய் வித்தபின் நாலு முறை துவைத்துப் பிழிந்து வடிகட்டவும். பலமுறை வடிகட்டி உள்ளி, மிளகு, கடுகு



வகை - பலம் - 1, இலை நீரிலரைத்துக் கலக்கி காய்ச்சிப் புளிப்பதத்தில் பசுநெய்விட்டுக் காய்ச்சவும். தூதுளம்பழமளவு ஆண்பனையின் பனங்கட்டி கூட்டித் தின்ன கரப்பன், கிரந்தி, வீக்கம், சிலேற்பனம், முட்டுத் தாகம் நெஞ்சடைப்புத் தீரும். சலம்கழிந்து வீக்கம் வடியும். உப்பு, புளி குளிப்பு, முழுக்கு ஆகாது. அறைக்கீரை, முருங்கையிலைத் தண்ணீர், மிளகு, உள்ளி கூட்டிவரவும்.

**3. வீக்காரிச் சூரணம்**

இருசீர கங்கோட்ட மேலங் காந்த
மியலுந்நீர் வெட்டிவிரை பூத விர்க்கம்
தருசீனங் கல்லுப்பு வளைய லுப்புத்
தகரமக்க றாவினங்கங் கராம்பு கிட்டம்
வரு வேவி னிலை முள்ளி யுருவி வித்து
வான்மிளகு வெண்காரங் கழஞ்சி ரண்டு
பொரிகார மெண்கழஞ்சு பொரித்துக் கூட்டிப்
புகன்ஞாழல் ரேசினையுங் கழஞ்சொவ் வொன்றே. 1.

ஒன்றித்தே யிடிபொடித்துக் கருவு யீர்த்த
வொண்டொடியார்க் குறுவிக்க மொழியு மாற்றால்
வென்றிதரு கற்கண்டை யவித்த நீரில்
வெருகடிதூ விட்டுண்ண நீரும் போகும்
நன்றிதரு முடற்கனப்பு வெளுப்போங் கான
நவிலசதி நெஞ்சிடிப்புந் தீர்ந்து போகும்
குன்றுநிக ருந்தனத்து வடிவே லுண்கட்
கொடிநுசுப்பி னடைபயிலுங் கோல மானே. 2.

**4. கெர்ப்பிணி வீக்கத்துக்கு மிளகாய்த்தைலம்**

**5. கர்ப்பிணி வீக்கத்துக்கு சூறணம்**

திற்பலிமூலம், வெண்காரம், அரத்தை, குரோசாணி அசமதாகம், உருளரிசி, திற்பலி, இந்துப்பு, சாதிக் காய், இருசீரகம், பெருங்காயம், வசுவாசி, மிளகு, அதிமதுரம், கராம்பு வகை - 1 களஞ்சு, வேர்க்கொம்பு - 12 களஞ்சு, சூரணஞ் செய்து, ஏழுதரஞ் சட்டி யைக் காயவைத்து, ஒவ்வொரு முறையுஞ் சட்டியிற் போட்டு எடுத்து அம்மியில் இட்டு அரைத்து வைத்துக் கொண்டு இஞ்சிச் சாற்றில் வெருகடிப் பிரமாணம் 7 நாள் 14 நேரம் தின்னவும். சுடு தண்ணீர் பாவிக்க வும். வீக்கம், குதிரைவலி, விறைப்புச் சுரம், நீர்க் கோவை யோடு கூடிய மந்தம், பொருமல் முதலியன தீரும்.

**குறிப்புரை:-** இங்கு வீக்கம், குதிரை வலி தீரும் என்பதி லிருந்து இவை இரண்டுக்கும் இடையில் தொடர்புண்டு என்பது தெரியவருகிறது.

**6. கர்ப்பிணி வீக்கத்துக்குக் குடிநீர் - II**

வீளி, எருமைமுல்லைவேர், வவ்வுலொட்டிவேர், பிறங்கைநாறியிலை, சிறுகாஞ்சோன்றிவேர், பிரமி ச மூலம், கையாந்தகரைச் சமூலம், நிலபாகல், சமூலம், பேய்ப்புடோல்வேர், நீர்முள்ளிச்சமூ லம், சுரையிலை வகைக்கு - 1 பிடி
தண்ணீர் - 4 படி
கொத்தமல்லி - 5 களஞ்சு



சுக்கு,திற்பலி வகை 4 களஞ்சு, கடுக்காய், கராம்பு வகை 2 களஞ்சு, குடிநீரிட்டு 1/8 ஆக்கி பொரிகாரம் 3 களஞ்சைத் தூளாக்கி பேன்பிடிப் பிரமாணமாகப் போட்டு 3 நாள் 6 நேரம் குடிக்கவும்.

**7. கர்ப்பிணி வீக்கத்துக்கு குடிநீர் - III**

சுரைத் தண்டு, நீர்முள்ளி, கையாந்தகரை நீற்றுப் பூசணித்தண்டு, நாயுருவி, பிரமி. கோரைக் கிழங்கு வகைக்கு 1 பிடி வேர்க்கொம்பு - 1 களஞ்சு, குடிநீரிட்டு 2 நாள் 4 நேரம் குடிக்க வீக்கம் தணியும்.

* நீர்முள்ளி, ஆலஞ்சருகு, காக்கணங்கொவ்வை, வீளி இவைகளைத் தண்ணீரில் அவித்துக் குளிக்க வார்க்கவும்.

## 15.06. கெர்ப்பிணி நீர்க்கடுப்பு, எரிவுக்கு

(Dysuria, buring during pregnancy)

கர்ப்பகாலத்தின் ஆரம்பத்திலும், இறுதியிலும் சிறுநீர் வெளியாவதில் சிக்கல்களும் நீரெரிவு அல்லது நீர்க்கடுப்பும் காணப்படும் அதற்கு

1. மானே யரத்தை வசுவாசி மதுர மேல நாகம்பூத்
தேனே சீரக மிந்துப்புச் சேர்முக் கடுகு மரமஞ்சள்
தானே குலக்கா யொவ்வொன்றுஞ் சார்முக் கழஞ்சு
குங்குமப்பூ
ஆனே யதனிற் சினையிரண்டு கழஞ்சு பன்னை யொருகழஞ்சே.
1.

ஏயுந் தூளைச் சட்டியினி லிட்டே புடமோன் றெடுத்தரைத்து
நீயுஞ் சீனி யனுபான நேரே கூட்டி யினிதருந்த
நோயுஞ் செய்யு நீர்க்கடுப்பு நுவலு மெரிவு சூட்டினுடன்
வாயு மகலுஞ் சூலியர்க்கு வகுத்தா ராயுள் வேதியரே.

2.

**2. குளப்பாலை நெய்**

சுக்கு, மிளகு, ஏலம், திற்பலி, கடுக்காய், அதி மதுரம், ஓமம், தான்றி, கராம்பு, நற்சீரகம், சாதிக்காய், பேய்ப்புடோல்வேர், குளப்பாலைவேர், பொன்னாங் காணிவேர், கண்டங்கத்தரிவேர், கோவை வேர் வகை - 1 களஞ்சு, குளப்பாலை, பொன்னாங்காணி, பேய்ப் புடோல், கொவ்வை, அறைக் கீரை, கண்டங்கத்தரி சாறு வகை ¼ படி. எல்லாவற்றையும் பசுப்பாலில் அரைத்துக் கரைத்து மெழுகுபதத்தில் வடித்து, ஒரு சதமளவு ஒரு நாள் 2 முறை உண்ணவும்.

3. கோழி முட்டை வெண்கருவையும்,கடுக்காயையும் அரைத்து அடிவயிற்றில் பூசவும்.

4. ஒரு கொட்டைப்பாக்களவு அரைத்த சந்தனத்தை நீர்முள்ளியிலை அல்லது பசளியிலைக் கஷாயத்தில் கலந்து கொடுக்கவும்

5. நன்னாரி வேர் அல்லது ரோசாப்பூவை நீரில் அவித்துக் கொடுக்கவும்.



**6. கொத்தமல்லி மிருத்தியாதி**

கொத்தமல்லி, கோட்டம், நற்சீரகம், இலவங்கம் வேர்கொம்பு, மிளகு, கல்நார், இலாமிச்சு, நன்னாரி, கோரைக்கிழங்கு, சந்தனம்வகை 1 களஞ்சு. இவற்றைச் செவ்விளநீர் விட்டரைத்து, மிளகளவு உருண்டை செய்து, சீரகம் அவித்தநீரில் நாள் 2 குளிகை கொடுக்கவும். நீர்க்கட்டு, நீர்க்கடுப்பு தீரும்.

## 15.07. கர்ப்பிணிகளிற் காணும் கைகால் எரிவுக்கு

(Neuritis) *(அழல்வாதம்)*

பறங்கிக் கிழங்கு, நற்சீரகம், நன்னாரிக்கிழங்கு அமுக்கிராய் வகை 1 களஞ்சு, இயங்கங்கிழங்கு ¼ களஞ்சு. குடிநீரிட்டு காலைமாலை குடிக்கவும். குடிக்கும்போது பசுவெண்ணெய் 1 கொட்டைப் பாக்களவு சேர்த்துக் குடிக்கவும். இவ்விதம் 3 நாள் குடிக்கவும்.

# 16. பிரசவம்
## (Labour)

பிரசவம் என்பது சாதாரண நிகழ்வாகும் என்பதனால் அதுபற்றி பரராசசேகரத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் பிரசவத்தின்போது ஏதும் சிக்கல்கள் ஏற்பட்டு அதன் பயனாக பிரசவம் தாமதம் அல்லது தடைப்படுமானால் அதனைத் தூண்டுவதற்குரிய சில வழிமுறைகள் (Induction of labour) பற்றி கூறப்பட் டுள்ளது.

**அவை வருமாறு:-**

1. பருத்திக்கொட்டையும், ஈரவெங்காயமும், மிளகும் அரைத்துப் பிழிந்து நல்லெண்ணெய் கலந்து உள்ளுங்கொடுத்து வயிற்றிலும் பூசப் பிள்ளை பிறக்கும். நஞ்சு விழும். பூசிய மருந்தை உடனே கழுவி விடவும்.
2. பூநாகம் அரைத்துப் பிற அடியிற் தடவப் பிள்ளை பிறக்கும். உடனே கழுவிவிடவும். கழுவாதிருந்தால் குடல் தள்ளும்.
3. நத்தைச்சூரி இலையரைத்துப் பாக்களவு தயிரிற் கொடுக்கப் பிள்ளை பிறக்கும்.
4. வெள்ளைக் காக்கணம்வேரை வாய்பேசாமற் பிடுங்கித் தலையிற் கட்டினாலும், உத்தமாகாணி வடக்குவேரை அங்ஙனமே பிடுங்கி மோதிரமாக்கிக் காற்பெருவிரலிற் போட்டாலும் பிள்ளை பிறக்கும். உடனே அகற்றி விடவும்.



5. இலவம்பிசின், முதற்காசு, சதுரக்கள்ளிவேர், ஓமம் நீர்வார்த்தரைத்துக் கீழ் வயிற்றிற் கீழ்நோக்கிப் பூசப் பிள்ளை பிறக்கும். செத்த பிள்ளையும் விழும்.
6. **கெர்ப்பரத்தினாதிக்குளிகை** - பிரசவவைத்தியத்தில் இது ஒரு முக்கிய மருந்தாகும். பிரசவத்தின் போதும் அதன் பின்னரும் ஏற்படும் பல சிக்கல் களுக்கு இது சிறந்த மருந்தாகின்றது.

   இருசீரகம், திரிகடுகு, திரிபலை, ஓமம், இந்துப்பு, அதிவிடயம், கிருமிசத்துரு, குறாசாணி, செங்கழுநீர்க்கோட்டம், சாத்திரபேதி, வால்மிளகு, உலுவா, வாய்விடங்கம், அதிமதுரம், மகரப்பூ, மஞ்சள், உள்ளி, வில்வப்பழச்சதை, விளாம்பழச் சதை, மனோசிலை, சாதிலிங்கம், வெள்ளைப் பாசாணம், - வகை - கழஞ்சு 2, சிற்றாமணக்கின் பருப்பு, சுத்தி செய்த நேர்வாளப்பருப்பு வகை - கழஞ்சு 2, மனோசிலை, வெள்ளைப்பாஷாணம், சாதிலிங்கம் மூன்றையும் நன்கு சுத்திசெய்து கொள்ளுக. எல்லாம் பொடிசெய்து கல்வத் திட்டு முடிதும்பைச்சாறுவிட்டு ஒருநாளும் பெருந்தும் பைச்சாறுவிட்டு ஒரு நாளும் ஆக இரண்டு நாளரைத்து மெழுகுபதத்தில் குன்றி மணியள வுருட்டி நிழலுலர்த்தி மஞ்சட்தூளுட் போட்டு வைத்துக் கொள்ளவும்.

**பிள்ளைபிறக்க நோக்காடு கண்டு பின் நின்று போனால், வெள்ளைசாய்ந்தால்** - இலவம்பட்டையைத் துவைத்து அவித்துப்பிழிந்த நீரிற் கொடுக்கவும்.

**பிள்ளை சிரசுதயங்கண்டுபின் நோக்காடு நின்று போனால் -** வேப்பிலைச்சாற்றிலிடவும்.

**பிள்ளை குறுக்கிடாமலும் முதலிற் காலுதயங் கண்டு பின் தாமதம் நேர்ந்தாலும் -** குன்றியிலைச் சாற்றில் வெடியுப்பு கூட்டிக் கலக்கி வடிகட்டி அதிற்கொடுக்கவும். அல்லது மருக்காரங் காய்ச்சாற்றிடவும்.

**நஞ்சுவிழ -** உலுவா வறுத்துப் பொடி செய்து நல்லெண்ணையிற் கலக்கி ஒரு குளிகை கொடுக்கவும். அல்லது பருத்தியிலைச் சாற்றிலிடவும்.

**செத்தபிள்ளை விழ -** மாதாளம்பிஞ்சரைத்து கழுநீரிற் கலக்கி ஒரு குளிகை உரைத்துக் கொடுக்கவும். அல்லது பருத்தியிலைச் சாற்றிலிடவும். செத்தபிள்ளை மாதாளம்பிஞ்சரைத்துக் கழுநீரிற் கலக்கி ஒருகுளிகை உரைத்துக் கொடுக்கவும். அல்லது பச்சைக்கொள்ள வித்துக் கோட்டத்தூளும் குளிகையுமிட்டுக் கொடுக்கவும். வேப்பெண்ணெய் கூட்டியும் கொடுக்கலாம்.

**வயிறு வலித்தால் -** திரிபலைக் கஷாயத்திலிடவும், அல்லது செம்முள்ளிவேர், ஆடாதோடைவேர், அமுக்கிராய்வேர், உள்ளி, மிளகு, பெருங்காயம் கோட்டம், சாரணைவேர், கடுக்காய் சமன்கொண்டு அவித்த நீரிலிடலாம்.

**சத்திக்கு -** குப்பை மேனிச் சாற்றிலுரைத்து உள்ளுக்குக் கொடுத்து தயிர்வேழைச் சாற்றிலுரைத்து வலது காலிற்றடவவும்.

**ளிவிற்கு -** மேனிச்சாற்றில் நல்லெண்ணெய் கலந்திடவும்.



**குத்துக்கு -** தோடம்புளியிலிடவும்.

**கழிச்சலுக்கு -** தயிர்வேளைச்சாற்றிலுரைத்து இடது காலிற்றடவவும்.

**துவாலைமறித்தால் -** பருத்தியிலைச்சாறும் சுக்கவித்த நீரும் கலந்திடவும். அல்லது நொச்சி கொடிக்கள்ளிக் கொழுந்து , மாவிலங்கை, கொன்றை, வேம்பு, தோடை, குன்றிமணி, குப்பைமேனி இவை வண்டில வித்துப் பிழிந்து அதிற் குளிகையிடவும்.

**பிள்ளையைப் பெற்றவுடன் கடுமையான வயிற்றுவலி கண்டால் -** உள்ளி கழற்சித்துளிர் நொச்சி வகை - பிடி - 1 வண்டிலவித்து பிழித்து அதிலிடவும்.

**சுரங்கண்டால் -** வசம்பு உள்ளி தூள்செய்து துளசிச் சாற்றில் கலக்கி அதில் குளிகையுரைத்துக் கொடுக்கவும்.

**பெற்றவள் நாக்கிற் கெந்ததாளிக்கு -** சீந்தில், சிறுவழுதலை, கண்டங் கத்தரி, இருவேலி, இலாமிச்சு சமன்கொண்டு அவித்த நீரிலிடவும்.

**இரட்டைப் பிள்ளைகளில் ஒன்று பிறந்து ஒன்று பிறக்காமலிருந்தால் -** மிளகுதூள் பசுநெய்யிற் கொடுக்கவும். அல்லது மதுரம் சன்னிநாயகன் கோட்டம், கடுக்காய் இவையவித்த நீரிலிடவும்.

7. **நஞ்சுவிழ** - குழந்தை பிறந்த பின்னர் நஞ்சு சில வேளை வெளியாகாமல் இருக்கலாம் அதற்கு-கார்த்திகைக் கிழங்கு அரைத்துத் தொப்பூழிற் போட நஞ்சு (Placenta) உடனே விழும். கழுவிப் போடவும்.

### 16.01 செத்த பிள்ளை விழ (பிறக்க)

சில சந்தர்ப்பங்களில் குழந்தை கருப்பையில் இறந்து (Intra uterine death) பிரசவம் நிகழாதிருக்கும். அத்தகைய சந்தர்ப்பங்களில் பிள்ளையைப் பிறக்கச் செய்வதற்கு:-

1. தயிர்வேளை அரைத்து உள்ளங்காலிற் பூசினாலும், துத்திவேரை அரைத்துப் பூசினாலும் வெள்ளைப் பாஷாணம் முலைப்பாலிலரைத்துத் தொப்பூழிற்பூசினாலும் விழும். உடனே கழுவிப் போடவும்.

2. தேங்காய்ப்பால் - உழக்கு, பெருங்காயம் கழஞ்சு ! ஆமணக்கெண்ணெய் இருகழஞ்சு கூட்டிக் குடிக்க விழும்.

3. பச்சைக்கொள்ளு ஒருசிறங்கை, செங்கழுநீர்க் கோட்டம் அரைக்கழஞ்சு அரைத்துக்கொடுத்தாலும், ஆடுதின்னாப்பாலையிலை அரைத்து இளவெந்நீரிற் கொடுத்தாலும், சணல்விரை இள வெந்நீரில் அரைத்துக் கொடுத்தாலும் செத்த பிள்ளை விழும்.



# 17. பிரசவத்தின் பின்னான பிரச்சினைகள்

## (Problems During Puerperal Periods )

### 17.01 பிரசவத்தை அடுத்து துவாலை அதிகரித்தால்

(Excessive vaginal discharge after delivery)

பிரசவத்தை அடுத்து சிலவேளைகளில் துவாலை அதிகரித்துக் காணப்படலாம். The amount of lochia varies in different women, and it gradually diminishes from day to day. Women who menstruate freely, usully have profuse lochia.

உரைக்கும் பிள்ளை துஞ்சிடினு முயிருண் டெனினும் பிறப்பதனுக்
கரைக்குந் திப்பிலி யிந்துப்பு மப்பு தனைவிட் டரைத்தருந்தப்
புரைக்கு நஞ்சு பிள்ளை விழும் புகலும் வயிறு கழிந்திடுகில்
தரைக்கு ளசமோ தகமுள்ளி தயங்கு முலுவா வேர்க்கொம்பே. 1.

கொம்பே மிளகு மிவையரைத்துக் கூறு மெலுமிச் சம்புளி
நம்பிக் கரைத்துக் குழம்பாக்கி நயக்கக் காய்ச்சிக் கொடுத்திடுகில்
பம்புங் கழிச்ச றனையடைக்கும் பலகாற் றுவாலை படும்போர்க்குச்
செப்பு நிகரு மத்திதனிற் சிறந்த பட்டை யூ றிடுநீர். 2.

நீரு மெருமைப் பாலிரண்டு நிறையே குறுவை நெல்லரிசி
ஆரு மாவிற்களிகிண்டி யருந்த விரண்டா நாள்நாவற்
சாருந் தோலின் மூன்றாநாட் டயங்கு மிலுப்பைப் பட்டையினிற்
சீருஞ் சரியாஞ் சன்னிக்கு சிறக்த காயஞ் செப்புவனே. 3.

## 17.02 பெற்ற வீட்டிற் சந்நி

பிரசவத்தை அடுத்து சிலருக்கு சந்நி ஏற்படலாம். அதனையே பிரசவ சந்நி என்பர். சிலவேளை காய்ச்சல் மிகுதியாகி சுயநினைவற்றுப் பிதற்றவும் (Delirium) கூடும். ஆயினும் இங்கு குறிகுணங்கள் கூறப்படவில்லை. சிகிச்சை மட்டுமே கூறப்பட்டுள்ளது.

* **பெற்ற வீடு** - Birthing room / Delivery room

செப்பு முலுவா வசம்புள்ளி சேரு மிருசீர் பெருங்காயம்
அப்பு மசமோ தகம்வெளுத்த லரிய பிசினு மிளகுசுக்கு
ஒப்புங் கான்றை சாறணையோ டுசித முருங்கை
யிலைவேரும்
அப்புங் காயங் காய்ச்சியுட னருந்த தீரா தாகிலுங்கேள். 1

கேளே வெள்ளைச் சீலைதனைக் கிளரும் பூ மத்
திலைச்சாற்றில்
தாளே தோய்த்துக் காயவைத்துத் தயங்குஞ் சுக்குப்
பெருங்காயம்
வேளே வெளுத்தற் பிசின்மிளகு திரியைச் சுருட்டியபின்
வாளார் விழியாய் நல்லெண்ணெய் வார்த்துத்
திரியிற்றயிலமெடே.
2.

குறிப்பு:-

மேற்படி தைலம் காசெடை உட்கொள்ள சந்நி தீரும், பிரசவ சந்நிக்கும் சூதகசந்நிக்கும் வேறு பாடுண்டு. சூதகசந்நி என்பது Hysteria வாகும்.



## 17.03 துவாலை மறிபட்டால் காயம்

(Stoppage of Vaginal Discharge After Delivery)

சில நிலைமைகளில் பிரசவத்துக்குப் பின்னர் துவாலை குறைவாகப் படலாம். அல்லது முற்றாக மறிபடலாம். அதாவது வெளியாகாமல் இருக்கலாம். அவ்விதம் இருப்பின் அதுவும் ஆபத்தான குறியாக அமையலாம். சந்நியை அடுத்து, துவாலை மறிபடு தல் பற்றிக் கூறப்பட்டிருத்தல் இரண்டுக்கும் இடையில் தொடர்பு இருக்கக்கூடும் என்பதையுணர்த்துகிறது.

குறிப்புரை:-

Sudden stoppage of lochia is sometimes an indication of the onset of sepsis.

**துவாலை மறிபட்டால் காயம்**

தயிலங் காசிடை யுட்கொள்ளிற் சன்னி தீருந் தவறாமல்
மயிலே வயிறு நெருநெருத்து மறித்துத் துவாலை படாதாகில்
பயிலு மிருசீர் திரிகடுகு பகரிந் துப்புப் பெருங்காயம்
துயிலும் வசம்பு பிசினு[illegible]ாச் சொல்லு மஞ்சள்
கான்றையுமே. 1.

கான்றை நொச்சி சாரணைவேர் கடிய நிம்ப விலையவித்துத்
தோன்று நீரா லரைத்திதனைச் சொல்லுங் காயங்
கொடுத்திடுகில்
ஊறுந் துவாலை யுடைத்துடனே யுரத்த குத்து
மு[illegible]ன்மாறும்
ஏன்ற வீக்கக் குடிநீரை யியம்பக் கேளு மேந்திழையே. 2.

**2. கறுப்புச் சூரணம்**

உரைபெறு சுக்கெண் கழஞ்சுதோல் போக்கி
    யோட்டினிற் கருகிட வறுத்தே
யுற்றிடும் கரிய சீரகந் தானு
    மோதுமெண் கழஞ் சது வறுத்து
வரைபெறு காந்த மறுகழஞ் சதுவும்
    வறுத்திட நன்றதா மிலிங்கம்
மறுவறச் சுத்தி செய்திடு கெந்தி
    வகைக்கிரு கழஞ்சது வாகப்
பொரியுறு காரம் பொரித்திரு கழஞ்சு
    புகன்றிடு சூதமோர் கழஞ்சு
பொற்புற நன்றா யரைக்கிடக் [illegible]கும்
    புகன்றிடு மிதற்கனு பானம்
திருவுறு மகவை யீன்றநல் லார்க்குச்
    சேர்ந்திடு மிஞ்சிசா ரணையுஞ்
செப்பிடு முள்ளி யவித்தநீ ரதனிற்
    சேர்த்தருந் திடவுநன் றாமே. 1.

நன்றி யற்றிடு குத்துக் கொளுவலு
    நாடி டுங்குளிர் கூதலு மாறிடும்
ஒன்று முள்ளியுந் தேனுங் கலந்துமே
    யுண்ணச் சத்தி கழிச்ச லசீரணம்
பொன்றி டுஞ்சிக்கி நிற்குந் துவாலையும்
    போகு மேற்ற வனுபானத் தோடுணில்
என்று மாமுனி வோருற் றுரைத்தன
    ரெண்ணு நோய்பல பாவத்திற் றீருமே. 2.



## 17.04 பெற்றவள் வீக்கத்துக்கு குடிநீர்

***பிரசவத்துக்குப் பிறகு சிலரில் சிறுநீர் வெளியாகாமல் போவதால் அடிவயிறு வீங்கும். சிலவேளை கால், உடல் என்பனவும் வீங்கலாம். அதற்கு சிறுநீரை வெளியாகச் செய்வதற்கு உரிய சிகிச்சைகளை மேற்கொள்ளவேண்டும்.***

**குறிப்புரை:-**

Some mothers find it very difficult to void for a day or so after confinement. The bladder should be emptied within six hours of the termination of labour Over distension of the bladder may cause postpartum haemorrhage.
The patient may be unable to void for the following reasons-

1. Swelling of the urethra and surrounding parts due to bruising and slight lacerations during delivery.
2. Perineal stiches, which may cause a spastic condition of the sphincter of the bladder.
3. Decrease of bladder tone, with increase bladder capacity
4. General fatique

5. Nervousness, or a tense attitude on the part of the patient. Sometimes the patient may not be able to urinate while another person is in the room, but may be able to do so, if alone and quite.

6. Dehydration

**1. பெற்றவள் வீக்கத்துக்குக் குடிநீர்**

இழைக்குங் குடிநீர் பற்படாக மிதநீர் முள்ளிக் கொடிகழலின்
முளைக்குங் கொழுந்து நொச்சியினின் முதிய கொழுந்து
துளசிசங்கு
தழைக்குந் தென்னங் குருத்துடனே தயங்குந்
தூதுவளைவேரும்
விழைக்கு மொரோன் றொருபிடியாய் வேர்க்கொம்புள்ளி
திப்பிலியே. 1.

திப்பிலி யிவைக ளிருகழஞ்சு சேரு மிளகு மொருகழஞ்சு
கற்புகு தண்ணீர் நாழிவிட்டுக்காய்ச்சி யுரிய தானபின்னர்
அற்புறு கருப்புக் கட்டியுட னருந்திக் குடிநீர் குடிப்பீரால்
வெற்புறு முலையாய் வீக்கமெல்லாம் விட்டே யேகி
விடுங்காணே. 2.

**2. பிள்ளை பெற்றவுடன் வயிறு வீங்கினாற் குடிநீர்**

எருக்கு, முருங்கை, கண்டங்கத்தரி, சுக்கு, மிளகு, திப்பிலி, உள்ளி, ஓமம், குடிநீர் காய்ச்சிக் குடிக்க வீக்கம் வற்றும்.



**3. வேப்பிலைக் காயம்**

வேப்பிலை 3 பங்கு, பாகலிலை, திராயிலை, குறிஞ்சாவிலை இவை - ஒரு பங்கு துவைத்துச் சாறுகொண்டு கடுகு, மிளகு, சுக்கு, உள்ளி, கடுக்காய் சமன்கொண்டு அரைத்துக் கரைத்துக் காயங் காய்ச்சி சிற்றமணக்கெண்ணையில் உள்ளி நருக்கித் தாளிதஞ் செய்து கிண்டிக் காலையிற் கொடுக்கவும்.

**4. குடிநீர்**

பூசினித்தண்டு, சுரைத்தண்டு முருவிலித்தண்டு (வெளவிலொட்டி) கையாந்தகரை, நீர்முள்ளி சமூலம், சிறுபீளைச் சமூலம், பாதிரிப்பட்டை, சிற்றாமட்டிவேர், பேரமட்டிவேர், சிறுகாஞ்சோன்றி, பற்படாகம், பேய்ப் புடோல், முதற்காசு, இஞ்சிக்கிழங்கு, வகை கழஞ்சு - 2 இருநாழி நீர்விட்டு உழக்காகக்காய்ச்சி மூன்று நாட்கொள்ளப் பெற்றவள் கால், கை வீக்கம் வயிற்று வீக்கம், முதலியன தீரும்.

**5. சலமலம் முட்டுப்பட்டால்**

பயிரி - மூன்றுபிடி, ஒருநாழிதண்ணீர் பானையில் விட்டு வேடுகட்டி , வேட்டின் மேல் பயிரியை வைத்துச் சட்டியினால் மூடி பாதிவற்ற எரித்து இறக்கி ஆறியபின் அவித்த பயிரியைப் பானையில் நீரிலிட்டு பிழிந்து சீனியும் சிறிது மிளகுமரைத்துக் கரைத்துக் கொடுக்கச் சலமலமுட்டுப்பாடு தீரும்.

**6. சலமடைத்தால்**

நொச்சியிலை, பாகலிலை, வேப்பிலை, மிளகு, சுக்கு, வகை - பிடி 1. வறுத்து இருநாழி நீர்விட்டு, உரியாகக் காய்ச்சிப் பொரிகாரம் பொரித்ததூள் மேற்பொடியிட்டுக் கொடுக்கச் சலமுடைக்கும்.

## 17.05 வயிற்றுவலிக்குக் காயம் (After pains)

பிரசவத்தை அடுத்து சிலருக்கு வயிற்றுவலி அதிகமாகக் காணப்படுவதுண்டு.

**Note:-**

After pains - these are painful contractions of the uterus, which usually subside after forty - eight hours .They are more common and more severe in multipara. The patient may become in exhausted from their severity. If the pains are due to blood clots in the uterus, these should be expressed

எனவே வயிற்றுவலியைத் தடுப்பதற்குரிய மருந்து களைக் கொடுப்பது அவசியம்.

**1. வயிற்றுவலிக்குக் காயம்**

கஞ்சாங்கோரைச்சமூலம் ஒருகட்டுக் கொண்டு வந்து புழு முதலியன ஆராய்ந்து நீக்கித் துவைத்து தண்ணீர்தெளித்து வேகவைத்து பிழிந்து ஒருநாழியும்



தண்ணீர் ஒரு நாழியும் கலந்து கருப்புக்கட்டி கூட்டி நாழியாகக் காய்ச்சி வடித்து அதில் ஓமம், இருசீரகம், மிளகு, சுக்கு, உள்ளி வகை - கழஞ்சு 1/2 அரைத்துக் கரைத்து சற்றே காயவைத்து நல்லெண்ணையில் உள்ளிகூட்டித் தாளித்துக் கரண்டி கொடுக்கவும்.

**2. குழம்பு**

இரு சீரகம், திரிகடுகு, உலுவா, ஓமம், வெள் ளுள்ளி, - வகை கழ- 4 இளவறுப்பு வறுத்துப் பொடி செய்து உள்ளி நாற் கழஞ்சு வேறாகப் பொரித்துக் கூட்டி நல்லெண்ணெய் ஆழாக்கில் கருப்புக்கட்டி கூட்டி உருகவிட்டு மேற்படி தூள்தூவிக் குழம்பாகக் காய்ச்சி புன்னைக்காயளவு இரு வேளையுங்கொள்ள வயிற்றுவலி விடும்.

## 17.06 மலச்சிக்கல் (Constipation)

பிரசவத்தின் பின்னர் மலச்சிக்கல் ஒரு பிரச்சினை யாக ஏற்படக்கூடும். எனவே மலச்சிக்கலை நீக்குவதற் குரிய உணவுகளை எடுப்பதுடன் அதிகளவில் நீரும் பருகுதல் வேண்டும். மலச்சிக்கலை நீக்குவதற்கு குளப்பாலை நெய்யும் கொடுக்கலாம்.

1. பயிரி - மூன்றுபிடி, ஒருநாழிதண்ணீர் பானையில் விட்டு வேடுகட்டி , வேட்டின் மேல் பயிரியை வைத்துச் சட்டியினால் மூடி பாதிவற்ற எரித்து இறக்கி ஆறியபின் அவித்த பயிரியைப் பானையில் நீரிலிட்டு பிழிந்து சீனியும் சிறிது மிளகுமரைத்துக் கரைத்துக் கொடுக்கச் சலமல முட்டுப்பாடு தீரும்.

2. விரற் பருமனுள்ள முருங்கைக் காம்பை சிறுக நறுக்கி இரண்டு பிடியெடுத்து நாழிதண்ணீரிற் போட்டு அதில் மிளகு அழாக்கு வறுத்துக் கூட்டி உழக்காகக் காய்ச்சி வடித்து சிற்றாமணக்கெண் ணையில் உள்ளி அரிந்து தாளித்துக் கூட்டிப் புகட்ட மலச்சிக்கல் மாறும்.

## 17.07 வயிற்றில் சீழ் கட்டுதல், வயிற்றுப்பொருமல்

(Puerperal sepsis)

பிரசவத்தின்போதும் அதன் பின்னரும் சுகாதார முறைகளைச் சரிவரப் பின்பற்றாவிடினும், கருப்பை யிலிருந்து அழுக்குகள் சரிவர வெளியாகாதுவிடினும் நஞ்சு (Placenta) முழுமையாக வெளியாகாதிருப் பினும் கிருமித் தொற்றுக்கள் ஏற்படும். அதன் பயனாக சீழ்பிடித்தல், வயிறு பொருமுதல், அதிக காய்ச்சல், பிரசவசந்நி முதலியன ஏற்படும். சீழ் நன்கு ஏற்படு வதனால் வயிறு 'பழுக்கவும்' கூடும்.

பழுத்தல்:- (Suppuration of uterus after delivery)

**குறிப்புரை:-**

Genital tract infection after delivery is called puerperal sepsis.

Clinical features are-

* Fever - usually remittent
* Lower abdominal pain
* Foul smelling lochial and vaginal discharge



* Tender distended abdomen
* Trachypnoea
* Tender uterus
* Pelvic mass - Abscess (சீழ்க் கட்டி)
* Inflammed and discoloured Perineum

**1. வயிற்றிற் சீழ், பொருமல் முதலியவைகளுக்கு காயம்**

காஞ்சிரை, நொச்சி, தோடை, மாவிலங்கை, ஆடா தோடை, எலுமிச்சை, வேம்பு, முருங்கை இவை யெல்லாம் வேர் சமன்கொண்டு இடித்தவித்து , அதில் இருசீரகம், கராம்பு, வசுவாசி, சாதிக்காய், பெருங்காயம், திப்பிலி, சுக்கு, மிளகு, கடுகு, உள்ளி, திரிபலை, ஓமம் - வகைக்குச் சமன் அரைத்துக் கரைத்துக் காயங்காய்ச்சி இறுகின பதத்தில் பாக்களவு இருவேளையும் கொள்ளப் பெற்றவள் வயிற்றிற் சீகட்டுதல் , பின்னேரங் களில் வயிறு பொருமுதல், வயிற்றுவலி, முட்டு, உழலை, நாவரட்சி, பலசுரம், சன்னி கழிச்சல் முதலியன தீரும்.

**2. வயிற்றில் சீகட்டினால்**

குறிஞ்சாவேர் சீனியிடித்தபொடி நாழிக்குநாழி தண்ணீர் வார்த்து உழக்காகக் காய்ச்சிக் குடிக்கச் சீகட்டாது.

**3. வயிறு பழுத்தால்**

புளியமிலை இரா அடுப்பிலூற வைத்துக் காலையிற் பிழிந்து திரிகடுகு, மஞ்சள், வெண்காயம் சமன் அரைத்துப் பனங்கட்டி கூட்டிக் காய்ச்சி ஆமணக்கெண்ணெயில் உள்ளி அரிந்து தாளித்துச் சேர்த்து உள்ளும் கொடுத்து, மேலும் பூசவும்.

## 17.08. கால்கை எரிவு (Neuritis)

பிரசவத்தின் பின்னர் சிலருக்குக் கை, கால்களில் எரிவு ஏற்படலாம். அதற்கு -

1. அமிர்த ஏலாதிச்சூரணம், நீற்றுப்பூசினிநெய், அயலேகியம் முதலியவற்றை உள்ளுக்குக் கொடுத்து அடியிற் கண்டதைலம் தேய்த்து முழுகிவரப் பெற்றவீட்டிற் கால் கையெரிவு முதலி யன தீரும்.

2. **தைலம்**

பசுப்பால் - படி - 1 நல்லெண்ணெய் - படி - 1 கலந்து அதில் ஏலம், மதுரம், செங்கழுநீர்க் கோட்டம்,செண்பகப்பூ, வெட்டிவேர் - வகை - பலம் ½ இடித்து கையாந்தகரைச் சாற்றாலரைத்துக் கலக்கி வெயிலில் ஒருநாள் வைத்துப் பின்காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து முழுகவும்.

## 17.09 சுவாத காசம்

(Bronchial Asthma During Puerperium)

சுவாதகாசம் என்பது குழந்தையைப் பெற் றெடுத்த தாய்க்கு வரும் தொய்வு, அல்லது இழுப்பு நோயாகும். தொய்வானது கர்ப்பகாலத்திலோ (காயாசுவாதம்) அல்லது பிரசவ சமயத்திலோ அல்லது அதன் பிறகோ வரக்கூடும். பிரசவசமயத்தில் அல்லது அதற்குப் பின்னர் வரும் தொய்வு வியாதி ஆபத்தானதாகும். ஏனெனில் அதனால் Post partum haemorrhage ஏற்படும் வாய்ப்பு அதிகம். இதனையே சுடர்காசம் என்றுங் கூறுவர்.



### சுவாத காசத்தின் குணம்

சிறுமகவை யீன்றெடுத்த மடநல் லார்க்குச்
செப்புசுர நீங்காதாய்க் கழிச்சன் மூச்சு
மறுகுறவே யுள்ளுழலை தவன மாகி
வயிறதுவும் பொருமியே வாய்வு தோன்றிக்
குறுகிரும லாவரட்சி தண்ணீர்த் தாகங்
கொண்டுவிழி தாமிரண்டுந் தெளிவு கெட்டால்
இறுதிசெய மிகக்கொடிய சுவாத காச
மியம்புவிக்கல் சிலகுணத்தி லிடரே செய்யும். 1.

இருமித் தொய்வாய் நாவரண்டே யிளைத்துப் பேச்சு
- மூச்சுமுட்டாய்ச்
செருமி யலுங்கிக் களைதோன்றித் தியங்கி மயங்க
- நெஞ்சடைத்துப்
பொருமிக் குத்தி யிட்டுமுட்டாய்ப் பொறுக்க வியலாப் வெவ்
வைசுரந்
தருவிக் காலுங் களத்தைக்கு மியு சுவாத காசமிதே. 2.

பிள்ளைப் பெற்ற மடவார்க்குப் பெருத்த சுரமுந் தலை
வலியாய்
உள்ளு முழலை தவனமிரைப் புற்ற கழிச்ச லுடல்பொருமல்
மெள்ளத் தொடுத்த வுண்மூச்சாய் விழியிற் றெளிவுங்
கெட்டிருக்கில்
துள்ளித் துடிக்க வுயிர்வாங்குஞ் சுவாத காச மெனவு
வுரைத்தனர். 3.

**பாடலின் கருத்து:-** *சிறு மகவைப் பெற்றெடுத்த தாய்க்கு (சிறுமகவு என்று பாடலில் கூறப்படுவதால் வளர்ச்சி குறைந்த அல்லது நிறைகுறைந்த பிள்ளை*

என்பது கருத்து) சுரம் தொடர்ந்து காயும், கழிச்சல் இருக்கும். மூச்சுக் கஷ்டம் ஏற்படும். உள் அழல், தவனம், வயிற்றுப் பொருமல், வாய்வு (Flatulence), குறுகிய இருமல், நாவரட்சி, தாகம், கண்பார்வை மங்கல் முதலிய குணங்கள் கண்டால் மரணம் ஏற்படக்கூடியளவுக்கு ஆபத்தானதாம்.

2. இருமல், தொய்வு (இழுப்பு) (wheezing), நாவரட்சி மூச்சுக்கஷ்டத்தால் பேச்சுத் தடைப் படல், செருமல், அனுங்கல், களைப்பு (fatique) தியங்கல், மயக்கம், நெஞ்சடைத்தல், பொருமல், குத்தல், இட்டு முட்டுப்படல், வியர்த்தல் கால் கனத்து அந்தத்தல், முதலிய குணங்களும் ஆபத்தான அறிகுறிகளாம்.

3. பிள்ளைப் பெற்ற பெண்களுக்கு, அதிக சுரமும், தலைவலியும், உள்ளழலையும், தவனமும், இரைச்சலுடன் கழிச்சலும் காணும். வயிறு பெருமும். மூச்சுக் கஷ்டம், பார்வை குன்றுதல் முதலிய குணங்கள் கண்டால் உயிராபத்தை ஏற்படுத்தும் சுவாத காச நோய் அதுவாகுமாம்.

**குறிப்புரை** I:- தொய்வு நோயுள்ள பெண் கருவுற்றால் கர்ப்ப காலத்தில் குழந்தையின் வளர்ச்சி குறைவாக (Intra uterine growth restriction) இருப்ப துடன் உரிய காலத்துக்கு முன்னரே குழந்தை பிறக் கவும் (premature delivery) நேரிடலாம். எனவே, முதற் பாடலில் சிறுமகவை ஈன்றெடுத்த மடநல்லார்க்கு என்று கூறப்பட்டுள்ளமை ஆழ்ந்த அர்த்த முடையதாகும்.



**குறிப்புரை** II - சுரம் மிகுதியாக காயும் என்று கூறப் பட்டதை வைத்துக் கொண்டு சிலர் இதனை Puerperal sepsis என்றும் கருதுவர். அது தவறாகும். சுவாத காசம் (சுவாச காசம்) என்பது Bronchial asthma வையே குறிக்கும்.

**குறிப்பு** - III - இரண்டாவது பாடலில் கால் கனத்து அதைக்கும் (Oedema) என்று கூறப்பட்டுள்ளது இருதய நோயினால் வரும் தொய்வு (Cardiac asthma) வியாதியைக் குறிப்பதாக இருக்கக்கூடும்.

**குறிப்பு** - IV - காயாசுவாதமும், சுவாத காசமும் ஒன்றே என்பது அவற்றுக்கான சிகிச்சை முறைகள் ஒரே விதமாக இருப்பதிலிருந்து அறிந்து கொள்ள லாம். இரண்டுக்கும் இடையில் உள்ள முக்கிய வேறுபாடு யாதெனில், காயாசுவாதம் கர்ப்பகாலத்தில் (Antenatal period இல்) வரும். சுவாதகாசம் (Post natal period இல்) பிரசவத்துக் குப் பிறகு வரும் என்பதாகும்.

## சிகிச்சை

**1. குடிநீர் - I**

கண்டங் காலி தூதுவளை கடிய வட்டி னுடன் வாசை
கொண்ட கீழ்காய் நெல்லியின்வேர் கொத்த மல்லி திரிகடுகு
மிண்டுங் கராம்பு முத்தமிவை வேண்டுங் கழஞ்சோ
றொன்றாகத்
தண்டா தவித்துக் குடித்துவரிற் றாகந் தொய்வுசுரம்போமே.

2. குடிநீர் - II

சிறுவட்டி தூதுவளை நன்னாரி விழி
சிற்றவரை நாயுருவி பைங்குராய் முள்ளி
சிறுகுறிஞ்சி யிம்பூ றல் குன்றிமணி சங்கு
செறிகோவை மூக்கறைச்சி மிளகரணை நொச்சி
உறுவட்டி னொடுவிளாக் கொடுவேலி சத்தி
யுற்றசா ரணைகண்டங் காரியடர் தோடை
நறியபஞ்ச பாண்டவர்த முல்லை - வளர் பிரண்டை
நாட்டுசிறு காஞ்சோன்றி யதுபிராயிலைவேர் 1.

ஒவ்வொன்றும் பிடியொன்று நாகையீ ருள்ளி
யோடு வன துர்க்கியது விதைதள்ளி நன்றாய்
ஒவ்வொன்று முப்பலங் கரிய சீரகமோ
டுற்றநற் சீரகஞ் சுக்கசம தாகம்
ஒவ்வொன்று முக்கழஞ் சாகரியோ ராறா
யுறுகளிப் பாக்குவெண் பிசினிவைகளி ரண்டும்
ஒவ்வொன்று நிறைகழஞ் சொன்றுமிகு தான்றி
யோரைந்து பூதவிர்க்க மோர்பலங் கூட்டே. 2.

கூட்டியிவை யெலாமிடித்தெண் ணாழி நீருங்
கோச்சாக நீருழக்குங் கூட்டிக் காய்ச்சி
வாட்டடங்கண் மடமானே குடிக்க நன்றாம்
வருகாயா சுவாதமொடு சுவாத காசம்
காட்டுமிளைப் பிருமலொடு தொய்வு மற்றுங்
காய்ச்சல்குளி ருண்ணடுக்க மிவைக ளெல்லாம்
கோட்டியலுங் கதிரைமலை முதல்வன் பாதங்
குறுகுமருந் தவர்வினைபோ லொழியு மன்றே. 3.



3. முக்கூட்டெண்ணெய்

4. திரிபலையேனாதி

5. அமிர்த ஏலாதிச்சூறணம்

6. சுவாதக் குளிகை

7. காயம்

இருசீரகம் ஓமம், திகடுகு, கராம்பு, உலுவா, சதகுப்பை, கறுவா, உள்ளி, பெருங்காயம், தூதுளைவேர், இயங்கம் வேர், ஈசுர மூலிவேர், வகை - பலம் ¼ இடித்து முருங்கைப் பட்டைச் சாற்றாலரைத்துக் காயங்காய்ச்சிப் பாக்களவு கொடுக்கச் சுவாதகாசம், கழிச்சல் முதலியன தீரும்.

8. மயக்கம் சந்நிகண்டாற்புகை

மிளகு, வசம்பு, சுக்கு, வெளுத்தற்பிசின், கெந்தகம், நிலவேர் பொடித்துப் புகை காட்டவும்.

9. சுவாசக் குடோரி மாத்திரை

## 17.10. பிரசவப் பைத்தியம்

(Puerperal Mania)

பிள்ளைப் பெற்ற பெண்களுக்குக் கெர்ப்பப் பையிற் சேரும் அழுக்கு முதலியவற்றாலும், பிற கோளாறுகளாலும் ஒருவகைப் பைத்தியம் காண்பதுண்டு, அதற்கு இரைக்குடல், கொர்ப்பப்பை, யோனி முதலியவற்றைச் சுத்தி செய்வதோடு, அமுத ஏலாதிச் சூறணம், நீற்றுப் பூசணி நெய், நறுவிலி நெய், முக்கூட்டெண்ணெய் போன்றவற்றாலும் சிகிச்சை புரிக.

**குறிப்புரை:-** *14. % பெண்களில் குழந்தைப் பேற்றின் பின்னான உளச்சோர்வு* (Puerperal Depression) *ஏற்படும். இது மூன்றுவகைப்படும்.*

1. *தற்காலிகமாக ஏற்படுவது. அது* "Post Partum blues" *எனப்படும். இது குழந்தை பிறந்த சில நாட்களில் ஏற்படுவது. இதற்கான காரணங்கள் பேற்றுக்குப்பின் ஏற்படும் அசௌகரியங்கள், தளர்ச்சி, நித்திரையின்மை, ஏக்கம், தன்னம்பிக்கையின்மை (தன்னால் குழந்தையைப் பராமரிக்க முடியுமா என்பது பற்றி) தனது அழகு குறைந்து விட்டதாகப் பயம் என்பனவாக இருக்கலாம். இது சில நாட்களில் மறைந்து விடும். இதற்குச் சிகிச்சை தேவையில்லை.*

2. *10 - 15 % ஆனவர்களில் பேற்றுக்குப் பின்னான உளச்சோர்வு* (Postnatal depression) *ஏற்படும். இது அநேகமாகக் குழந்தை பிறந்து 4 - 6 கிழமைகளின் பின்னர் ஏற்படும். உள உணர்வு குறைவு, அலுப்பு, ஏக்கம், தன்னம்பிக்கையின்மை, உறுத்துணர்ச்சி, நித்திரையின்மை என்பன இதன் முக்கிய குறிகுணங்களாம். இதுவும் ஆபத்தானதல்ல. சிறிது காலத்தில் மாறிவிடும். ஆனால் பலர் இத்தகைய நிலையைப் பைத்தியம் (விசர்) என்று பயப்படுவதுண்டு. இது உண்மையல்ல.*

3. *பேற்றுக்குப் பின்னரான உளநோய்* (Puerperal psychosis) *இது மிகவும் ஆபத்தானது. இது ஒரு தீவிர மன நோயாகும். 600 இல் ஒரு பெண்ணுக்கு மிகவும் அரிதாக ஏற்படக்கூடும். குழந்தை பிறந்து மூன்று மாதங்களுக்குள் ஏற்படும் உள உணர்வில் ஏற்ற இறக்கம், பயம், இயலாமை ஒரு விசயத்தில் மனத்தைச் செலுத்த முடியாமை* (poor concentration) *ஏக்கம், கண்ணீர் விடுதல், நித்திரைக் குழப்பங்கள், பசியின்மை, தற்கொலை பற்றிய எண்ணங்கள் ஏற்படல் என்பன இதன் முக்கிய குறிகுணங்களாகும். இதற்கு மனநோய் மருத்துவரின் ஆலோசனையும், சிகிச்சையும் அவசியமாகும்.*



## 17.11 வயிற்றுப்புண்

*பிரசவத்துக்குப் பின்னர் கர்ப்பப்பையைப் பற்றிய புண் ஆறுவதற்குப் பின்வரும் மருந்துகளில் ஒன்றையே பலவற்றையோ வழங்கலாம்.*

**1. உள்ளிப்பாகு**

**வெள்ளையுள்ளி பலமாறு தோடு போக்கி**
**விளங்குபசு வின்பாலி னாழி யொன்று**
**கள்ளமற வேயவித்துக் கடைந்து சுக்குக்**
**கராம்புவசு வாசிகுலக் காயோ டேலம்**
**தள்ளரிய திப்பிலிநன் மிளகு கோட்டஞ்**
**சாதியின்றன் பத்திரியுங் குங்கு மப்பூ**
**உள்ளபடி கழஞ்சிரண்டு பொடித்துத் தூவி**
**யுற்றநறுந் தேன்விட்டுக் கடைந் திறக்கே.**

## 2. நீர்வள்ளி நெய்யும், குழம்பும்

நீர்வள்ளிக் கிழங்கின் சாறு நெறியசெவ் விளநீ தாலும்
ஓரொன்று நாலு நாழி யுறுதெங்கின் பூவிற் சாறு
பாருறு மிரண்டு நாழி பருத்தியின் விதையிற் சாறு
சேருறு நறுநெய் தானு மொவ்வொரு நாழி சேரே. 1.

சேருறு நத்தைச் சூரி நன்னாரி செங்கத் தாரி
பாருறு முத்தற் காசு களப்பன்னை சிலைபி னாகும்
நேருறு முரிசோ ரொன்று நிறைவொரு பலமிடித்து
நீருறு குறுணி யெட்டொன் றாக்கியே யிறுத்துக் கூட்டே 2.

கூட்டுசெண் பகப்பூ வுள்ளி கோட்டநற் குலக்காய் வாசி
தேட்டுறு கராம்பு சுக்குத் திப்பலி மிளகோ டேலம்
நாட்டுசெங் கடுக ரத்த சந்தன மோம மின்னம்
கோட்டமில் கரிய சீருங் கூட்டுமொவ் வோர்க முஞ்சே. 3.

பதத்தினில் வடித்த ருந்தப் புண்பாடு வரட்சி சூடு
கதித்திடு மிரும நீருங் காட்டுநற் குழம்பாச் செய்யும்
விதத்தினை விளம்பு வன்கேள் மேவிய சாற்றி னோடு
மதித்தவேர் பிடியொவ் வொன்று வருகற்க மிருக முஞ்சே. 4.

செப்பிய நறுநெய் நாழி யரையுடன் றேன்கால் கூட்டித்
துப்புறு கரும்பின் பாகுஞ் சொல்லுகற் கண்டு தானும்
முப்பலந் தூவிக் கிண்டி முறைமெழு காம்ப தத்தில்
அப்படி யிறக்கித் தின்ன வறைந்தநோய் விலகு மன்றே. 5.



## 3. இஞ்சிப்பாகு

*இஞ்சிச்சாறு, செவ்விளநீர், பசுப்பால், வகை - படி-1 மாதுளம்பழச்சாறு கருப்பஞ்சாறு - வகை - ½ படி உள்ளிச்சாறு படி ¼ ஒன்றாய்கலந்து ஏலம், இலவங்கம், கராம்பு, சதகுப்பை, திரிகடுகு, இருசீரகம், அதிவிடயம், மல்லி, மாயக்காய், கடுக்காய், குறாசாணி, சிற்றரத்தை, பேரரத்தை, அதிமதுரம், கைப்பு, களிப்பாக்கு, கடுகு ரோகணி, ஓமம், கறுவா, நறுக்குமூலம், உலுவா, வசம்பு, கோட்டம், நற்சந்தனம், செஞ்சந்தனம் வகை - கழஞ்சு - 2 வால்மிளகு, சாதிக்காய் வகை கழஞ்சு -4 அசுவகந்தி, நிலப்பனை, கோரை, நன்னாரி, நத்தைசூரி - வகை -கழஞ்சு - 2 குங்குமப்பூ கோரோசனை, பச்சைக் கர்ப்பூரம், பாற்கெருடபச்சை - வகை - கழஞ்சு - 1 பொடி செய்து தூவிப் பாகுபதத் தில் பச்சை வெண்ணெய் படி - 1 விட்டுகிண்டிப்பின் தேன் படி ½ முந்திரிகைப்பழச்சாறு - படி - ½ கூட்டி மெழுகு பதத்தில் இறக்கவும். பிரமாணம் கொட்டைப்பாக்களவு, வயிற்றுப்புண், வெளுப்பு, அசதி, இருமல், வெள்ளைசாய்தல், எலும்புருக்கி, முதலியன தீரும்*

## 4. சீரகநெய்

*பெருங்காயம் - 1, வசம்பு - 2 திப்பலி - 4 சுக்கு - 8, கடுக்காய்-12 மிளகு - 16 கோட்டம் - 20, ஓமம் - 24 நற்சீரகம் - 28 கழஞ்சு வீதம் இடித்து அரித்து நறுநெய்யிற் கொதிப்பித்து நக்க செமியாமை, சத்தி, கொளுவல் தீரும்.*

5. வெல்ல உண்டை

வெல்லம் கழ - 2 இரசம் - கழ - 3 கெந்தி கழ - 2 சாதிக்காய், கராம்பு வசுவாசி, திப்பலி, அக்கறா, குறாசாணி, சூடன், வாலுளுவை, இருசீரகம், கோட்டம், அபின் வகை கழஞ்சு -1 சீதுளாய்ச் சாற்றலரைத்துக் கொடுக்க பிள்ளைப் பெற்றவளுக்கு வரும் வாதம் முதலியன தீரும்.

## 17.12 மார்பக நோய்கள்

பிரசவத்தின் பின்னர் தாய்ப்பாலூட்டல் முக்கிய நிகழ்வாகிறது. மார்பகத்தில் ஏற்படும் தொற்றுக்கள் (Mastitis) சீழ்க்கட்டிகள் (நகிற்கட்டி - Breast abscess) முலைக்காம்பு வெடிப்பு (Cracked nipple) என்பன பாலூட்டலுக்குப் பிரச்சினையாக அமைகின்றன. இவை பற்றி விரிவாகக் கூறப்படாவிடினும் இவற்றினால் மார்பகம் பதிக்கப்பட்டு, கடும் வேதனை ஏற்படுவதுடன், பாலூட்டலும் தடைப்படும். இந்நிலைகள் அனைத்தையும் "முலைக் குத்து" என்ற பெயரில் பரராசசேகரத்தில் கூறப்பட்டுள்ளது.அதற்கு

1) நாயுருவிவேரும் வசம்பும் தேன்வார்த்தரைத்துப் பூச முலைக்குத்து மாறும்.

2) பேய்பாற்சோற்றிவேர். ஒருபிடி, மிளகு பத்து, வெள்ளுள்ளிப்பூடு ஒன்று அரைத்து எண்ணெயிற் கொதிப்பித்துப் பூச மாறும்.



## 17.13 பால்சுரக்க

1. பசுப்பாலுடன் ஆலம்பால் கலந்து காய்ச்சி பிரை குத்தி வைத்து அந்தத் தயிர்வார்த்துண்ணப் பால் சுரக்கும். பன்னிரண்டு நாட் தின்னவும்.

2. ஓரிலைத் தாமரையை ஒரு கொட்டைப்பாக்களவு அரைத்து பசுமோரில் கலக்கிக் கொடுக்கவும். தினம் 2 வேளை 1 வாரம் சாப்பிடவும்.

3. கருஞ்சீரகமும் சாப்பிட்டுவரப் பாலூறும்.

4. ஒருபிடி ஆமணக்கிலையை அவித்து பத்து நிமிடம் முலையிற் கட்டவும். அவ்விதம்இரண்டு டொருமுறை தினமும் செய்து வரவும்.

## 17.14 பால் வற்றப்பண்ண

குழந்தைமரித்து விட்டால் அல்லது பால் கொடுக்க விரும்பாவிட்டால்

1. வெற்றிலையைச் சூடாக்கிக் கட்டவும்.

2. குன்றிமணியிலையை வெந்நீர்விட்டரைத்து முலையிற் பூசவும்

3. மல்லிகைப் பூவையும் அவ்விதம் அரைத்துப் பூசவற்றும்.

# 18. முலைப்புற்றுநோய்
# (Breast cancer)

**வேறுபெயர்** - மார்பகப்புற்றுநோய், தனப்புற்று நோய் (ஸ்தனப்புற்று), பரோதயப்புற்று.

பரராசசேகரத்தில் மார்பகப்புற்று நோயின் குணங்கள் பற்றி கூறப்படாத போதிலும் மார்பகப் புற்று, மார்பகக்கட்டி (முலைக்கிரந்தி), பிளவை (Carbuncle) அசுகுணிப் புண் (முலைப்புண்ணிலிருந்து துர்நீர் கசியும் வியாதி) போன்றவற்றிற்கு மார்பி லிருந்து (முலைக்காம்பி லிருந்து) 4 விரலிடை அளந்து நாலுபுறத்திலும் கருவியால் சுடவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

2. அவ்விதம் சுட்டபின் அதனால் ஏற்படும் விரணங் களுக்கு - எட்டிப்பட்டை, மஞ்சள் என்பன சேர்த் தரைத்து மூன்று நாட்களுக்குப் பூச வேண்டும். அதன் பின்னர், நீர்ப்பூலாஇலை, வசம்பு, உள்ளி, மஞ்சள் மற்றும்,

3. தான்றி, புற்றுமண் என்பன கூட்டி முருங்கை வேர்ப் பட்டைச் சாறு விட்டரைத்துக் காய்ச்சிப் பூசவேண் டும். அதன்பின்னர் முருங்கைவிதை, கருஞ்சீரகம், நெற்பொரி சமன் எடுத்து,



4. (உழக்கு) இடித்துத் தூளாக்கி 1 பிடி எடுத்து அரைப்பிடி பனங்கட்டி சேர்த்து ஈரவுள்ளிச்சாற்றில் குழைத்துத் தின்ன மார்பக நோய்கள் பலவும் தீரும். உப்புப்புளி நீக்கி பத்தியமிருக்க வேண்டும்.

5) மேற்படி மருந்தை எட்டுநாள் தின்னவேண்டும். அதற்கு மாறாமல் சீழ்வடிந்தால் கருஞ்சீரகம், நன்னாரி, எருக்கு, கான்றை, துடரி, பாவட்டை, வீழி, பொன்னாங்காணி, சிற்றிலந்தை, கிளாவேர்

6) இவைவேர் சமன் தூளாக்கி குந்திருக்கம், கைப்பு, கோட்டம், வேம்பாடல், ஏலம், களிப்பாக்கு, துத்தம், செவ்வள்ளி, ஓமம், இலவங்கம் சமன் எடுத்து தூள் செய்து எண்ணெய் காய்ச்சி பதத்தில் இறக்கி,

7) ஆறிய பின் தூள்களைத் தூவி பகலில் புண்ணில் பூசவேண்டும். இரவில் பனைஓலை வறுத்துக் (சுட்டு) கட்ட வேண்டும். வெட்பாலைக் கொழுந்தும் வெட்பாலரிசியும் (அல்லது அரிசியும்) சமன் பொடித்து பசப்பாலில் உண்ண வேண்டும்.

8) முலைப்புற்று மாறும். பால்சுரக்கும். ஆவாரை, நன் னாரிவேர் என்பன பாலில் அரைத்தும் பூசலாம். குருந்துவேர், சுக்கவித்த நீரில் அரைத்தும் வீக்கத் திற் பூசலாம்.

**குறிப்புரை :-** பெண்களுக்கு ஏற்படும் புற்று நோய்களில் மார்பகப்புற்று, கருப்பைப்புற்று, யோனிப்புற்று என்பன முக்கியமானவையாகும். இவைபற்றி கொர்ப்பரோக நிதானத்தில் விரிவாகக் கூறப்படாவிட்டாலும் புற்று நோய் பற்றிய வகையுள் இவை அடக்கப்பட்டுள்ளன.

சித்தமருத்துவப்படி புற்றுநோயானது முக்கிய மாக நான்கு வகைப்படுகிறது. அவையாவன:

1. வன்புற்று
2. மென்புற்று
3. நுங்குப்புற்று
4. கரும்புற்று

இவை உறுப்புக்களைப் பற்றிய பெயர்களுடன் பதினெட்டாக விரிவடைந்துள்ளன. அவற்றின் விபரம் வருமாறு.

1. உச்சிப்புற்று (மண்டைப்புற்று)
2. கன்னப்புற்று (கொடுப்புப்பீறி)
3. நேத்திரப்புற்று
4. நாசிப்புற்று
5. அதரப்புற்று (உதட்டுப்புற்று)
6. தந்தப்புற்று
7. அண்ணப்புற்று
8. நாக்குப்புற்று
9. தொண்டைப்புற்று
10. தோட்புற்று
11. தனப்புற்று (பரோதயப்புற்று)
12. நெஞ்சுப்புற்று
13. குடற்புற்று
14. யோனிப்புற்று
15. லிங்கப்புற்று
16. அண்டப் புற்று
17. மூலப்புற்று
18. தண்டுப்புற்று

இவற்றைவிட வேறுபல புற்றுநோய்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது.



**பரோதயப்புற்று** - இது ஆரம்பத்தில் நோவற்ற கட்டியாய் வட்டித்து அசைவுள்ள திரட்சியாயும், முலையிற்றொடங்கும். சிறிது காலஞ் செல்ல அது வளர்ந்து மேற்பக்கத்திற் கட்டிக் கட்டாவதுமுண்டு. முலைக் கண்களால் இரத்தநிறநீர்வரும். இடைக்கிடை அதிற் சுள்ளெனக் குத்தும். மாதவிடாய்க் காலத்தில் அக் குத்துக் கூடுதலாய் இருக்கும். சிலவேளை முலையிலுள்ள நிணமும் அறைச் சவ்வும் குறைந்து சுகமானது போல இருக்கும். ஆனால், நாளடைவில் இம் முலை சிறுத்துவிடும். அதைச் சுற்றிலுமுள்ள தசை பதிந்து பள்ளமாகும் சிலசமயம் முலைக்காம்பு உள்ளுக்கிழுக்கப் படவுங்கூடும்.

**கருப்பைப்புற்று:-** சில பெண்களில் அடிக்கடி பெரும்பாடுண்டாக்கிக் குடலவிந்து புண்பட்டு, அழற்சி அதிகரிக்கும். கருப்பையின் வாயில் சவ்வு வளர்ந்து தடித்து அது காரணமாக சில சமயம் தீட்டும் தடைப்பட்டு வயிற்றில் வலி உண்டாகி அசுத்தமான கூழ் போன்ற தடிப்பு வெள்ளைநீர் வடியும். அது மிகவுந் துர்நாற்றமாயிருக்கும். குடலிற்புண்கள் வளர்ந்து நோவும் வலியும் அதிகரித்து முட்டுண்டாகும்.

**யோனிப்புற்று:-** இந்நோயாரம்பத்தில் மேகவெட்டை உள்ளவர்களின் தகாத கலவியால் அல்குலில் அதாவது கடிதடத்தின் தோலிலும், உதட்டிலும் பருக்களுண்டாகும். அது சொறிவெடுத்து வீங்கி, அழற்சியும் தினவுமேற்படும். இதையே மேகரணம், கொறுக்கு, குய்யாணம், பறங்கி வியாதி என்பர். இதற்குத் தகுந்த சிகிச்சை செய்யாவிடின் அது விருத்தியடைந்து, சில வேளை விரணத்தின் கீழ் நெறி கட்டித் திரண்டு கட்டி

யாகிக் கல்லுப்போலக் கெட்டியாக விருந்து நாளடைவில் சீழ்பிடித்து, வெடித்துப் புண்ணாகி புண் பெருத்துக் கொண்டுவரும். துர்நாற்றம் ஏற்படும். உறுப்பு உணர்ச்சியற்றுப்போம். இதுவே யோனிப் புற்று எனப்படும்.

**இலிங்கப்புற்று:-** ஆரம்பத்தில் ஆண்குறியின் மணிக்கும், தோலுக்கும் இடையில் சிறு சிறு பருக்களுண்டாய்ப் பரவும். சிலவேளை மணிமுழுவதும் நீர் பற்றி வைரித்து மேற்படி உதட்டைச் சுருக்கவோ, விரிக்கவோ முடியாது கடிமையாயிருந்து, கட்டாகி, உணர்ச்சியற்றுவிடும். மணமுள்ள வெள்ளை ஒழுகும். கவனியாது விட்டால் உறுப்பு இற்றுத் துண்டு துண்டாய்விழும்.

**முகசிங்கிப்புற்று:-** ஆண்குறி லிங்கத்தில் பருக்கள் மணியின் முகப்பில் பலப்பல துவாரங்கள் ஏற்பட்டு அது நுங்கு போல பளபளத்துக் காட்சியளிக்கும். பார்க்க மிகப் பயங்கரமாயிருக்கும். இதனையே நுங்குப்புற்று என்பர்.

புற்று நோய்களுக்குக் கொடுக்கத்தக்க மருந்துகள்

1) இரச கெந்தி மெழுகு
2) புற்றுப் பதங்கம் (இராசாங்கம்)
3) இராமபாணம் (இடிமருந்து)
4) தாமிரபற்பம்
5) வான்மெழுகு
6) இரச பற்பம்
7) பறங்கிக்கிழங்குப்பற்பம்.



# 19. பெண்களின் உணவு

எமது சமூக அமைப்பில் இல்லத் தலைவியாக விளங்குவது பெண்களே. தாய் ஸ்தானத்தில் அவர்கள் வைக்கப்படுவர். உணவை சுவைபடச் சமைப்பதும், அந்த உணவைக் கணவன், பிள்ளைகள் இரசித்து, ருசித்துச் சாப்பிடுவதைக் கண்டு மனநிறைவு கொள்வதும் பெண்களின் இயல்பாகும். அதன் விளைவாக அவள் தனக்கு உணவு போதாவிட்டாலும், அல்லது இல்லாவிட்டாலும் கவலைப்படுவதில்லை. ஆயினும் பெரும்பாலான பெண்கள் இவ்விதம் அபரிதமான அன்புடன் கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் உணவைப் படைக்கும்போது அவர்கள் உட்கொள்ளும் உணவின் அளவிலேயே (Quantity) அதிக கவனம் செலுத்துகின்றனர். உணவின் தரத்தில் (Quality) அதிக கவனம் செலுத்துவதில்லை. அதனால் பின்வரும் ஆரோக்கியச் சீர்கேடுகள் ஏற்பட வாய்ப்புண்டு.

அ) தேவைக்கு மிஞ்சிய உணவு கணவனிலும், பிள்ளைகளிலும் ஊழைச்சதை போடவைப்பதிலும், வேறு பல நோய்களை ஏற்படுவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே தாய்மைப் பரிவோடும், அன்போடும் படைக்கும் உணவு குடும்பத்தவர்க்கு நோய் விளைவிப்பதாக அமைந்துவிடக் கூடும். அன்பான மனைவி, பாச மிகுதாய், இந்த வகையில் குடும்பத்தவரின் ஆரோக்கியத்திற்குத் தன்னையறியாமலே ஊறு

விளைவிப்பவளாக அமைந்து விடுகிறாள். தேவைக்கு அதிகமான உணவு பிற்காலத்தில் அதி இரத்த அமுக்கம், இருதய வியாதிகள், வாதவியாதிகள் என்பவற்றைத் தோற்று விப்பதற்கு மூலகாரணமாக அமைந்துவிடுகிறது.

"அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடியரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே."

என்ற திருமந்திரப்பாடல் உணவு நன்கு உண்டதும் படுக்கைக்குச் சென்ற ஒருவர் மார்பு வலிக்குள்ளாகி (மாரடைப்பு) இறக்க நேர்ந்ததை எடுத்துக்காட்டுகிறது. உணவு உண்டதும் உடனடி யாகப் படுக்கைக்குச் செல்வதும் மனைவியுடன் உடலுறவு கொள்வதும் இருதயநோயைத் தூண் டுங் காரணிகளாகும்.

ஆ) கணவன் பிள்ளைகளுக்குப் போதிய உணவு வழங்கிவிட்டுத் தாய் எஞ்சிய சொற்ப உணவையே தான் உண்கிறாள். வீட்டுவேலைகளுடன் நின்று விடும் பெண்களைப் பொறுத்த வரையில் இவ்வுணவு சொற்பமாக இருந்தாலும் சத்துக் களடங்கியதாக இருந்தால் வேறு பிரச்சினை களுக்கு இடமிருக்காது. இல்லாவிட்டால் அவளின் ஆரோக்கியம் கெட்டு நோய் ஏற்பட ஏதுவாகின் றது. அங்ஙனம் அவள் நோயாளியாகிவிட்டால் அவளால் தனது குடும்பத்தை அன்புடன் பரா



மரிக்க இயலாமல் போய்விடும். எனவே, தாய்மார் தமது உணவை அலட்சியமாகக் கருதக்கூடாது. முக்கியமாகக் கர்ப்பிணித் தாய்மார்கள் தமது உணவின் தரத்தை அலட்சியப்படுத்தினால் அது அவர்களுக்கும், அவர்கள் வயிற்றில் வளரும் குழந்தைக்கும் பாதகமாக அமையும்.

எனவே, தாய்மார்கள் தமது குடும்பத்தினரின் உணவைப் பொறுத்தவரையில் அதன் அளவிலும் பார்க்கத் தரத்தில் கூடிய அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு குடும்பத்தில் தரமான போசாக்குணவு கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் போய்ச்சேரு கின்றது. சாப்பாட்டுப் பற்றாக்குறை வந்தால் அதனால் பாதிக்கப்படுபவள் பெண்ணே என்பது பொதுவான கருத்து. ஆனால் எமது கலாசாரப் பழக்கத்தில் கணவன் முதலில் சாப்பிட்டாலும் அவன் தான் சாப் பிடும் உணவு வகைகள் ஒவ்வொன்றிலும் மனைவிக்கு என உண்கலத்தில் ஒரு பாகத்தில் ஒதுக்கி வைப்பது வழக்கம். பின்னர் கணவன் உண்ட கலத்திலேயே மனைவி சாப்பிடுவாள். இது எச்சில் உணவு என்று கொச்சைப்படுத்தப் படுவதில்லை. கணவன் மனைவி யரிடையே அன்னியோன்னத்தை வளர்க்கவும், கூட்டுக் குடும்பங்களில் மனைவிக்கு போசாக்குணவு கிடைக் கவும் இது வழிகோலுகிறது. (அதாவது கணவன் ஆரம்பத்தில் சாப்பிடும்போதே மனைவிக்கும் ஒரு பங்கை ஒதுக்கி வைப்பதால் கடைசியில் சாப்பிடும் மனைவிக்கும் உணவுப் பற்றாக் குறை வந்தாலும் சத்தான உணவு கணிசமான அளவிலாதல் கிடைத்து விடுகிறது)

பெண்கள் உணவைக் குறைத்துச் சாப்பிடுவதற்கு உணவுப்பற்றாக்குறையைவிட இன்னொரு காரணம் தமது உடம்பு பருத்துப் போகாமலிருப்பதற்காகும். 'உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு' என்ற பழமொழியையும் இதற்கு எடுத்துக்காட்டுவர். உண்டி சுருங்குவதால் உடல் மெலியுமோ இல்லையோ நிச்சயமாக ஆரோக்கியம் கெடும். முக்கியமாக எமது யாழ்ப்பாணப்போர்ச் சூழ்நிலையில் பல கிலோமீற்றர் தூரங்களுக்குக் கல்வி பயிலவும் தொழில் நிமித்தமும் தினந்தோறும் பிரயாணஞ் செய்யவேண்டிய நிலையிலுள்ள பெண்கள் உணவைச் சுருக்குதல் ஏற்புடைய செயலாகாது. உடலுக்குத் தேவையான சத்துக்களடங்கிய உணவை உட்கொள்ளாவிட்டால் அதுவும் நோய்க்கு ஏதுவாகும். எனவே, உடலுக்குத் தேவையான சத்துக்களடங்கிய உணவுகளைத் தெரிவு செய்து அது உடலால் ஜீரணிக்கத்தக்க அளவிற்கு ஏற்ப உட்கொள் வதே அனைவருக்கும் ஆரோக்கியம் தரும்.

எனவே, பெண்களிற் பலர் தமது அறியாமையினாலும் அபரிதமான அன்பினாலும் அதிக உணவை குடும்பத்தவருக்கு வழங்கி விடுவதாலும் தமது உடம்பு பருத்துவிடும் என்ற அச்சத்தாலும் தமது உணவை அலட்சியப்படுத்துகிறார்களேயன்றி எமது முன்னோர் பெண்களின் தேக ஆரோக்கியத்தில் உணவின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்து அது பற்றித் தெளிவான விளக்கமுங் கொண்டிருந்தனர். என்பதில் சந்தேகமில்லை. குடும்ப ஆரோக்கியத்துக்கும் அதன்வழி சமூக, நாட்டின் ஆரோக்கியத்துக்கும்



மூலாதாரமாகப் பெண்களே விளங்குகின்றனர். அவர்களின் ஆரோக்கியம் நன்னிலையில் இருந்தால் தான் ஏனையோரின் ஆரோக்கியமும் சீராக இருக்கும். எனவே, பெண்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் பற்றிப் பின்வரும் உப தலைப்புகளின் கீழ் நோக்குவோம்.

அ) பருவமடைந்த பெண்களின் உணவு
ஆ) திருமணமான பெண்களின் உணவு
இ) கர்ப்பிணிப் பெண்களின் உணவு
ஈ) பிரசவித்த பெண்களின் உணவு / பாலூட்டும் தாயின் உணவு.
உ) மாதவிடாய் நிற்கும்போது பெண்களின் உணவு
ஊ) வயோதிபப் பெண்களின் உணவு

**அ) பருவம் அடைந்த பெண்களின் உணவு**

எமது சமூகத்தில் ஒரு பெண் பருவமடைந்த காலத்திலிருந்து அவளின் உணவு விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படுகிறது. மாதாந்தம் மாதவிடாயின்போது ஏற்படும் இரத்த இழப்புக்களினால் உண்டாகும் உடற்பலவீனத்தை நிவர்த்தி செய்யவும், கர்ப்பாயாச உறுப்புக்கள் வலுப்பெறவும் திருமணத்தின் பின் இலகுவாகத் தாய்மைப் பேறடையவும் உதவுமுகமாக அவளின் உணவு முறைகள் அமைந்துள்ளன.

ஒரு பெண் பருவமடையும்போது அதை ஓர் இயல்பான நிகழ்ச்சியாக எடுத்துக்காட்டி அதன் மூலம் அவளின் மன நிலையிலும் தாக்கம் ஏற்படாமல்

இருப்பதற்காக பூப்பு நீராட்டு விழா (சாமத்தியச் சடங்கு) செய்யப்படுகிறது. அது மட்டுமன்றி இவ் விருந்தில் முக்கியமாக உழுத்தங்களி, பிட்டு என்பன முக்கிய இடம் பெறுகின்றன.

இவை கர்ப்பாசயத்தை வலுவடையச் செய்ய வல்லன. பருவமடையும் வயதிலுள்ள பெண் குழந்தை களைப் பார்த்து எப்போது பிட்டுக் களி தரப்போகிறாய் என்று வயதுபோன பாட்டிமார் கேட்கும் வழக்கம் தற்போதும் எம்மக்களிடையே காணப்படுகிறது. இது அப்பருவகாலத்தில் போசாக்குணவிற்கு வழங்கப் படும் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது. பிட்டானது மாதவிடாயின்போது அதிக இரத்தம் வெளியாவதைத் தடுப்பதாகவும் கருதப்படுகிறது.

"செம்புனலுங் கட்டுந் தெளியும் உரமாகும்
வெப்பனிலம் உட்புறத்தில் வீறுங்காண் செம்பழத்தை
வட்டைப் பழிக்கும் வன்முலைமாதே யரிசிப்
பிட்டைப் புசிப்போர்க்குப் பேசு"

என்ற பதார்த்த குணசிந்தாமணிப் பாடல் இதை நன்கு எடுத்துக்காட்டுகிறது. மேலும் பிட்டினால் உடல் வன்மையும் உள்ளில் வளி வெப்பமும் உண்டாகும் என்பதையும் இப்பாடல் மூலம் அறியகூடியதாக உள்ளது. தமிழரின் பாரம்பரிய உணவு வகைகளில் பிட்டும் ஒன்றாகும். எல்லாம் வல்ல சிவபெருமான் பிட்டுக்காக மண்சுமந்ததாக ஒரு புராண வரலாறும்



இந்து மதத்தில் உள்ளது. ஆயினும் தமிழ் நாட்டிலும் பார்க்க யாழ்ப்பாணத் தமிழரே தற்காலத்தில் பிட்டை விரும்பியுண்கின்றனர் என்று தெரிகிறது.
யாழ்ப்பாண மக்களின் தேசிய உணவாக பிட்டைக் கருதின் அது தவறாகமாட்டாது.

சாதாரண பிட்டிலும் பார்க்க விடத்தல் இலை சேர்த்து அவிக்கும் பிட்டு பெண்களின் அபரிமிதமான மாதவிடாயை (பெரும்பாட்டை) நீக்கவல்லது.

ஒரு பெண் பருவமடைந்த காலத்தில் நல்லெண் ணெய், கத்தரிப் பிஞ்சு, அவரைப்பிஞ்சு, முதலியன அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. சிலர் தனித்து நல்லெண்ணெய் 1-2 அவுன்ஸ் ( 30- 60 மி.லீ) அளவில் தினமும் பருகக்கொடுப்பர். கத்தரிப்பிஞ்சு முதலிய வற்றை அதிகளவு நல்லெண்ணெய் விட்டு வதக்கி உண்ணக்கொடுப்பர். நல்லெண்ணெய் தேகத்திற்குப் பலத்தைக் கொடுப்பதுடன் கண்ணொளியையும் (நல்லெண்ணெயில் உயிர்ச் சத்து A உண்டு) கொடுக்கும். இங்கு கண்ணொளி என்பது பிரகாசமான பார்வையைக் குறிக்கும். மேலும் பலநோய்கள் ஏற் படாமல் தவிர்க்கும் தன்மையுடையது. நல்லெண்ணெ யில் முக்கிய கொழுப்பு அமிலமான Linoleic acid உண்டு. இது கருப்பை முதலிய உறுப்புகளின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமாகும்.

"இவ்வெண்ணெய் காந்தி பித்த மிளைப்பு நேத்திரத்தின் ரோகம்
கவ்வை சேர் சிரவலிப்புக் கபால முட்டணஞ் சிரங்கோ
டெவ்வமார் கிருமி போக்கு மெழிலுங் கண்ணொளியு முண்டாம்
செவ்வையாம் பெலனுமுண்டாமென்னவே செப்பினாரே.

என்று இருபாலைச் செட்டியார் பதார்த்த சூடாம ணியில் நல்லெண்ணெயின் பயன்பற்றி எடுத்துக் கூறியுள்ளார்.

நல்லெண்ணையின் பயனை நன்கு அறிந்த மையாலேயே எமது மக்கள் தமது அன்றாட வாழ்வில் நல்லெண்ணெயை மிகுதியாகப் பயன்படுத்தி வரு கின்றனர். ஒரு பெண் பருவமடைந்துவிட்டாள் என்று கேள்விப்பட்டதும் அவளின் உறவினர்கள் அவளைப் பார்ப்பதற்கு நல்லெண்ணெயும், உழுந்தும் நெல்லும் கொண்டு செல்லும் வழக்கம் தற்போதும் காணப் படுகிறது. (உழுந்தானது களி செய்வதற்கும் நெல்லி லிருந்து பெறப்படும் மாவானது பிட்டு செய்வதற்கும் பயன்படும்.) ருது காலப்பராமரிப்பில் சினையின் பெருக்கத்துக்கு நல்லெண்ணெயும், அச்சினையின் வலிமைக்கு உழுந்தும் அவசியமாகும்.

பருவமடைந்த பெண்ணுக்கு பருப்பு, கீரை, தயிர், வெண்ணெய், நெய், பழவகை, பசுப்பால், உழுந்து சேர்ந்த உணவுகள் என்பவற்றை விசேடமாகக் கொடுத்துவருவர். பருவமடைந்த 3 மாதங்களுக்கு காரமான உணவுகள் ஏதும் கொடுப்பதில்லை.

**ஆ) திருமணமான பெண்களின் உணவு:**

திருமணமான பெண்களைப் பராமரிப்பதிலும் எமது சமூகம் விசேட கவனம் செலுத்துகிறது. திரு மணத்தின் அடுத்த கட்டம் தாய்மை அடைதல் என்பதால் அதற்குரிய முறையில் உணவுப்பழக்க வழக்கங்களும் அமையும். திருமண விருந்திற்குக்



கூட உழுந்து, உளுத்தம்மாக்களி விசேடமாக இடம் பெற்றிருந்ததை அகநூறு போன்ற சங்க நூல்கள் எடுத்துக்கூறியுள்ளன.

'உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ் சோற்ற மலை'

யாழ்ப்பாணத்தில் திருமண விருந்தில் மட்டுமன்றி, பூப்புனித நீராட்டுவிழா, கர்ப்பகாலம், குழந்தை வளர்ப்பு என்பவற்றிலும் உழுத்தங்களியே முக்கிய இடம்பெறுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. உழுந்து அல்லது உழுத்தம்மாவானது உடலுக்கும் கர்ப்பாசய உறுப்புகளுக்கும், இடுப்பெலும்புகளுக்கும், உறுதி யையும் பலத்தையும் கொடுப்பதாகக் கூறப்படுகிறது. உழுத்தங்களியில் நல்லெண்ணெயும் சேர்வதால் இச்செயற்பாடுகள் மேலும் அதிகரிக்க உதவுகிறது.

'செய்ய வுழுந்திற்குச் சிலேத்ம வனிலம் பிறக்கும்
வெய்ய பித்தம் போ மந்தம் வீறுகாண் - மெய்யதனி
லென்புருக்கி தீருமிடுப்புக்கதிக பலமா
முன்பு விருத்தியுண்டாமுன்' (ப.கு.சி)

| |
|---|
| *100 கிராம் உழுந்தில் 154மி.கி. கல்சியம் 385 மி.கி. பொசுபரசு, 9.1 மி. கி. இரும்புச்சத்து மற்றும் பல உயிர்ச்சத்துக்கள் அடங்கியுள்ளன.* |

மேலும், கணவனுடன் திருப்திகரமான உறவு கொள்ளவும், கருத்தரிக்கவும், கருவைத் தாங்கவும் ஏற்ற விதத்தில் கர்ப்பாசய உறுப்புகள் பலமடை

யத்தக்க உணவு வகைகள் இக்காலத்தில் முக்கியத் துவம் பெறுகின்றன. உழுந்து, நல்லெண்ணெய் தவிர எள்ளுப்பாகு, பசுப்பால், சம்பாஅரிசிச்சோறு, பேரீச் சம்பழம், வாதாம் பருப்பு, முந்திரிகைப்பழம், செவ் வாழைப்பழம் என்பனவும் இக்காலத்தில் அதிகம் பயன்படுத்தப்படும்.

**இ) கர்ப்பிணிகளின் உணவு:**

ஒரு பெண் கருவுற்றநிலையில் அவளின் உண வில் மேலும் கூடிய கவனம் செலுத்தப்படுகிறது. அவள் தனக்காக மட்டுமன்றி தனது வயிற்றில் வளரும் சிசுவிற்காகவும் உண்ணவேண்டியிருப்பதால் மிகவும் அக்கறையுடன் கவனிக்கப்படுகிறாள். '**இரண்டு உயிர் காறி**' ( ஈருயிர்க்காறி ) என்று அவள் கொண்டாடப் படுகிறாள். கருவுற்ற காலத்தில் முதல் மூன்று மாதங் களிலும் சில விசேட உணவுப் பதார்த்தங் களில் அவளுக்கு இச்சை ஏற்படுகிறது. அதனை '**மசக்கை**' என்று கூறுவர். இக்காலத்தில் முக்கியமாக மாம்பிஞ்சு, விளாங்காய், விலிம்பிலிக்காய், மாதுளம்பழம் போன்ற வற்றில் நாட்டங்கொள்வாள்.

ஏற்கெனவே கூறியதுபோல கர்ப்பிணிப் பெண்க ளுக்கும் உழுந்து, நல்லெண்ணெய் சேர்ந்த உணவுகள் அதிகம் கொடுக்கப்படுகின்றன. உழுந் தானது கருவளர்ச்சியடைவதற்கு உதவுவதுடன், கருப்பை, இடுப்பென்புகளுக்குப் பலத்தையும் கொடுக்கிறது. அதன்மூலம் பிரசவத்தையும் இலகு



வாக்குகிறது. நல்லெண்ணெயில் உயிர்ச்சத்து A இருப்பதால் தாய்க்கும் சேய்க்கும் மாலைக்கண் ணோய் ஏற்படாமல் பாதுகாக்கிறது. சில ஆங்கில வைத்தியர்கள்கூட கர்ப்பிணிப் பெண்கள் தினமும் 1-2 தேக்கரண்டி நல்லெண்ணெய் குடிக்குமாறு ஆலோ சனை வழங்குகின்றனர்.

கருப்பையில் கரு வளர்வதன் நிமித்தம் ஏற்படும் மாறுதல்களால் கர்ப்பிணிப் பெண்ணிற்கு வித்தியா சமான அல்லது மாறுபட்ட உணவுகளில் ஆசை ஏற் படும். அதனை '**யா**' என்று அழைப்பர் (Perverted appetite) மசக்கை, யா இரண்டையும் ஒன்று என்று கருதுவோரும் உண்டு. ஆனால் இவற்றுக் கிடையில் சிறுவித்தியாசம் உண்டு. மசக்கையில் கூடுதலாக புளிப்புச் சேர்ந்த சுவையுணவுகளில்தான் விருப்பம் ஏற்படும். மேலும் மசக்கை முதல் மூன்று மாதத்துள் ஏற்படுவது '**யா**' வில் மாறுபட்ட சுவையுணவுகளில் தான் விருப்பம் ஏற்படும். அதனைத் தீர்த்து வைப் பதற்காக '**யாப் பண்டம்**' செய்யும் வழக்கம் இன்றும் சில சமூகத்தவரிடையே காணப்படுகிறது. குறிப்பாக யாழ்ப்பாணப்பிராமண சமூகத்தவரிடையே இவ் வழக்கம் காணப்படுகிறது. பெரும்பாலும் முதற் குழந்தைப் பேற்றை எதிர்நோக்கியிருக்கும் 'தலைப் பிள்ளைத் தாச்சிகளை மையமாக வைத்தே இது செய்யப்படுகிறது. இதில் உழுத்தம்மா, கடலைமா, பயற்றம்மா, அரிசிமா முதலியவற்றைக் கொண்டு பல்வேறு பலகாரவகைகள் செய்து கர்ப்பிணிப்

பெண்ணுக்கு வழங்குவதுடன் உறவினருக்கும் கொடுத்து உண்டு மகிழ்வர். பெண்ணின் தாய்தந்தையரே இதைச் செய்வது வழக்கம். கருவுற்ற மூன்றாம் மாதத்தின் பின் இது செய்யப்படும். எத்தனையாம் மாதம் செய்கிறார்களோ அத்தனை எண்ணிக்கையிலான பலகாரவகைகள் செய்யப்படும். இதன் மூலம் கர்ப்பிணிப்பெண்ணுக்கும் அவள் வயிற்றில் வளரும் குழந்தைக்கும் வேண்டிய புரதச்சத்து தாராளமாகக் கிடைக்க வழியேற்படுகிறது. இத்துடன் கலாசாரப் பின்னணியில் பெண்ணின் சந்தோஷம், மனநலன் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து 'வளை காப்பு' என்னும் சடங்கையும் நடாத்துவர்.

> சிலர் கர்ப்பிணிப்பெண்கள் அதிகம் சாப்பிட்டால் குழந்தை பெருத்துவிடும் என்று தப்பபிப்பிராயம் கொண்டுள்ளனர். இதில் எவ்வித உண்மையும் இல்லை. கர்ப்பிணிப்பெண் தனக்கும் தனது வயிற்றில் வளரும் சிசுவுக்கும் சேர்த்து போசாக்கான உணவை உண்ண வேண்டிய நிலையிலுள்ளாள் என்பதை மறக்கக் கூடாது.

முருங்கையிலை, பொன்னாங்காணி, வல்லாரை, முல்லை, முசுட்டை, தூதுவளை, வள்ளல்கீரை, பயிரி, தவசிமுருங்கையிலை, மற்றும் கீரை வகைகள், கர்ப்பிணிப் பெண்களின் உணவில் தாராளமாகச் சேர்த்துக் கொள்வர். இவை அவர்களுக்குத் தேவையான உயிர்ச்சத்துக்கள், இரும்புச்சத்து, கல்சியம் முதலியவற்றை வழங்குவதுடன் மலம் சாதாரணமாக



இளகி வெளியேறவும் உதவுகின்றன. வாழைப்பழம், முந்திரிகைப்பழம், வெள்ளரிப்பழம், விளாம்பழம் முதலியனவும் அதிகம் பயன்படுத்துவர். பெரும்பாலும் பப்பாப்பழத்தை அறவே விலக்குவர். அதற்குக் கருவையழிக்கும் தன்மை உண்டென்ற நம்பிக்கை காலங்காலமாகவே இருந்து வருகின்றது. ஆயினும் ஆறுமாதத்திற்குப் பின்னர் பப்பாப்பழம் உண்பதால் கெடுதி நிகழாது என்று தற்போது கூறப்படுகிறது. பப்பாப்பழத்தில் உயிர்ச்சத்து A உயிர்ச்சத்து C என்பன அதிகளவில் உள்ளது. தாய் போதுமானளவு உயிர்ச்சத்து A உள்ள உணவுகளை உட்கொண்டால் அது குழந்தையின் ஈரலில் சேமித்து வைக்கப்பட்டு குழந்தை பிறந்த பின்னரும் மூன்று மாதம் வரை அச்சேமிப்பிலிருந்து பயன்படுத்தப்படும். (கொழுப்பில் கரையும் உயிர்ச்சத்துக்களான A,D,E,K என்பன ஈரலில் சேமித்து வைக்கப்படுகின்றன.) அது குழந்தைகளுக்கு ஏற்படக் கூடிய பல்வேறு தொற்று நோய்களிலிருந்தும் பாதுகாப்பளிக்க வல்லது. அத்துடன் மாலைக் கண்ணோய் முதலியன ஏற்படாமல் தடுக்கிறது. எனவேதான் உயிர்ச்சத்து A யின் முக்கியத்துவம் கர்ப்பகாலத்தில் வலியுறுத்தப்படுகிறது.

கர்ப்பிணிப் பெண்களுக்குப் பசுப்பால் வழங்கும் வழக்கமும் காணப்படுகிறது. வசதியுள்ளவர்கள் காலை மாலை இருவேளையும் பசுப்பால் பருகக் கொடுப்பர். ஏனையோர் இரவில் மட்டுமாவது ஒரு கோப்பை பசுப்பால் பருகக் கொடுப்பர். இவ்வழக்கம் கிராமப் புறங்களிலேயே கூடுதலாகக் காணப்படுகின்றது.

கர்ப்பிணிப் பெண்கள் மட்டுமன்றி ஏனையோரும் இரவுணவு உண்டபின்னர் படுக்கப் போவதற்குச் சிறிது முன்பாக வற்றக்காய்ச்சிய பசுப்பாலைப் பருகிவரின் பல நன்மைகள் ஏற்படும். அது பற்றி பின்வரும் பரராசசேகரம் பாடல்கள் கூறுகின்றன.

"மன்னிரவுண்ட பின்பு வற்றக்காய்ச் சிடுமாவின்பால்
நன்னயமாகக் கொள்ளினயன நோய் நாடாதோடும்
பன்னுதீபனங்களெல்லாஞ் சமித்திடும் பலநோய் மாறும்
வன்ன மெய்தடித்து விம்மி வளர்ந்திடும் வடிவுண்டாமே"

"வடிவுறுங் கனல் குறைந்து வளர்ந்திடுந் தாது விம்மிக்
கடிவுறு வாத பித்த கபஞ் சமன் கொண்டு காணும்
படியினிற் சுகமனேகம் பசுவின பாலுண்ட பேர்க்குப்
பிடிநடை மயிலஞ் சாயல் பெற்றநற் பேதையாளே"

அதாவது பசுப்பாலுண்பதால் நயனரோகங்கள் வராது, உண்ட உணவுகள் நன்கு செமிக்கும்.உடலில் ஏற்படக்கூடிய பல நோய்களும் மாறும். வாத, பித்த, கபம் என்பவற்றைக் சமநிலையில் வைப்பதால் நோய்கள் அணுகாது. உடல் வலுவும் வனப்பும் பெறும். எனவே, சைவ உணவுண்பவர்களுக்குப் பசும்பால் ஒரு நிறையுணவு என்பதை உணர்ந்த தாலேயே அதைக் கிரமமாகத் தினமும் பருகு வோர்க்கு எவ்வித பிணியும் ஏற்படாது என்றும், நோயேற்பட்டவர்கள் நன்கு வற்றக் காய்ச்சிய பாலைப் பருகிவரின் அந்நோய்கள் விரைவில்மாறும் என்றும் சித்தமருத்துவ நூல்கள் எடுத்துக்கூறியுள்ளன.



நகர்ப்புறங்களில் பசுப்பால் பெறுவதிலுள்ள சிரமம், விலை காரணமாக இது பெரும்பாலும் அலட் சியப்படுகிறது. அத்துடன் நாகரீகப் பழக்கங்கள் காரணமாக செயற்கைத் தயாரிப்புகளான பால் மாவகைகள், ரொனிக்குகள், விற்றமின் குளிசைகள், இரும்புச்சத்துக்குளிசைகள், கல்சியம் குளிசைகள் என்பவற்றை வாங்குவதிலேயே பலரும் தமது பணத் தைப் பெருமளவில் விரயஞ் செய்கின்றனர்.

கருவுறுதல் இயல்பான நிகழ்ச்சி என்பதையும், தகுந்த உணவுமுறைகளைக் கடைப்பிடித்தல் அவசியம் என்பதையும் பலரும் மறந்துபோய்விடு கிறார்கள்.

இவ்விடயத்தில் அறியாமை என்பது படிக்காதவர் களிடம் மட்டுமன்றி படித்தவர்களிடையேயும் காணப் படுகிறது. தேவையேற்பட்டாலொழிய மருந்துக் குளிசைகள் எதனையும் பாவிக்கக் கூடாது.

அடுத்து முன்பு பலரிடையேயும், தற்போது சிலரிடையேயும் காணப்படும் ஒரு வழக்கம் பாலுடன் சிறிது 'குங்குமப்பூ' சேர்த்துப் பருகி வருதலாகும். பிறக்கப்போகும் குழந்தை சிவப்பாக இருக்க வேண்டும் என்று கருதியே பலர் இவ்வாறு செய்து வருகின்றனர். ஆனால் இதில் எவ்வித உண்மையும் இல்லை. குழந்தையின் நிறத்துக்கும் குங்குமப்பூவிற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை. (இது போலவே கறுப்புத் திராட்சைப்பழம் சாப்பிட்டால் குழந்தை கறுப்பாக பிறக்கும் என்ற தவறான கருத்துண்டு) ஆனால்

குங்குமப்பூவிற்கு இரத்தத்தைச் சுத்திகரிக்கு தன்மை இருப்பதாகத் தமிழ் மருத்துவ நூல்கள் கூறுகின்றன. பிரசவத்தின் பின்னர் கருப்பையில் ஏற்படக்கூடிய இரத்த தோடங்களை இது நீக்க உதவும். அந்த வகையில் குங்குமப்பூ தாயினதும் சேயினதும் ஆரோக்கியத்தைப் பேணுவதில் உதவக்கூடும். அதனால் ஆரோக்கியமான குழந்தை பிறப்பதற்கு வாய்ப்பு ஏற்படலாம். ஆனால், தற்போது குங்குமப் பூவின் விலை மிக அதிகமாக இருப்பதாலும், கடைகளில் பெரும் பாலும் போலிச்சரக்கே விற்பனை யாவதாலும் அதனைப் பயன்படுத்தாமல் தவிர்ப்பதே நல்லதாகும்.

"குங்குமப்பூ வைக் [illegible]ாற கூறுகொண்ட பீநசநோய்
தங்கு செவித் தோடஞ் சலதோடம் - பொங்கு
மதுர தோடந் தொலையு மாதர் கருப்ப
உதிர தோடங்களறு மோர்"

என்ற பாடல் குங்குமப்பூவினால் பீநிசம், செவிரோகம், சலதோடம், கபதோடம் என்பன மாறும் என்றும் பெண்களின் கருப்ப உதிர தோடங்கள் நீங்கும் என்றும் எடுத்துக் கூறுகிறது.

கர்ப்பகால பராமரிப்பில் கருவை ஒழுங்காக வளரச் செய்வதற்கும் கர்ப்பிணித் தாய்க்கு ஏற்படக் கூடிய சிறு சிறு நோய்களைத் தவிர்ப்பதற்கும் சுகப் பிரசவம் ஏற்படுவதற்கும் **'கர்ப்ப இரட்சணி'** என்னும் மருந்துப் பிரயோகம் வழக்கில் இருந்தது. கர்ப்பத்தை இரட்சிப்பது - காப்பது என்பது கர்ப்ப இரட்சணியின் பொருளாகும். கருவுற்றதிலிருந்து ஒவ்வொரு மாதத்



திலும் கருவில் ஏற்படக் கூடிய வளர்ச்சி, விருத்தி என்பவற்றை ஒழுங்குபடுத்தி அதனால் தாய்க்கு ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தவிர்த்தல் என்ற அடிப் படையில் கர்ப்ப இரட்சணி அமைந்துள்ளது.

கருவுற்ற முதலாம் மாதம் தொடங்கி 10 மாதங் கள் வரையும் ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் முதல் மூன்று நாளைக்குக் கீழ்க்கூறப்படும் மருந்து களை முறைப்படி குடித்துவரக் கருச்சிதைவு முதலிய விக்கினங்கள் இன்றி பூரண சுகத்துடன் கர்ப்பம் வளரும் என்று பரராசசேகரம் கெர்ப்பரோக நிதானத் தில் கூறப்பட்டுள்ளது.

1 ஆம் மாதம் - தாமரைப்பூவின் உட்காயும் நற்சந் தனமும் அரைத்து, பசுப்பாலில் கலக்கிக் குடிக்கக் கொடுக்க வேண்டும்

2 ஆம் மாதம் - நெய்தல் கிழங்கு, கஞ்சா முத்தற் காசு, அதிமதுரம்,இஞ்சிக்கிழங்கு என்பவற்றை எடுத்து அரைத்து பசுப்பாலிற் கலக்கிக் குடிக்க வேண்டும்.

3 ஆம் மாதம் - சந்தனம், தகரை, கோட்டம்,தாமரை அல்லி, சீந்தில் தண்டு சமன் எடுத்து குளிர்ந்த தண்ணிரிலரைத்துப் பருக வேண்டும்.

| | |
|---|---|
| 4 ஆம் மாதம் - | நெய்தல் கிழங்கு, சீந்தில் தண்டு, நெருஞ்சில் வேர், நிலப்பனங் கிழங்கு, பசுப்பாலில் அரைத்துக் கலக்கிக் கொடுப்பர். |
| 5 ஆம் மாதம் - | சாரணைக்கிழங்கு, இலுப்பைப்பூ, அழிஞ்சில் விதை, தகரை, எள்ளு, நெய்தல் கிழங்கு பாலில் அரைத்து குடிக்கக் கொடுக்க வேண்டும். |
| 6 ஆம் மாதம் - | முயற்பித்தைத் தண்ணீரில் அரைத் துக் கொடுக்க வேண்டும். |
| 7 ஆம் மாதம் - | கச்சோலம், ஆமணக்கு வேர், நெய்தல் கிழங்கு அரைத்து தண்ணீரில் கலக்கி தேன் கூட்டிக் குடிக்கக் கொடுப்பர். |
| 8 ஆம் மாதம் - | அதிமதுரம், தாமரைவித்து, முத்தற் காசு, விளாம்பிஞ்சு, அரிசி திப்பிலி, நெய்தல் கிழங்கு அரைத்து பசுப் பாலில் கலக்கி குடிக்கக் கொடுப்பர். |
| 9 ஆம் மாதம் - | வட்டுக்கத்தரி விதையைப் பொடி செய்து தேனிற் குழைத்துண்ணக் கொடுப்பர் |
| 10 ஆம் மாதம் - | முத்தற்காசு, முந்திரிகைப்பழம், நெய்தல் தண்டு, சீனி இவற்றை அரைத்து தேனிற் குழைத்துண்ணக் கொடுப்பர். |



**குறிப்பு:-** இங்கு கூறப்பட்ட மூலிகைகள் ஒவ்வொன் றும் 5 கிராம் அளவில் எடுக்கவும்

இங்கு கூறப்பட்டுள்ள மூலிகைகளின் குணத்தை ஆராயுமிடத்து, அவற்றுட்பல கருப்பை முதலிய வற்றிகுப் பலத்தைக் கொடுப்பதுடன், கருவையும் வளர்க்கும் தன்மையுடையனவாகக் காணப்படுகின் றன. உதாரணமாக தாமரைப்பூ, நெய்தல் கிழங்கு, சீந்தில், நிலப்பனங்கிழங்கு, இலுப்பைப்பூ, எள், முந்திரிப்பழம் என்பவற்றைக் குறிப்பிடலாம். சீந்தில், நெருஞ்சி, சாரணை, சந்தனம் முதலியன சிறுநீரை அதிகம் வெளியேற்றும் தன்மையுடையன. எனவே, இவை கால்வீக்கம், அதி இரத்த அமுக்கம், சிறுநீர் வழியில் தொற்று என்பன ஏற்படாமலும் பாதுகாக்கின் றன. மேலும் கர்ப்ப காலத்தின் ஆரம்பத்தில் ஏற்படும் சிறு நோய்களான வாந்தி மலச்சிக்கல் முதலியவற்றை யும் இவை தணிக்கின்றன. மேலும் இங்கு கூறப் பட்டுள்ள பல மருந்துகள் பசுப்பாலில் கலக்கிக் குடிக்குமாறு கூறப்பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது. எனவே, அதிக பசுப்பால் பருகுவதை ஊக்குவிக்கும் ஒரு வழியாகவும் இது அமைகிறது எனவே, கர்ப்ப இரட்சணிபற்றி மேலும் ஆய்வுகள் மேற்கொண்டால் கர்ப்ப காலத்தில் பயன்படுத்தப்படும் பல ஆங்கில மருந்துகளையும் அவற்றினால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகளையும் தவிர்க்க முடியும். கர்ப்ப இரட்சணி உணவுப்பழக்க வழக்கங்களுடன் கிரமாகப் பின் பற்றக்கூடிய ஓர் இலகு மூலிகை வைத்திய முறை என்று கூறலாம்.

**கர்ப்ப ரட்சணி மருந்துகளின் செய்கை**

1. தாமரைப்பூ - கர்ப்பாசயத்திலிருந்து குருதி வடிதல் (பெரும்பாடு), கருச்சிதைவு என்பவற்றை நீக்கும்
2. சந்தனம் - சிறுநீர்பெருக்கி, குளிர்ச்சியுண் டாக்கி, வெள்ளைபடுதல் தீரும்
3. நெய்தல் கிழங்கு - பெரும்பாடு / குருதிப்போக் கடக்கி சிறுநீர் பெருக்கி, இரத்த ஓட்டத்தைச் சீராக்கும்.
4. முத்தற்காசு- வாந்திபோக்கி, சீதம்,இரத்தம் வெளியாவதைத் தடுக்கும்.
5. கஞ்சா - சூதகவலிபோக்கி, சிறுநீர் பெருக்கி

குறிப்பு - கஞ்சாவும், முத்தற்காசும் ஒன்றை ஒன்று முறிக்கும். அதாவது கஞ்சாவின் நச்சுத் தன்மையை முதற்காசு நீக்கும்.

6. அதிமதுரம் - பெரும்பாடு / குருதிப்போக்கடக்கி சிறுநீர் எரிச்சல் போக்கும்.
7. இஞ்சிக்கிழங்கு - வாய் ஓங்காளம், அஜீரணம், பித்தம் என்பவற்றைப் போக்கும்
8. சீந்தில் தண்டு - சிறுநீர் பெருக்கி
9. நெஞ்சில் வேர் - சிறுநீர் பெருக்கி, சிறுநீர் எரிச் சல் தீரும்.



10. நிலப்பனங்கிழங்கு - சிறுநீர் பெருக்கி
11. சாரணைக்கிழங்கு -சிறுநீர் பெருக்கி, குருதிப் போக்கடக்கி
12. இலுப்பைப்பூ - உள்ளழலாற்றி
13. அழிஞ்சில்விதை - உடலுரமாக்கி, போஷணகாரி
14. தகரை - மலமிளக்கி, புழுக்கொல்லி
15. ஆமணக்குவேர் - பக்கசூலை (வேதனை) நீக்கும்

**குறிப்பு**

மேலே குறிப்பிட்டது போலவே கர்ப்பரட்சணி என்றால் கர்ப்பத்தை இரட்சிப்பது என்று பொருள். அவ்விதமாயின் எத்தகைய கர்ப்பத்தை இரட்சிக்கும் என்ற கேள்வி எழுவது இயல்பு. அதற்குப்பதில் கருத் தரித்தும் அது தாங்காமல் கருச்சிதைவு முதலியன அடிக்கடி ஏற்படும் பெண்ணுக்கு கருத்தரித்த பின்னர் அவ்விதம் நிகழாமல் கருவைத் தொடர்ந்து விருத்தி யடைய உதவுவது என்பதாகும். கருத்தரித்த முதல் மூன்று மாதங்களும் சூல்வித்தகம் (Placenta) உருவாக மாட்டாது. இக்காலத்தில் கருச்சிதைவுக்கான வாய்ப்புகள் மிக அதிகம். கருவானது கருப்பையில் சரியாகப் பதிக்கப்பட்டு (Implantation) விருத்தி யடைய முடியாதநிலை இங்கு காணப்படும். இதனால் கருச்சிதைவு ஏற்படும். இங்ஙனம் கருப்பையிலிருந்து குருதி முதலியன அதிகளவில் வெளியேற்றப்படு தலையே பெரும்பாடு என்பர்,

தற்காலத்தில் சில நிலைமைகளில் Progesteron, Human Chorionic Gonadotrophin (HCG) போன்ற Hormone கள் கருச்சிதைவை தடுப்பதற்காக முன் னெச்சரிக்கையாக சில கர்ப்பிணிப் பெண்களுக்கு கர்ப்பத்தின் ஆரம்ப காலங்களில் கொடுக்கப்படு வதை இங்கு சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

சித்தமருந்து முறையான கர்ப்பரட்சணியானது ஏழு மாதங்கள் வரை கருச்சிதைவு ஏற்படாமல் தடுப்பதுடன் சுகப்பிரசவம் ஏற்படவும் உதவுகிறது.

**ஈ) பிரசவித்த பெண்களின் உணவு / பாலூட்டும் தாயின் உணவு**

கர்ப்பகாலத்தில் மட்டுமன்றி **'பெற்றுப் பிழைத்த'** பின்னரும் பெண்களின் உணவு விடயத்தில் கூடிய கவனம் செலுத்தப்படுகிறது, குழந்தை பிறந்ததும் அதன் தாய், தந்தையரும் நெருங்கிய இரத்த உருத்துடைய உறவினர்களும் தீட்டு அல்லது துடக்கு (ஆசௌசம்) காப்பர். இது அவரவர் சமூகங் களைப் பொறுத்து 10 நாள், 15 நாள், 21 நாள், 31 நாள் என வேறுபடும். முக்கியமாக குழந்தை பெற்ற தாய்க்கு 31 நாள் துடக்கு என விதித்துள்ளனர். இது வெறும் போலி ஆசார வழக்கமல்ல என்பதை விளங்கிக் கொள்ளல் வேண்டும். குழந்தை பெற்ற



பின் தாய்க்கு ஓய்வு மிகமிக அவசியம் தேவைப் படுகிறது. அவள் உடல், உள ரீதியாகத் தன்னைத் திடப்படுத்திக்கொள்ள இத்தகைய **'தனிமைப்படுத்தல்'** (துடக்கு) உதவுகிறது எனலாம். இவ்விதம் தனிமைப் படுத்தப்படுவதால் தாய்க்கும், சேய்க்கும் நோய்க் கிருமித்தொற்றுகள் ஏற்படுவதும் தடுக்கப்படும். கர்ப்ப காலத்திலும், பிரசவத்தின்போதும் அவள் இழந்த சக்தியையும் இரத்தத்தையும் திரும்பப் பெறவேண்டிய நிலையில் இருப்பதுடன் குழந்தைக்குப் பாலூட்ட வேண்டிய நிலையிலும் இருக்கிறாள். அதற்குரிய முறையில் அவளின் உணவுப் பழக்க முறைகள் அமைந்துள்ளன. கணவன், மற்றும் நெருங்கிய உறவினர்களுக்கும் துடக்கு என்று விதித்துள்ளதால் அத்தாயை நன்கு பராமரிப்பதற்குரிய அவகாசம் அவர்களுக்கும் கிடைக்கிறது.

தாய்ப்பால் அதிகம் சுரப்பதற்கு உதவக்கூடிய உணவுப் பராமரிப்பு முறைகளே கர்ப்பகாலத்திலும், பிரசவித்த பின்பும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் குழந்தை பிறந்த பின்னர் பெரும்பாலும் அவ்வீட்டிலுள்ள அனைவரது கவனமும் குழந்தையின் மீதே சென்று விடுகிறது. அதனால் தாயின் உணவு விடயத்தில் கவனம் செலுத்தப்படாமல் விட்டுவிடு வதும் உண்டு. ஒரு கர்ப்பிணிப் பெண்ணிலும் பார்க்க பாலூட்டும் தாய்க்கு அதிக போசாக்குணவு தேவை. அதன் விபரத்தைப் பின்வரும் அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

| உணவுச் சத்துகள் | கர்ப்பிணிப் பெண் | பாலூட்டும் பெண் |
|---|---|---|
| சக்தி (கிலோ கலோரி) | 2.500 | 2.900 |
| புரதம் (கிராம்) | 55.0 | 65.0 |
| கல்சியம் (கிராம்) | 1.0 | 1.0 |
| இரும்பு(மி. கிராம்) | 40 | 30.0 |
| உயிர்ச்சத்தும் A (மை.கிராம) | 750.0 | 1150.0 |
| தயமின்(மி.கிராம்) | 1.3 | 1.5 |
| இரைபோபிளேவின்(மை.கி) | 1.2 | 1.6 |
| நியாசின் (மை.கிராம்) | 17.0 | 20 |
| உயிர்ச்சத்து C (மி.கிராம்) | 50.0 | 80.0 |

ஒரு பெண் பிரசவித்த உடனே கஸ்தூரியை (சுமார் 500 மி. கி. அளவில்) வெற்றிலையில் மடித்துஉண்ணக் கொடுக்கும் வழக்கமும் காணப்படுகிறது. கஸ்தூரி இதயத்தை பலமடையச் செய்யும் குணமுடையது என்பதால் தாயினதும், சேயினதும் தேவைகளுக் காகத் தொழிற்பட்டு வந்த இதயம் தொடர்ந்தும் நல்லமுறையில் செயற்பட வேண்டும் என்பதற்காக இதைக் கொடுப்பர்.

'நேரிழைபிள்ளைப் பெற்ற நேரங் கஸ்தூரி தன்னில்
ஓர்பணவிடை தாம்பூ லத்தொடு கலந்துண்டால் வாதம்
ஏர் பெறு நரம்பு பாத விறைப்பிவை போகு மென்ப''
(இ.செ. வை.வி)

ஆனால், தற்போது கடைகளில் விற்கப்படுவது பெரும்பாலும் போலிக் கஸ்தூரியாகவே உள்ளது.



சுத்தமான கஸ்தூரியின் விலையும் மிக அதிகமாகும். எனவே போலியை வாங்கிப் பயன்படுத்துவதில் பிர யோசனம் இருக்காது. ஆகவே, கஸ்தூரியை **'வழக்கம்'** என்று கூறி பிரசவித்த தாய்மாருக்குக் கொடுப்பதைத் தவிர்க்கவும். பிரசவித்த பெண்களுக்குச் **'சரக்கு'** அரைத்துக் கொடுக்கும் வழக்கமும் எமது மக்களி டையே பெருமளவில் காணப்படுகிறது. கர்ப்பாச யத்துக்கு வலுவைக் கொடுப்பதும், துவாலையை (கர்பாசயக் கழிவுகள்) வெளியேறச் செய்வதும் தாய்ப்பாலை அதிகம் சுரக்கச் செய்வதும் இதன் நோக்கமாகும்.

| | |
|---|---|
| கொத்த மல்லி | - ஒருசிறங்கை (சுமார் 25 கிராம்) |
| நற்சீரகம் | - ½ சிறங்கை |
| மிளகு | - சிறிதளவு |
| தேங்காய்ச்சொட்டு | - சிறுதுண்டு |
| மஞ்சள் | - சிறுதுண்டு |

இவற்றை எடுத்து அம்மியில் இட்டு நன்றாகப் பட்டுப்போல அரைத்து எடுத்து வைத்துக் கொண்டு தாச்சியில் போதியளவு நல்லெண்ணெய் விட்டுச் சூடாக்கி, சிறுக நறுக்கிய கத்தரிப்பிஞ்சுகளை இட்டு நன்கு வதக்கி, வெந்துவரும் வேளையில் அரைத்து வைத்த சரக்கையும், சிறிது உப்பையும் அதனுடன் சேர்க்கவும். சிறு இஞ்சித்துண்டு, வெங்காயம், உள்ளி என்பவற்றையும் **'தட்டிப் போட்டு'** இறக்கி வைத்துக் கொண்டு குடிக்கக் கொடுப்பர். மிகுதியைச் சோற் றுடன் உண்ணக் கொடுப்பர். இங்ஙனம் சரக்கு

அரைத்துக் கொடுப்பது பெரும்பாலும் குழந்தை பிறந்த மூன்றாம் நாளிலிருந்து தினம் இருவேளை யாக 31 நாட்கள்வரை கொடுப்பர். இக்காலத்தில் மிளகாய் மற்றும் காரவகைகளைத் தவிர்ப்பர். 'கண்ணிலும் காட்ட மாட்டார்கள்"

கொத்தமல்லி, நற்சீரகம், என்பவற்றில் இரும்புச் சத்து, கல்சியம், பொசுபரசு என்பன மிகுதியாக உண்டு. (100 கிராம் கொத்தமல்லியில் 630 மி.கி கல்சியமம், 370 மி.கி பொஸ்பரசு, 18 மி.கி. இரும்பு, 1500 மை.கி உயிர்ச்சத்து A என்பனவுண்டு.100 கிராம் நற்சீரகத்தில் 100 மி.கி கல்சியம், 490மி. கி. இரும்பு, 800 மை.கி உயிர்ச்சத்து A என்பன உண்டு.) எனவே, சரக்காக அல்லது காயமாக இவற்றைப் பிரசவித்த பெண்களுக்குக் கொடுக்கும் போது கர்ப்ப காலத் திலும் பிரசவத்தின்போதும் இழந்த உடல் வலிமை, குருதி என்பவற்றை மீள உற்பத்தி செய்வதற்கும் இவை உதவுகின்றன. உள்ளி முதலியன இவற்று டன் சேர்க்கப்படுவதால் தாய்ப்பால் சுரப்பதும் ஊக்கு விக்கப்படுகிறது. **'ஏந்திளைக் கீருள்ளி ஏற்ற முலைப் பாலே'** என்பது வைத்தியப்பழமொழி.

உள்ளியில் கந்தகச் சத்தும் கணிசமான அள வில் உள்ளது. உள்ளியின் நாற்றத்திற்கு இதுவே காரணமாகும். கந்தகத்துக்கு விரண மாற்றிச் செய்கையுள்ளது எனவே மாதவிடாய், பிரசவம் என்பவற்றை அடுத்து கர்ப்பாசயத்தில் ஏற்படும் புண்களை ஆற்றுவதில் இது உணவு மருந்தாகவும் அமைகிறது.



மேலும் சரக்கு, காயம் என்பன தயாரிக்கும் போது நல்லெண்ணையே பிரதானமாக விட்டரைக்கப்படு கிறது. இதில் Linoleic acid, உயிர்ச்சத்து A என்பன வுண்டு. அத்துடன் கொத்தமல்லி, சீரகம், என்பவற்றி லுள்ள உயிர்ச்சத்து A அகத்துறிஞ்சப்படுவதிலும் (உயிர்ச் சத்து A கொழுப்பில்தான் கரையும்) இது உதவுகின்றது. எனவே, சரக்கு, காயம், தண்ணீர் விடாமல் நல்லெண்ணெய் விட்டரைப்பதில் அர்த்த முள்ளது. இது ஒரு மூடப்பழக்க வழக்கமல்ல.

பிரசவித்த பெண்களுக்குக் கொடுக்கும் காயம் பின்வருமாறு தயாரிப்பர்.

மஞ்சள் - 1 துண்டு
நற்சீரகம் ½சிறங்கை
வேர்க்கொம்பு - சிறுதுண்டு

(அறுவைச்சிகிச்சை மூலம் குழந்தை பெற்றவர் களுக்கு வேர்க்கொம்பு சேர்ப்பதில்லை) என்ப வற்றை எடுத்து தண்ணீர்விடாமல் நல்லெண்ணெய் சிறிது சிறிதாகச் சேர்த்துப் பசுந்தாக அரைத்துப் பனங்கட்டியுடன் கொட்டைப் பாக்களவில் தினம் இரு தடவை 3-5 நாட்களுக்குக் கொடுப்பர். இதை இரண்டு, மூன்று குளிப்பு முடிந்த பின்னரே கொடுப்பர்.

முருங்கைப் பிஞ்சில் உயிர்ச்சத்து A யும் கல் சியமும் அதிகளவில் உண்டு, எனவே பாலூட்டும் தாய் மாருக்கு பால் வழியாக கல்சியம் கூடுதலாக குழந்தைக்கு போவதால் அதை ஈடுசெய்ய இது மிகவும் அவசியம்.

மேலும் பத்தியக்கறியில் அவரைப் பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு வாழைப்பிஞ்சு, வெள்ளைப்பூடு, பெருங்காயம் வெந்தயம் என்பனவும் செவ்வாழைப் பழம், நேந்திரப்பழம், பனங்கட்டி என்பனவும் அதிகள வில் இடம்பெறுகின்றன. இவை தாய்ப்பாலை அதிகம் சுரக்க உதவும். கைக்குத்தல் புழுங்கலலரிசிச் சோறே பெரும்பாலும் கொடுக்கப்படும். (அதற்காக வீட்டி லுள்ள பாட்டிமார் பிரசவகாலம் நெருங்கும்போது பழந்நெல்லு அவித்துக் காயவைத்து குற்றிப்புடைத்து அரிசியாக்கி வைத்துக் கொள்வதைக் காணலாம்)

பிரசவித்த பெண்களின் கருப்பைப் புண்கள் ஆற வும், வயிற்றுநோ மாறவும், கருப்பை அழுக்குகள் வெளியேறவும், பசி எடுப்பதற்கும், புஷ்டியை ஏற் படுத்துவதற்காகவும் என சாரய ஊறல் பருகக் கொடுக்கும் வழக்கமும் எமது மக்களிடையே காணப் படுகிறது. இது பிரசவத்தின் பின்னர் குளிர்சன்னி (Puerperal Sepsis) ஏற்படாமல் தடுக்க உதவு வதாகவும் நம்பப்படுகிறது.

சாராய ஊறலில் 21 சரக்குகள், 27 சரக்குகள், 36 சரக்குகள் என்று சிறுவித்தியாசத்துடன் சரக்குகள் இடம்பெறுகின்றன. அதில் இடம்பெறும் சரக்குகள் மருத்துவ மூலிகைகளாக அமைந்துள்ள போதிலும் சாராய ஊறலானது சித்தமருத்துவ நூல்களில் இடம்பெற்றில்லை. இது குடும்ப வழக்கமாக மரபு வழியாக எமது மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.



உதாரணமாக, 21 சரக்குகள் வருமாறு:- சாதிக் காய், காரம்பு, ஏலம், வசுவாசி, கறுவா, திப்பலி, வெந்தயம், சீரகம், இலவங்கம், உள்ளி, கோட்டம், மதுரம், மல்லி, சிறுநாகம்பூ குங்குமப்பூ, வால்மிளகு, கற்கடச்சிங்கி, சிறுதேக்கு, ஓமம், மிளகு, வாய்விடங்கம் என்பனவாகும். இவை ஒவ்வொன்றும் 5 கிராம் அளவில் எடுத்து, இடித்து அரித்து 2 போத்தல் சாராயத்தில் ஊறப்போட்டு, சேறான நிலத் தில் அல்லது நெல்லினுள் இரண்டு மாதம் வரை புதைத்து வைத்திருந்து எடுத்து குழந்தை பிறந்த வுடன் அல்லது பிறந்த 2, 3 நாட்களுக்குப்பின் 1 தேக்கரண்டி வீதம் தினம் ஒரு வேளையாக 31 நாள்வரைக்கும் கொடுப்பர்.

மற்றொரு முறையிலுள்ள சரக்குகள் விபரம் வருமாறு:- சுக்கு, மிளகு, திப்பலி, கடுக்காய், நெல்லிக் காய், தான்றிக்காய், நற்சீரகம், பெருஞ்சீரகம், வாய் விடங்கம், கடுகுரோகிணி, வெண்கோட்டம், அக்கரா காரம், கறுவா, ஏலம், கராம்பு, இலவங்கப்பட்டை, சாதிக்காய், வசுவாசி, திப்பலிமூலம், குரோசாணி ஓமம், குளவிந்த மஞ்சள், வால்மிளகு, மாயாக்காய், அதிவிடயம், சித்தரத்தை, அதிமதுரம், மல்லி இவை ஒவ்வொன்றும் 5 கிராம் வீதம் எடுத்து முன் போலவே தயாரிக்கப்படும்.

பிராமணக்குடும்பங்களில் சாராயத்துக்குப் பதி லாக பனங்கட்டி, நெய், தேன் என்பன சேர்த்து லேகியமாகக் கிண்டி (பிரசவலேகியம்) கொட்டைப் பாக்குப் பிரமாணம் காலை, மாலை கொடுத்து வருவர்.

இங்ஙனம் சரக்கு, காயம், லேகியம் என்பன கொடுக்கம் போது அவற்றில் மிகுதியாக நல்லெண்ணெய் அல்லது நெய் முதலியன சேர்வதால் பிரசவித்த பெண்கள் நீர் பருகும் வழக்கம் மிகக் குறைவாகவே உள்ளது. இத்தகைய **'பத்திய உணவு'** முறையுடன் அதிக நீரருந்தினால் அருவருப்பு, ஓங்காளம், சத்தி என்பவற்றை ஏற்படுத்தும் என்ற அச்சமே இதற்கு முக்கிய காரணமாகும். சிலர் அதிக நீரருந்தினால் **'வயிறு பெருக்கும்'** என்ற பிழையான கருத்தினால் நீர்பருகுவதைத் தவிர்ப்பர். வீட்டிலுள்ள வயதானவர்களும் நீர் அருந்துவதை ஊக்குவிப்பதில்லை. ஆனால், பாலூட்டும் தாய்மார்கள் எவ்வளவுக்கெவ்வளவு திரவ உணவு அல்லது நீரருந்துகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது.

அடுத்து, பிரசவித்த பெண்ணின் உணவு முறையுடன் அவளின் குளிப்பும் முக்கிய இடம்பெறுகிறது. 3, 5, 7 ஆம் நாட்களில் குறித்த மூலிகை, பட்டைகள், இலைகள் என்பவற்றை அவித்துக் குளிக்க வார்ப்பர். அதனால் கருப்பை வலுவடைவதுடன் அழுக்குகள் நீங்கி தாய்ப்பாலும் அதிகம் சுரக்க வாய்ப்பேற்படுகிறது.

"வேம்பாடாதோடையே மாவிலங்கையே நொச்சியொன்றிற்
காம்பிலை நீரிற்காய்ச்சிக் கருத்துடன் குளித்து மஞ்சள்
சோம்பற வயிற்றின் மார்பிற் றுகளிலா வகையே பூசி
ஆம் வகை குளித்துப் பத்து நாளுமங் ககன்ற பின்னர்"

(இ.செ.வை.வி)



என்று இருபாலைச் செட்டியார் மூலிகைக்குளிப்பு பற்றி எடுத்துரைத்துள்ளார். பிள்ளை ஆமணக்கிலை (சிற்றாமணக்கிலை), ஆடாதோடையிலை, மாவிலங்கம்பட்டை, வேப்பம்பட்டை, கருநொச்சியிலை, பருத்தியிலை என்பவற்றை அவித்து அந்த நீரைக் கொண்டு குளிக்க வார்ப்பர். அத்துடன் அவ்விதம் குளிக்க வார்க்கும்போது மேற்படி இலைகளால் அழுத்தித்தேய்த்து உரஞ்சி ஒத்தடமும் கொடுப்பார். இவ்விதம் குளிக்க முன்னர் வேப்பம்பட்டை அவித்த நீரைச் சிறிது பருகக்கொடுப்பர். இது துவாலையை அதிகம் வெளியேற்றி கருப்பையிலுள்ள எஞ்சிய அழுக்குகளை வெளியேற்றுகிறது.

| |
|---|
| மூலிகைக் குளிப்பானது மார்பகத்துக்கு ஒத்தடமாக அமைந்து, மார்பக இரத்த ஓட்டத்தைச் சீராக்கி தாய்ப்பால் சுரப்பதையும் அதிகரிக்கச் செய்யும். |

இத்தகைய பழக்க வழக்கங்களுடன் பாலூட்டும் தாய்மார்கள் கர்ப்ப காலத்தில் கடைப்பிடித்து வந்த உணவு முறைகளையே தொடர்ந்தும் பின்பற்றி வருவர்.

### உ) மாதவிடாய் நின்று போகுங்காலத்தில் பெண்களின் உணவு

எமது சமூகத்தில் உணவு விடயத்தில் பெண்கள் சரிவரக் கவனிக்கப்படாத இடம் ஒன்று உண்டென்றால் அது மாதவிடாய் நின்று போகுங் காலமாகும்.

இக்காலத்தில் பெண்ணானவள் பலவித உடல், உளத் தாக்கங்களுக்கு ஆளாகிறாள். பிள்ளைகள் வளர்ந் திருந்தால் அவர்களின் படிப்பு, திருமணம், வேலை போன்ற விடயங்களில் அக்கறையும் கவலையும் ஏற்படுகிறது. கணவனுக்கும் தனக்குமிடையிலான " உறவு" பற்றிய பயமும் ஏற்படுகிறது. இவையெல்லாம் ஒருமிக்கச் சேரும்போது அவளுக்குத் தன் உணவில் அசிரத்தை ஏற்படுகிறது. சிலவேளைகளில் கணவனும், பிள்ளைகளும் தன்னைப் புறக்கணிக்கிறார்களோ என்ற அச்சங்கூட அவளுக்கு ஏற்படலாம். எனவே, மற்றவர்கள் அவளின் உடல், மனநிலைகளைப் புரிந்து கொண்டு ஒத்தாசையாக இருப்பதுடன் அவளின் உணவு விடயங்களிலும் அக்கறை செலுத்துவது அவசியமாகும். இது வரை காலமும் கணவன், பிள்ளைகளை அவள் கருத்துடன் உணவூட்டிப் பராமரித்தாள் எனில், இக்காலத்தில் கணவனும் பிள்ளைகளும் அவளைக் கருத்துடன் கவனித்துக் கொள்ளல் வேண்டும். பருவமடைதல், திருமணம், குழந்தைப்பேறு பொன்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தி லும் பெண்களின் உணவு விடயத்தில் விசேடகவனம் செலுத்தியுள்ள எமது சமூகம் இச்சந்தர்ப்பத்தில் மட்டும் ஏனோ தானோ என்று விட்டிருப்பது வியப்பாக உள்ளது.

**ஊ) வயதான பெண்களின (பாட்டிமாரின்) உணவு**

வயதான பாட்டிமாரின் உணவு மட்டுமன்றித் தாத்தாமாரின் உணவு பற்றியும் இங்கு கவனத் திற் கொள்ளலாம், வயோதிபர்களின் உணவுவிடயத் தில் முன்பு அதிக அளவில் அக்கறை செலுத்தப் பட்டுள்ளது. வயோதிபருக்கு புழுக்கொடியலை எவ் வாறு சத்துணவாகப் பயன்படுத்தலாம் என்பது பற்றி சோமசுந்தரப் புலவர் பின்வருமாறு பாடியுள்ளார்.

"பல்லில்லாத கிழவருக்கும் - மற்றும்
பலருக்குமுணவாகும் ஒருமுறை சொல்வேன்
மெல்லிய ஒடியல் முறித்து - ஊரலில்
விட்டே யிடித்து பின் தெள்ளியெடுத்து
வெல்லமுந் துருவலு மொன்றாய்ச் - சேர்த்து
விரவிப் பிசைந்து விரும்பி யெடுத்தே
மெல்ல மெல்ல மென்று தின்னச் சுவை
மேவிடும் வீரியங் கூடுமென்றாரே'

அதாவது புழுக்கொடியலை இடித்து மாவாக்கி, அரித்து எடுத்து அதற்குச் சிறிது தேங்காய்ப் பூவும், சர்க்கரையும் அல்லது சீனியும் சேர்த்துக் குழைத்து உண்ணச் சுவையாக இருக்கும். உடல் வன்மையும் கூடும். இவ்விதமே உழுந்து, பயறு அரிசி என்பவற்றை வறுத்துத் மாவாகத் திரித்து தேங்காய்ப்பூ, சர்க்கரை சேர்த்து "சத்துமா" வாக உண்பர். தற்போதுள்ள திரிபோஷா, ஜீவாகாரம் என்பனவும் பெரியவர்களுக்குகந்த சத்துணவுகளாம்.

ஆனால் தற்போது வயோதிபர்களைப் பரா மரிப்பது என்பது அனேக குடும்பங்களில் சர்ச்சை களைத் தோற்றுவிப்பதாகவே காணப்படுகிறது. உடல் தளர்ந்தும், வலுவிழந்தும், பற்கள் ஆடியும் அல்லது விழுந்தும், உடம்பு கூனியும், கடைவாயில்,

எச்சில் ஒருபுறம் வழிய கைகால் நடுங்கியபடி, சாப்பிட அள்ளிய உணவும் சிந்திச் சிதறுண்டு போக பரி தாபமாக விழிக்கும் பெரியவர்களையும் எம்மத்தியில் காண்கிறோம் **'செத்துப் போகிற கிழத்துக்கு இனி என்ன சாப்பாடு?'** என்ற அங்கலாய்ப்பையும் **'காவோலை விழக் குருத்தோலை சிரிக்கிறது'** என்ற ஆற்றாமையு டனான பதில் வெளிவருவதையும் சில இடங்களில் காணமுடிகிறது.

இவ்வயோதிபர்களுக்குப் பாணும், ரொட்டியும், பிட்டும் மற்றும் கடின ஆகாரங்களுமே பெரும்பாலும் கொடுக்கப்படுகின்றன.(வயோதிபர் இல்லங்களில் வாழும் முதியோர் பலர் தமக்குக் காலை மாலை உணவாகக் கொடுக்கப்படும் பாண் துண்டை உண்ண முடியாமல் தவிப்பதை நேரில் கண்டு கொள்ளலாம்.) சில வேளைகளில் வேலைப்பளு காரணமாகவும், பல வேளைகளில் அக்கறையின்மை யாலும், வசதியின்மையாலும் பெரும்பாலான இடங் களில் வயோதிபரின் உணவு விடயத்தில் தனிக் கவனம் செலுத்தப்படுவதில்லை.

| |
|---|
| எமது மக்களின் பாரம்பரிய உணவுகளான கூழும் களியும், பழஞ்சோற்றுத் தண்ணீரும், நீர் மோரும், கஞ்சியும் வயோதிபர்கள் உண்பதற்கு இலகுவான உணவுகளாம். அவை இலகுவில் செமிக்கும். சத்துணவாகவும் அமையும். காய் கறிகளைச் சூப் செய்து அல்லது இலைக்கஞ்சி செய்து கொடுப்பதும் உகந்தது. |



தற்போதைய போர்ச்சூழலில் குடும்பங்கள் சிதறிப் போதல், பிள்ளைகள் வெளிநாடுகளுக்குப் புகலிடம் தேடிப்போதல், பிள்ளைகள் இறத்தல், காணாமற்போதல் போன்ற காரணங்களால் எமது பிரதேசத்தில் முதியோர்களிற்பலர் ஆதரவற்ற நிலை யில் வீடுகளிலும், அகதிமுகாங்களிலும் தெருவோரங் களிலும் தனித்து வாழவேண்டிய நிலையிலுள்ளனர். இவர்களின் உணவு விடயத்தில் அக்கறை கொள் வோர் எவருமிலர். இந்நிலையில் இவர்களிற் பலர் போசாக்கின்மையால் வருந்துவதுடன் உளத்தாக்கங் களாலும் வருந்துகின்றனர். குடும்ப, சமூகக் கட்ட மைப்புகளய் சிதைவடைந்து வருவதால் முதியோர் இல்லங்கள் பல அமைக்கப்பட வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. தம்மை வளர்த்து ஆளாக்கியவர்களை இவ்விதம் உணவோ, ஆதரவோ இன்றி அனாதை களாக விட்டுவைப்பது சரியாகுமோ என்பதை யாவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

# உதவிய நூல்கள்

## தமிழ்நூல்கள்

1. *பரராசசேகரம் (இரண்டாம் பாகம்) கெர்ப்பரோக நிதானம்*
பதிப்பாசிரியர். ஐ. பொன்னையா
ஏழாலை திருஞான சம்பந்தர் அச்சுயந்திரசாலை. 1932.

2. *செகராசசேகர வைத்தியம்*
பதிப்பாசிரியர் ச. தம்பிமுத்துப்பிள்ளை
அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை. 1932

3. *அங்காதி பாதம்*
பதிப்பாசிரியர் ஐ. பொன்னையா. 1936

4. *சித்தமருத்துவ சிகிச்சைக்கிரமம்*
டாக்டர் V. முத்தையா ஜோன் 1972

5. *பிரசவ வைத்தியம்*
G.W. அ. சுப்பிரமணியபிள்ளை
அச்சுவேலி இயந்திரசாலை, 1892

6. *வைத்தியன் மாத சஞ்சிகைகள்*
அகில இலங்கைச் சித்த ஆயுள்வேதச் சங்க வெளியீடு
1950 - 1951

7. *யாழ்ப்பாண மக்களின் சைவ உணவும் பழக்க வழக்கங்கள்*
சே. சிவசண்முகராஜா
சித்தமருத்துவ வளர்ச்சிக்கழகம். 2002

8. *மகப்பேறும் மகளிர் மருத்துவமும் ஓர் அறிவியல் நூல்*
செ. ஆனைமுகன் - 2003

9. *பதினெண் சித்தர் நாடி சாத்திரம்*

10. *கரு உற்பத்தியும் வளர்ச்சியும்*
டாக்டர் கோ. துரைராசன்





11. Obstetrics by Ten Teachers
*Edward Arnold.* 14th edition, 1985

12. Text Book of Obstetrical Nursing
*Catherine l. Whittier M.D and Delight Hiliard Hutcheson,* R.N Published by N.R Brothers
3rd edition, 1990

13. Notes on Obstetrics- *R.K. Sachdeva*
Jaypee Brothers, New Delhi. 4th edition, 1987

14. Shaw's Textbook of Gynaecology
*B. T. Churchill Livingstone* Pvt. ltd New Delhi
11th edition, 1997

15. Text Book of Gynaecology *D.C. Dutta*
New Central Book Agncy (P) ltd. Culcutta.
2nd edition, 1994

16. Essentials of Human Embryology
*Asim Kumardatta* Current Books Intrenational Culcutta, Bombay, Madras. 3rd edition, 1995.

7. Technical guide on Management of Emergency Obstetric Care at Peripheral Hospitals.
SriLanka College of Obstetricians and Gynaecologist in Collaboration with UNICEF Colombo and Family Health Bureau Ministry of Health
2001

# ஆசிரியரின் நூல்கள்

1. ஈழத்துச் சித்தமருத்துவ நூல்கள் ஓர் அறிமுகம்
   *(அரச சாகித்திய மண்டலப்பரிசு, கொழும்பு தமிழ்ச் சங்கப் பரிசு பெற்ற நூல்)*
2. சுதேச மருத்துவ மூலிகைக் கையகராதி
   *(அரச கரும மொழித்திணைக்களப் பரிசு பெற்ற நூல்)*
3. உள நெருக்கீடுகளும் மனநலனும்
4. கட்டு வைத்தியம்
5. இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்தமருத்துவம்
6. பிள்ளைப் பிணிமருத்துவம் - கைநூல்
7. சித்த மருந்தியலும் மருந்தாக்கவியலும்
8. சித்த மருத்துவ மூல தத்துவம்
   *(வட கிழக்கு மாகாணசபையின் உயர்கல்விக்கான விருது பெற்ற நூல்)*
9. யாழ்ப்பாண மக்களின் சைவ உணவுப்பழக்கவழக்கங்கள்
10. மூலிகைகள் ஓர் அறிமுகம்
11. மூலிகை உணவு மருத்துவம்
12. யோகாசனமும் உடல் நலமும்
13. Common Drugs in Siddha Pediatrics
14. இந்து ஆலயங்களில் மருத்துவ சுகாதாரம்
15. மருத்துவமும் சோதிடமும்
16. இந்து விரதங்களும் உடல் நலமும்
17. சித்த மருத்துவ வாகடம்
18. சித்தமருத்துவ மகப்பேற்றியலும் மகளிர் மருத்துவமும்



சித்தமருத்துவ கலாநிதி சே. சிவசண்முகராஜா M.D(S) அவர்கள் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவம் கற்று ஐந்து வருடங்களும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்.

தமிழ்நாடு டாக்டர் எம். ஜீ. ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் சித்தமருத்துவ பீடத்தில் பயின்று குழந்தை மருத்துவத்துறையில் M.D பட்டம் பெற்ற முதல் இலங்கையர் என்ற பெருமைக்குரியவர். குழந்தை மருத்துவத்துடன் மகப் பேற்றியல், மகளிர் மருத்துவத் துறையிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்.

இருபதுக்கும் மேற்பட்ட நூல்களையும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இவரது படைப்புகளுக்கு இலங்கை சாகித்திய மண்டலம் அரச கருமமொழித் திணைக்களம், வட கீழ் மாகாண சபையின் கலாசார பண்பாடு அலுவல்கள் அமைச்சின் பரிசுகள் கிடைத்துள்ளன.

பரராசசேகரம் கெர்ப்பரோக நிதானத்தைத் தழுவி "சித்த மருத்துவ மகப்பேற்றியலும், மகளிர் மருத்துவமும்" என்ற இவ்வாய்வு நூலை எழுதியுள்ளார்.

ஆசிரியரின் சித்த மருத்துவ படைப்புகளில் இதுவும் ஓர் மைல்கல்லாகும்.

**அ. தற்பரானந்தன்**

*Bharathi Pathippakam, 430, K. K.S. Road, Jaffna.*